# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை-I | மாசி—1925 | காசு-11


## இந்தப் பத்திரிகை

### சந்தாதாரருக்கு ஒரு வேண்டுகோள்

இது 11-வது சஞ்சிகை; அடுத்த மாதத்தோடு முதல் வருஷம் முடிவாகும். அடுத்த ஆண்டு முதல் (சித்திரை-ஏப்பிரல் 1925 முதல்), பத்திரிகையின் அளவு, டெம்மியிலிருந்து ராயலாகப் பெரிதாக்கப்படும்; அதுவுமன்றி, வரிகளின் ஊடே இடம் விட்டு, வாசிக்கச் சௌகரியமாய், அழகாய், அச்சிடப்படும்; ஆயினும், பக்கங்கள் மட்டும், இப்பொழுது போலவே, 80 க்குக் குறையாமலேயிருக்கும். இப்படிச் செய்யத் துணிவது, இந்த வருஷம் கிடைத்த இலாபத்தினாலில்லை. இப்படிச்செய்தால் அடுத்த வருஷமேனும் நஷ்டம் வாராமலிருக்கலாமென்ற ஆசைதான். இது முதலாண்டானதால், இலாப நஷ்டத்தைப் பாராட்டாமல், இன்னும் சிறிது முயன்று பார்க்கத் துணிந்திருக்கிறேன். பத்திரிகையின் முதல் வருஷத்தில் என் முயற்சிக்குப் பேருதவி செய்த சந்தாதாரர்கள் எல்லோருக்கும் (அவர்க்குள் விசேஷ உதவி செய்தவர், எட்டையாபுரம் இராஜா அவர்களும், ஸ்ரீமான்கள் அல்லாடி கிருஷ்ணஸ்வாமி ஐயர், எஸ். ஸ்ரீனிவாசையங்கார் அவர்களுமாவர்), கைம்மாறின்றி விஷயதானஞ் செய்த அறிவாளர் பலருக்கும், எனது மனப்பூர்வமான வந்தனங்கள் உரியன. அடுத்த ஆண்டிலும் உதவி செய்யுமாறு இவர்கள் அனைவரையும் வேண்டுகிறேன். இது நிற்க: அடுத்த ஆண்டு முதல் சில சீர் திருத்தங்கள் செய்வதைப்பற்றி, சந்தா நேயர்களின் அபிப்பிராயத்தைக் கோருகிறேன். அவர்களில்

இருவர், பத்திரிகையின் சந்தாத் தொகை (ரூ. 5) அதிக மென்றும், வேறு சில பத்திரிகைகள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன என்றும், எனக்கு எழுதியிருக்கின்றனர். நமது நாட்டின் ஏழைமையையும், மிகப் பலர் இப்பத்திரிகையை வாங்கிப் படித்துப் பயன் பெற வேண்டுமென்ற முதல் நோக்கத்தையும் கருதி, அடுத்த வருஷ முதல், சந்தாத் தொகையைச் சிறிது குறைக்க லாமென் றெண்ணுகிறேன். அப்படிச் செய்தால், இந்த ஆண்டினும் அதிகப் பேர் சந்தாதாராவதால், இப்பொழுதினும் அதிக நஷ்டம் ஏற்பட்டு விடாதென்பது நம்பிக்கை. சில ஆப்தநண்பர்கள், இந்த நம்பிக்கை யில்லாதவராய், இதைத் தடுக்கின்றனர். சந்தா நேயர்களின் அபிப்பிராயத்தை வேண்டும் விஷயம் இஃதொன்று.

வாசகர் சிலர், இப்பொழுது பத்திரிகையின் விஷயங்கள் பளுவா யிருக்கின்றன என்றும், இன்னும் எளிய நடையில் கதைகள் முதலியவற்றை அதிகஞ் சேர்த்து, பளுவான விஷயங்களைக் குறைத்து, பத்திரிகையை இலேசாக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகின்றனர். தேசபக்தியையும் அறிவையும் வளர்ப்பதே என் முக்கிய நோக்கம். ஆதலால், அரிய பெரிய விஷயங்களை விட்டுக் கதைகளைப் பெருக்கத் தியங்குகிறேன்; ஆயினும், சுவரை வைத்துக்கொண்டே சித்திர மெழுதவேண்டும் என்பதை நினைந்து, அப்படிச் செய்தால்தான் மிகப் பலர் வாங்கி வாசிப்பர் என்றிருந்தால், அப்படியே செய்யச் சித்தமாயிருக்கிறேன். இவற்றை யெல்லாம் உத்தேசித்து, சந்தாதாரர்களும் வாசகர்களும், என்மீது கிருபை கூர்ந்து, பின் வரும் 3 கேள்விகளுக்கும் உடனே பதிலெழுதி யனுப்ப வேண்டுகிறேன் :—(1) வருஷச் சந்தாவைக் குறைக்கலாமா? ஆயின், எவ்வளவுக்குக் குறைக்கலாம்?

(2) பத்திரிகை பொதுஜனங்களின் பிரியத்தை அடையும்படி செய்ய (a) இப்பொழுதினும் அதிகமாகக் கதைகளையும் இலேசான விஷயங்களையும் வெளியிடலாமா? (b) வேறென்ன உபாயங்கள் செய்யலாம்?

(3) அடுத்த (கடைசி மாதமாகிய பங்குனி மாதத்து) சஞ்சிகையை, (இப்பொழுதுள்ளபடி ரூ. 5, அல்லது, அதனினும் குறைந்த) ஒரு வருஷச் சந்தாத் தொகைக்குத் தங்களுக்கு வி. பி. போஸ்டில் அனுப்பலாமா? அல்லது தாங்கள் தொகையை மணியார்டர் செய்கிறீர்களா?

அ. மாதவையர்.

893

# இந்தியர் வெளிநாடேறுதல்

(716-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பத்தித்திராதிபர்

## III. தாய் நாட்டு இந்தியரின் கடமை

எமது சகோதரர் சகோதரிகள் குடியேறிய நாடுகளில் படும் கஷ்ட நிஷ்டூரங்களைப்பற்றி இன்னும் அதிகம் கூற வேண்டுவதில்லை. நாள் தப்பாமல் தினசரிப் பத்திரிகைகள் அவற்றை வெளியிட்டு முறையிடுகின்றன. குடியேற்ற நாடுகளிலிருந்து தாய் நாட்டுக்குத் திரும்பி வந்துள்ளவர்களை நேரில் தெரிந்தவர், பத்திரிகைகளை மட்டும் வாசிப்பவரை விட, அவற்றை நன்கறிவர். இவ்வண்ணம் வெளிநாடுகளுக்கு ஜீவனோபாய நிமித்தம் சென்றுள்ள இந்தியர்கள் எத்தனை பேர் என்பதைப் பலர் விவரமாய் அறிந்திரார். இந்தக் கணக்கு எளிதில் அகப்படுவது மன்று. என்னுலியன்றவரை ஆராய்ந்து பார்த்துத் தயார்செய்த கணக்கை, இதன் கீழே வரைந்திருக்கிறேன். டச்சு ஈஸ்டிந்திய தீவுகளெனப்படும் சுமாத்ரா, ஜாவா போர்னியோ, ஸெலிபீஸ், பலி முதலிய இடங்களி லுள்ள இந்தியரின் தொகை விவரம் அகப்படவில்லை. அதை யறிந்தவர் எவரேனும் தெரிவித்தால் பிரசுரஞ் செய்கிறேன். அவர் நீங்கலாக, பொதுவாகப் பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்ட, பின்வரும் பட்டியில் குறிப்பிட்ட, குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியரின் மொத்தத் தொகைமட்டும், 16 லக்ஷத்துக்கு மேலாகின்றது, இவர்களில், எத்தனை பேர் இந்தியாவிலிருந்து சென்று திரும்புபவர்; எத்தனை பேர் பல வருஷங்க

ளுக்குமுன் சென்று அந்நாடுகளில் குடியேறின இந்தியர் களுக்கு, அந்நாடுகளிலேயே பிறந்து வளர்ந்து பெருகி, அந்நாடுகளையே தம் தாய் நாடுகளாகக் கொண்டு வாழ்ப வர் என்பது துல்லியமாய்த் தெரியாது.

| குடியேற்ற நாட்டின் பெயர் | விஸ்தீர ணம்—சதுர மைல் | மொத்த ஜனத் தொகை | மொத்தமுள்ள ஜனங்களில் ஐரோப்பியர் | மொத்தமுள்ள ஜனங்களில் இந்தியர் தொகை |
|---|---|---|---|---|
| கானடா ... | 3,729,665 | 8,950,884 | 8,787,998 | 1200 |
| ஆஸ்திரேலியா ... | 2,974,581 | 5,715,018 | 5,436,794 | 2000 |
| ந்யூஜிலந்து | 104,910 | 1,378,139 | 1,320,275 | 600 |
| தென் ஆபிரிக்கா ... | 473,089 | 6,928,580 | 1,519,488 | 161,749 |
| ஐக்கிய மாகாணங்கள் | | | | |
| நன்னம்பிக்கை முனை | | | | 6,000 |
| நேட்டால் | | | | 1,41,649 |
| டிரான்ஸ்வால் | | | | 14,000 |
| ஆரஞ்ச்ப்ரீஸ்டேட் | | | | 100 |
| தென்மேற்கு ப்ரதேசம் | 322,400 | 227,762 | 19,432 | 30 |
| தங்கநாயிகா ... | 365,000 | 4,124,438 | 2447 | 9411 |
| பிரிட்டிஷ் கயானா | 89,480 | 307,691 | | 124,388 |
| மலேயா நாடுகள்... | 27,506 | 1,324,890 | 5686<br>3204 | 309,219 |
| ஜெமைகா ... | 4431 | 858,188 | 14476 | 18610 |
| மோரீசு ... | 720 | 385,074 | | 265,884 |
| Straits Settlements ... (சிங்கப்பூர், பினங், மலாக்கா) ... | 1600 | 907,366 | 8149<br>9138 | 94,213 |
| இலங்கை ... | 25,332 | 4,498,605 | 8099<br>29403 | 602,510 |
| கெனியா ... | 245,000 | 2,376,000 | 9651 | 22,822 |

இந்த 16 லக்ஷம் பேரில், 6 லக்ஷம் இலங்கையிலும், 3 லக்ஷம் மலேயா நாடுகளிலும், $1\frac{1}{2}$ லக்ஷம் நேட்டாலிலும்,

2½ லக்ஷத்துக்கு மேல் மோரிசிலும், 1¼ லக்ஷம் பிரிட்டிஷ் கயானாவிலும், பாக்கியுள்ள 1¼ லக்ஷம் பேரே இதர குடியேற்ற நாடுகளிலும் இருக்கின்றனர். இக்கணக்கில், சென்னை ராஜதானியிலிருந்து ஆஸாம் தேயிலைத் தோட்டங்கள் சென்று சீரழிந்து அவதிப்படும் கூலியாட்கள் சேர்க்கப்படவில்லை.

இவ்விஷயத்தில், தாய்நாட்டிந்தியரின் கடமைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக் கூறலாம் : (1) ஆதியில் சென்று குடியேறிய இந்தியருக்குப் பிறந்து, குடியேற்ற வெளிநாடுகளையே இப்பொழுது ஜனன பூமியாய்க் கொண்டுள்ளவர்க்குச் செலுத்தவேண்டிய கடமை. (2) இந்தியாவையே தாய்நாடாகப் பாவித்து, ஜீவனோபாயத்தின் பொருட்டு வெளிச் சென்று வேலைசெய்து வரும் இந்தியருக்குச் செலுத்தவேண்டிய கடமை. (3) இன்னும் இந்தியாவிலிருந்து ஜீவனோபாய நிமித்தம் வெளிநாடேறிக்கொண்டும், ஏறச் சித்தமாயு மிருக்கும் இந்தியர்க்குச் செலுத்த வேண்டிய கடமை.

முதலாவது.—இவ்வகுப்பினர் பெரும்பாலும் ஏழைகளாயும், தாம் வாழும் குடியேற்ற நாடுகளில் அதிகச் செல்வாக் கில்லாதவராயும் இருக்கின்றனர். இவர்களுக்குள்ள கல்விப் பயிற்சியும் மட்டமே. அறிவுக்குறைவால் சுகாதார முறைகளை நன்கு பாராட்டாமலும், தன் மானம் தன் மரியாதைகளைப் பேணிக் காக்க முடியாமலும், கூலி வேலையோ உபாய வியாபாரமோ செய்து தேடிய சிறிது பொருளைக்கொண்டு எவ்வாறோ வயிறு கழுவிப்பிழைத்தும் இவர்கள் வாழ்வதினாலேயே, அந்நாடுகளிலுள்ள ஐரோப்பியர்கள், இவர்களுக்குரிய சுதந்திரங்களை மறுத்து, இவர்களைக் காட்டுமனிதர்களைப் போல மதித்து, இழிவாக நடத்துகிறார்கள். [ஐரோப்பியர்களுக்குப் பொதுவாயுள்ள ஒரு சுபாவம் இங்கே கவனிக்கத் தக்கது : அவர்கள், தமக்குச் சமானமானவராக மதிக்கும் பிறரிடம் காட்டும் மரியாதையும், அவர்கள் விஷயத்தில் பாராட்டும் நியாய முறையும், ஒழுங்குகளும், ஒரு விதம் ; தமக்குக் கீழான வராக மதிக்கும் பிறரிடத்தில் நடந்துகொள்ளுவது வேறு விதம் - அதாவது, நியாயம் அநியாயம், சரி தவறு, என்பதைக் கருதித் தம் ஒழுக்கத்தை அந்த முறைப்படி சீர் திருத்திக் கொள்ளாமல், பிறர் பலாபலத்தையும் அந்தஸ்தையும் மதித்து, அதற் கேற்றபடியே தாம் நடந்து கொள்வர்; இதனால், சில வேளைகளில், சில அம்சங்களில்,

மகா சத்தியசந்தராயும் ஒழுக்க சிலராயும் அவர்களுக்குள் காணுபவரே, வேறு சில சந்தர்ப்பங்களில், நியாயத்தையே கவனியாது அக்கிரமஞ் செய்யும் மூர்க்கராகக் காணுவர். இந்த விந்தையான துர்க்குணத்தை, ஐரோப்பியர்க்குள் மகாபுத்திமான்கள், மேதாவிகள் என்று விளங்கும் பெரியோர் பலரிடத்திலுமே காணலா மாயின், குடியேற்ற நாடுகளில் போய்வாழும் தன்காரியக்குட்டிகளான மூன்றாம்தர நாலாந்தர ஐரோப்பியர் இவ்வாறொழுகுவது வியப்பன்றே.] இவ்வகுப்பினர்க்குச் செய்தற்குரிய முதல் உதவியாதெனில், அவர்கள் படிப்பையும் நாகரிகத்தையும் விருத்தி செய்வதற்கு வேண்டிய வழிகளைத் தேடி, அவர்கள் வாழ்க்கை நிலைமையையும் குறிக்கோளையும் உயர்த்த வேண்டும். ஐரோப்பியருடன் சமசுதந்திரங்களைப் பெறவும், அவற்றைச் செம்மையாய்ப் பரிபாலித்து அநுபவிக்கவும், சுகாதாரம் முதலிய அம்சங்களில் ஐரோப்பியர் இகழுதற்குக் காரணமின்றி மேன்மையாய் நடந்து கொள்ளவும், இவர்களைப் பயிற்ற வேண்டும். இதுவுமன்றி, இவர்கள ஏழை இந்தியரே என்று ஐரோப்பியர் அவமதியாவாறு, இந்தியர் கவர்ன்மெண்டார், பிரிட்டிஷ் பாராளுமன்றம் மூலமாக, இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்,

இரண்டாவது.—தாய் நாட்டிந்தியர் வெளி நாடுகளில் வேலை செய்து பிழைத்து வருவோருக்கு, நாம் செய்தற்குரிய உதவி இருவகையாம் (1) குடியேற்ற நாடுகளை விட்டு இந்தியாவுக்குத் திரும்பி வர மனப்பூர்வமான விருப்பமுள்ளவர்களுக்கு, தாம் சம்பாதித்துள்ள சகல பொருள்களோடு, வேறு செலவின்றி, அப்படித் திரும்பிவருதற்கு வேண்டிய வாறு சௌகரிப்படுத்துவதுமன்றி, இந்தியா வந்த பின், அவர்கள், அவரவர்க் கியன்ற தொழில்களைச் செய்து, உழைப்புக்குத் தக்க கூலி பெற்று, இந்நாட்டிலேயே வாழுதற்கு வேண்டிய சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டும். வேலை செய்யும் திறமையும் விருப்பமும் உள்ள எவரும், வேலையின்றித் தவிப்பதோ, செய்த வேலைக்குப் போதுமான கூலி பெறாது தவிப்பதோ, கூடாது. தாய் நாட்டுக்குத் திரும்பி வர விரும்பாது குடியேற்ற நாடுகளிலேயே தங்க விரும்புவோருக்கு, முதலாவது வகுப்பினர்க்குச் செய்வது போலவே உதவி புரிய வேண்டும்.

மூன்றாவது.—இந்தியாவி லிருந்து வெளியேறும் ஜனங்கள் விஷயத்தில், நமது கடமை தெளிவானது: அதாவது,

ஓர் இந்தியனும் வெளியேறாது தடுப்பதே. நமது தேசத்திலே, எவ்வளவோ விசாலமான பிரதேசங்களும் காடுகளும், பண்படுத்தினால் பயனளிக்கக் காத்திருக்கின்றன; சுரங்கங்கள், தமது ஐசுவரியங்களைத் துருவி யாராய்ந்து பயன் படுத்துவாரின்றி, புதைந்து மறைந்து கிடக்கின்றன; கைத்தொழில்களோ, நாகரிகமும் ஜனசங்கையும் பெருகப் பெருகத் தாமும் பெருகிச் செழியாது, முன்னினும் குன்றி, மறந்து படுகின்றன. இப்படியிருக்க, வெண்ணெய் வீட்டிலிருக்க வெளிச்சென்று நெய்க்காக அலைவது போல், இந்தியன் ஒருவனேனும் ஜீவனோபாய நிமித்தம் பிறநாடேகும் அவசியம் இல்லை. நம்முடைய பூசாரங்களையும் கைத்தொழில்களையும் செவ்வனே நடத்த, இந்தப் பதினாறு லக்ஷம் பேரினும் இரட்டிப்பங்கு தொழிலாளிகள் இருந்தாலும் போதாது. இவ்வுண்மையையும்,

“புகழ் இன்றால், புத்தேள் நாட் டுய்யாதால், என் மற்று
இகழ்வார் பின் சென்று நிலை!”*

என்னும் திருக்குறள் வாக்கையும் மறந்து, மதியீனத்தால்தான் நம்மவர் வெளியேறும் படி நேருகின்றது.

இந்தியர் வெளி நாடேறும் விஷயத்தைப்பற்றி முன்னிரண்டு வியாசங்களிலும், இந்த வியாசத்தில் இதுவரையும் கூறினயாவும், நோயின் குறிகளையும், நோயைத்தணித்தற்கு அநுகூலமான சிகிச்சைகளையுமே தழுவினவாம்; எனவே, தற்கால சமனத்துக்குத் தக்க உபாயங்களேயாம். இவற்றைச் செவ்வனே நடத்துவதற்கு, இந்திய நாட்டாண்மைக்காரர் பலர் சபைகள் கூடி, சிறு கமிற்றிகளை ஏற்படுத்தி, இங்கே செய்தற் குரியனவற்றை இங்கே செய்தும், வெளிநாடுகளில் செய்தற்குரியன அந் நாடுகள் சென்று ஆராய்ந்து, அங்கே வேண்டும் ஏற்பாடுகளை நியமித்து நடத்தியும், உழைக்க வேண்டும். ஆயினும், ஆதிகாலத்திலே உலகெலாம் சென்று செல்வமும் செல்வாக்கும் சிறந்து விளங்கிய இந்தியரின் சந்ததியார், இந்நாளிலே மாத்திரம் இத்தகைய இன்னல்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாகித் தவிப்பதன் காரணமே, இந்நோயின் மூல காரணமுமாகு மாதலால், அதை

*இதன் பொருள்.—“தம்மை மதியாரை வழிபட்டு ஒழுகுவதினால் புகழுமில்லை, புண்ணியமு மில்லை; பின் அப்படிச்செய்வது ஏனோ!”—குறள் நானூறு (90-ம் பக்கம்) பஞ்சாமிர்தம் ஆபீசு—விலை 4 அணா.

யறிந்து, அதற்கு வேண்டிய சிகிச்சையைச் செய்தலே உத்தமமாம்.

“கொண்டவன் கூறு குலைத்தால், கண்டவரெல்லாம் கல்லெறிவர்” என்பது, நாடோடிப் பழமொழி. தம்முடைய தாய் நாட்டிலே தமக்குரிய பிறப்புரிமைகளைப் பறிகொடுத்து விட்டு, ஏவியது செய்து, இந்தியர் இழிவாய் வாழ்வதனால் தான், அவர்கள் சென்ற விடமெல்லாம் சீரும் சிறப்புமின்றி, இழிவுற்றுத் தவிக்கின்றனர். தாய்நாட்டில் தானே மதிப்பிழந்தவர் பிற நாடுகளில் மதிக்கப்படுவதெப்படி? இந்தியர் இந்தியாவிலே முழுச்சுயராஜ்யம் பெற்றாலன்றி, இந்நோய் முற்றும் தீராது. இந்தியர் சுயராஜ்யம் பெற்றுத் தம் நாட்டைத் தாமே பாதுகாத்துப் பரிபாலனஞ் செய்யத் தொடங்கி விட்டால், அவர்களில் சிலர் அயல் நாடேகும் அவசியமே அற்றுவிடும்; ஒருவேளை சிலர் வெளி நாடுகள் போனாலும், அங்குள்ளார் இவர்களை அவமதிக்கவும், அநியாயமாய் அக்கிரமமாய் நடத்தவும், ஒருக்காலும் துணியார். ஏனெனின், அப்படிச் செய்யும் ஐரோப்பியவர்க்கத்தினரை, இந்தியாவிலே தாமும் அவ்வண்ணமே நடத்திக் காட்டிப் புத்தி வருத்தும் வல்லமை, அப்பொழுது இந்தியருக்கு இருக்குமன்றோ? தம் நாட்டிலேயே நாயன் வேறாகவும் தாம் அடிமைகள் போலும் வாழ்பவர், பிற நாடுகளிலேயுள்ள தமது நாயன் வருக்கத்தாரோடு ஒத்த உரிமைகளைப் பெறுவது எப்படி? இந்தியாவிலுள்ள இந்தியப்பிரபுக்கள், இராஜாக்களுமே, ஐரோப்பிய வருக்கத்துச் சின்னஞ்சிறு அதிகாரிகளையும் கண்டு துடை நடுங்கும் போது, வயிறு வளர்ப்பதன் நிமித்தம் பிற நாடேகும் கூலி வேலைக்காரர்களும் ஏழைகளும், ஆங்குள்ள ஐரோப்பியரை அஞ்சாது, அவருடன் சமத்துவம் பெற்று வாழ்வதெப்படி? ஆகையால், இந்தியரின் முக்கிய வேலை இந்தியாவிலே தானிருக்கிறது. இது நிற்க:

இந்தியாவானது பலவளஞ் செறிந்தமிகப் பெருந் தேசமேயாயினும், இப்பொழுது வெளிநாடேறியுள்ள இந்தியர் அனைவரையும் தானே போஷிக்கும் சக்தி வாய்ந்த தேயாயினும், இந்திய ஜனப்பெருக்கக்த்தையும், உலக வழக்கிலே பிறநாட்டார் நடத்தையையும், இந்தியரில் 16 லக்ஷத்துக்கு மேற்பட்டவர் வெளிநாடுகளிலுள்ளார் என்னும் நியாயத்தையும் உத்தேசித்து, இந்தியர்க்கும் ஒரு குடியேற்ற நாடு அவசியமென்பர் ஒரு சாரார். இதை ஒப்புக்கொள்ளுதல் தவறாகாது. ஐரோப்பிய மகாயுத்

தத்திலே வெற்றியடைந்த கட்சியைச் சேர்ந்திருந்த நாட்டார் பலரும், வெற்றிக்குப் பிற்பாடு, தோற்ற கட்சியா ரிடமிருந்து பறித்துக் கொண்டவற்றைப் பங்கிட்டுக் கொள்ளும்பொழுது, இந்தியரைத் தவிர, மற்றெல்லோரும் புது நாடுகளையும் உரிமைகளையும் பெற்றனர். அந்த யுத்தத்திலே இந்தியர் செய்த உதவி அற்ப சொற்பம் அன்றென்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்: ஏழை இந்தியர் கொடுத்த பொருள் சிறிதன்று; ஐரோப்பிய யுத்த களத்திலே உயிரைவிட்ட இந்தியரின் தொகையோ மிகப் பெரிதாம். அங்ஙன மிருந்தும், இந்தியா எவ்வித மான நற்பலனையும் அடயவில்லையாதலால், ஜெர்மானிய ரிடமிருந்து அங்கிலேயர் பிடுங்கிக்கொண்ட கிழ் ஆபிரிக்காவிலே ஒரு பெரும் பாகத்தை, இந்தியர் குடியேறும்படி, அவருக்கே விட்டுவிட வேண்டு மென்று, சிலர் கூறுவது கவனிக்கத் தக்கது. அப்படிச் செய்யின், புதிதாக வெளிநாடேறும் இந்தியர் மாத்திரமன்றி, புதுக்குடி புகுவதில் தேர்ந்து பழகியுள்ளவரும், இப்பொழுது ஆங்காங்கு வெளிநாடுகளில் பல அவஸ்தைகளைப் பட்டுப் பரிதபித்துக் கொண் டிருப்பவருமாகிய (மேலே கூறிய முதல் இரண்டு வகுப்புக்களைச் சேர்ந்த) இந்தியர்களும், அந்நாடு சென்று தங்குவர். அதனால், இவர்களுக்கு இப்பொழுது சுதந்திரங்கள் மறுத்தும், இவர்களைப் பழித்து வெறுத்தும், இவர்களை மீண்டும் இந்தியாவுக்குத் திருப்பி யனுப்ப முயன்றும் வரும் ஐரோப்பியரும் திருப்தியடைவர்; இந்தியர்களும் திருப்தி யடைவர். இவ்விஷயம் நமது ஜனநாயகர்கள் ஆலோசித்துக் கடைப்பிடித்தற் குரியது; இந்தியா கவர்ன்மெண்டாரும் பிரிட்டிஷ் பாராளு மன்றத்தாரும், நல்ல உபாயமாகக் கைக்கொள்ளுதற் கேற்றது.

## குறள் நானூறு!

எளிய கருத்துரை, அரும்பதவுரை, இங்கிலீஷ் கருத்துரை, அட்டவணை, அகராதிகளுடன்

வெளிவந்து விட்டது!!

பேப்பர் ராப்பர் 0—4—0 ; டக்ஸீன் 0—6—0 ;
காலிகோகில்ட்—0—8—0 ; தபால் கூலி 0—1—0

பஞ்சாமிர்தம் ஆபீசு—மயிலாப்பூர், சென்னை.

2—113.

# மேஸ்திரி கோவிந்தன் கதி

ஒரு சிறு கதை

ஸ்ரீமதி வி. விசாலாக்ஷியம்மாள், சென்னை.

"கூற்றத்தைக் கையால் விளித்தற்றால், ஆற்றுவார்க்கு
ஆற்றாதார் இன்னா செயல்"

ஒரு நாள் சாயங்காலம், சூளையினருகிலிருக்கும் ஒரு "மில்" வாசலில், சில வேலையாட்கள் கும்பலாக நின்று, ஆத்திரத்துடன் பேசிக்கொண்டிருந்தார்கள். க்டைசியில் மேஸ்திரி கோவிந்தநாயக்கன், "முருகேச முதலி சொன்னபடியே செய்வோம்," என்றான். உடனே அனைவரும், இரண்டு மூன்று பேர்களாகப் பிரிந்து, அவரவர்கள் வீடுகளை நோக்கிச் சென்றார்கள். கோவிந்த நாயக்கன் வீடு, "மில்" லிலிருந்து அரா மைல் தூரமிருந்தது. அவன் அநேக வீதிகள் வழியாகச் சென்று, தன் வீடிருந்த சந்துக்குள் நுழைந்தான். கோவிந்தன் சிறு வயது தொடங்கியே "மில்"களில் வேலை செய்து பழகினவன். அவனுக்கு இப்பொழுது வயது முப்பத்திரண்டேயாயினும், வேலையில் கெட்டிக்காரனாதலால், 6 மாத காலமாக மேஸ்திரி வேலை பார்த்துவந்தான். அவன் மாதம், நாற்பது ரூபாய் சம்பளம் வாங்கி, காரையினால் தளம் போட்ட வீட்டில் குடியிருப்பதைப்பற்றி, அவன் மனைவி மங்கையர்க்கரசிக்கு வெகு கர்வம். கோவிந்தன் அவன் வீட்டுள் சென்றதும், அவன் மகள் தாயி, "அடே! வேலு! நாயனா வந்தூடுச்சு," என்று கூப்பிட்டுக்கொண்டே ஓடிவந்து, அவன் கையைப் பிடித்திழுத்தாள். அவன் மகன் கதிர்வேலு, "நாயனா! நான் நாலு மார்க் வாங்கினேன்," என்று, தன் வாயிலிருந்த தின்பண்டத்தை அவசரமாக விழுங்கிக்கொண்டே வந்தான். "கெட்டிக்காரன்." என்று சொல்லி, குழந்தைகளுக்குத் திருஷ்டிபரிகாரமாக, கோவிந்தன் தன் கைவிரல்களை அவர்கள் தலைமேல் சொடக்கினான். தான் போட்டிருந்த

சட்டையைக் கழற்றி, ஒரு ஆணியில் மாட்டினன். இதற்குள், அவன் மனைவி மங்கை, ஒரு "இனமல்" தட்டில், கொஞ்சம் பலகாரமும், ஒரு 'இனமல்' குவளையில் தண்ணீரும் கொணர்ந்து வைத்தாள். "கொஞ்சம் கறுப்புப் புட்டரிசி சுட்டேங்க. கூடைக்காரி சோறெடுக்க வரும்போது சுட்டாக லெங்க; வெல்லம் போட்டுக் கலந்திருக்கேக்க," என்ருள். கோவிந்தன், புட்டில் கொஞ்சம் அள்ளி, குழந்தைகளிடம் கொடுத்துத் தானும் சாப்பிட்டான். குழந்தைகள் விளையாட வாசற் பக்கம் சென்ருர்கள். கோவிந்தன், "மங்கே! முனிசாமியையும், ஆதிசேஷனையும், வேலைக்குத் திரும்பச் சேர்த்துக்கொண்டு, எங்களுக்கும் ஜாஸ்தி சம்பளம் கொடுக்காட்டா, நாளை வேலைக்குப் போகவேண்டாமென்று, முருகேச முதலி சொல்ருரு. நாங்களும், துரை மாட்டேனின்ன, நாளை முதல் வேலைக்குப் போமாட்டோம்," என்ருன்.

முருகேச முதலி தொழிலாளிகள் சங்கத்தைச் சேர்ந்தவர். சீமையிலே, எல்லா வேலையாட்களும் தொழிலாளிகள் சங்கத்தைச் சேருவது சகஜம்; அப்படிச் சேருவதினல், அநேக அனுகூலங்கள் ஏற்படும் என்று, "மில்" வேலை யாட்களுக்குச் சொல்லி வந்தார். அவர் சீமைக்குச் சென்று இவ் விஷயங்களைப் பார்த்து வந்தவ ரல்லர், ஆனல், எல்லாம் நேரில் கண்டு, தான் உதவி புரிபவர் போல் பேசுவார். "சீமையில் தொழிலாளிகளே தங்கள் சங்கத்தை, முதல் முதல் ஸ்தாபித்துக்கொண்டார்கள். நீங்களும் அவ்வாறே செய்யுங்கள்; ஒன்றுகூடி வேலை செய்யுங்கள். இப்பொழுது உங்களுக்குச் சொற்ப சம்பளம் கொடுத்துவிட்டு, லாபமெல்லாம் தாங்களே அனுபவிக்கும் துரைகளை வழிக்குக் கொண்டு வந்துவிடலாம். நீங்கள் பாடுபடுகிறீர்கள். துரைகள் உங்களுக்கு அரைவயிற்றுக் கஞ்சிக்குக்கூடப் போதாத சம்பளம் கொடுத்து, எல்லாம் தங்கள் வாயில் போட்டுக்கொள்ளுகிருர்கள். சீமையில் பாருங்கள்! கொஞ்ச நாட்களுக்கு முன்பு சில ரெயில் வேலையாட்கள், 'நாங்கள் இவ்வளவு மணி நேரம் வேலைசெய்யமாட்டோம். தவிரவும் எங்களுக்கு ஜாஸ்தி சம்பளம் வேண்டும்,' என்று முதலாளிகளைக் கேட்டார்கள். முதலாளிகள் இதற்கு ஒப்பவில்லை. எல்லாரும் ஒரு மாதம் வேலைக்குப் போகவில்லை. எல்லாரும் தொழிலாளிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்களாகையால், வேறு வேலையாட்களும் கிடைக்கவில்லை. முதலாளிகளுக்குக் கன்த்த நஷ்டம் ஏற்பட்டது. கடைசியில், முன்னிலும் குறைந்த வேலைக்கு, முன்னிலும் அதிகச் சம்பளம் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்

கள். நீங்களும் அப்படிச் செய்யுங்கள். நீங்கள் வேலை செய்யா விட்டால் துரைமார்களா லென்ன முடியும்? அநேக ஜனங்கள் 'உனக்கு இதிலென்ன லாபம்?' என்று கேட்கிறார்கள். எனக்கு ஒரு லாபமுமில்லை. என் சகோதரர்களாகிய உங்கள் சௌகரியத் தின் பொருட்டே சொல்லுகிறேன், உங்களுக்காக இன்னும் அநேக பெரிய மனுஷர்களும் பாடுபடுகிறார்கள்." என்று சொல் லுவார். 'வேலை செய்யாவிட்டால் சம்பளம் போய்விடுமே' என்று அநேகம் பேர்கள் ஆக்ஷேபித்தார்கள். "அதெல்லாம், சமாதான மாகும்பொழுது, வேலை செய்யாத நாட்களுக்கும் சம்பளம் கொடு க்கவேண்டு மென்று, முதலாளிகளுடன் ஏற்பாடு செய்து கொள்ள லாம். சீமையில் அதுதான் வழக்கம். அதுவரை செலவிற்கு, பொதுஜன உதவியைக்கொண்டு, தொழிலாளிகள் சங்கத்தார் பணம் ஏற்பாடு செய்வார்கள்," என்று சமாதானம் சொல்லி விட்டார்.

முனிசாமி நாயுடு, ஆதிசேஷ்ஷ முதலி என்ற இரண்டு மேஸ் திரிகள் தொழிலாளிகள் சங்கத்தைச் சேர்ந்தார்கள். அவர்கள் கோ விந்தன் வேலை பார்த்து வந்த "மில்" ஆட்கள். அந்த "மில்" லின் பெரிய அதிகாரியான கில்னர் துரை, "சீமையில் தொழி லாளிகள் சங்கம், தங்கள் சௌகரியத்தின் பொருட்டு தொழிலாளி களால் ஏற்படுத்தப்பட்டது. இராஜாங்க விஷயமாக ஏற்பட வில்லை. அவ்வாறின்றி, இந்தியாவில் மேனாட்டாரென்ற துவேஷ த்தால் சிலர், குரங்கு, குட்டிகையைத் தேய்த்துச் சுடு பார்க்கும் கதையாக, சுய அறிவில்லா ஏழை ஜனங்களைத் தூண்டுகிறார்கள். என் வேலையாட்கள் தொழிலாளிகள் சங்கத்தைச் சேர்ந்தால், உட னே வேலையினின்றும் தள்ளப்படுவார்கள்," என்று சொல்லியிருந் தார். ஆகவே, கில்னர் துரை, முனிசாமி, ஆதிசேஷ்ஷ, இருவரையும் வேலையினின்றும் தள்ளிவிட்டார்.

முருகேச முதலியாரிடம் போய்ச் சொன்னார்கள். அவர், "கலகம் பிறந்தாலல்லவோ, நியாயம் பிறக்கும்? நீங்களென்ன அடிமைகளா? சங்கத்திற் சேர்ந்ததற்காக வேலையை விட்டுத் தள்ளுவதா? நீங்கள் ஒன்றுகூடி, தள்ளப்பட்ட ஆட்களையும் திரும் பச் சேர்த்துக்கொண்டு, எங்களுக்கும் சம்பளம் உயர்த்தினா லொழிய வேலைக்கு வரமாட்டோ மென்று சொல்லிவிடுங்கள். வழிக்கு உடனே வந்துவிடுவார்கள்," என்று சொன்னார்.

இது விஷயங்க ளெல்லாம் மங்கைக்கு நன்றாகத் தெரியும். அவளுக்கு முருகேச முதலி சொல்லுவதில் நம்பிக்கை யில்லை.

அவர் இவர்களைக் கஷ்டத்தில் கைவிட்டு விடுவாரென்று நினைத்தாள். ஆகையால், அவள், தன்னாலியன்றமட்டும், கோவிந்தனை இதில் தலையிட்டுக்கொள்ள வேண்டாமென்று தடுத்தாள். அவள், தன் கணவன் வேலைக்குப் போவதில்லை யென்று தீர்மான மென்றதைக் கேட்டு, மிகவும் வருத்தப்பட்டாள்.

மறுநாட்காலை எல்லாருமாகக்கூடி, கில்னர் துரையிடம் சென்றார்கள். அவர், "மரியாதையாக நீங்கள் வேலைக்கு வந்தால் வாருங்கள். கோழி கூவாவிட்டால் பொழுது விடியாதோ? நின்றுபோவதாயிருந்தால், தாராளமாக அப்படியே செய்யலாம்," என்று கடிந்துரைத்தார். ஒரு வாரம் ஒருவரும் வேலைக்குப் போகாம லிருந்தார்கள். பிற்பாடு, ஏழைப் பறையர்கள் சிலர் வேலைக்குத் திரும்பிச் சென்றார்கள். பாக்கி வேலையாட்கள் இவர்கள் மேல் கல்லை விட்டெறிந்தார்கள்; கில்னர் துரை வேலைக்குச் செல்லுவோர்களுக்குப் போலீஸ் பந்தோபஸ்து ஏற்பாடு செய்து வைத்தார்.

முருகேச முதலி, முதலிரண்டு வாரங்களுக்குக் கொஞ்சம் பண உதவி செய்தார். பிற்பாடு, "பொது ஜனங்களுக்கு இதில் உத்ஸாகமில்லை. அவர்கள், ஐயோ பணமே, கையை விட்டுப் போகிறதே யென்கிறார்கள். நானென்ன செய்வது?" என்று சொல்லிவிட்டார். ஆனால், திடமாகமட்டு மிருக்கச் சொன்னார். வெகு சிக்கிரத்தில், கோவிந்தனைத் தவிரப் பாக்கி ஆட்களுக்கு இவர் மேல் நம்பிக்கையில்லாமற் போயிற்று. அவன்மட்டும், அவர் சொன்னபடி செய்தால் நமக்கு நலம் என்று சொல்லி வந்தான். இதற்குள், அப்பொழுது நடந்துகொண்டிருந்த, "பக்கிங்ஹாம் மில்" சண்டை மிகவும் கலவரமாகவே, உடையஸ்தர்களான துரைமார்கள், இராஜாங்கத்தினரான துரைமார்களுடன் கலந்துகொண்டு, ஒருவித சமாதானம் செய்து முடித்தனர். இதைக் கேட்டதும், கோவிந்தனுடன் வேலை செய்யும் ஆட்களெல்லாரும், "போதும், போதும், முருகேச முதலியும் அவர் சங்கமும்! ஒரு மாதச் சம்பளமும் வீணாகிக் கடனு மேற்பட்டது. சீமையில் பணம் கொடுப்பார்களென்றாரே, இப்பொழுது, நமக்கில்லை யென்கிறாரே!" என்று சொல்லி, வேலைக்குத் திரும்பச் செல்வதென்று தீர்மானித்தார்கள். கோவிந்தனுக்குமட்டும் முருகேச முதலியிடம் நம்பிக்கை விடவில்லை. தன்னாலானமட்டும் தடுத்துப் பார்த்தான். கடைசியாக, இன்னுமொருமுறை முருகேச முதலியைக் கேட்டு, அவர், இதற்கொன்றும் வழி சொல்லாவிட்டால், வேலைக்குப்

போகலாமென்று சொன்னான். இதற்கு எல்லாரும் ஒத்துக்கொண்டார்கள்.

முருகேச முதலி—"உங்களுக்கு ஒத்துழைக்கும் தன்மையில்லை. எல்லாரும் வேலைக்குப் போகாமலிருந்தாலல்லவோ பயன்படும்? உங்களில் பாதிப்பேர் அவசரப்பட்டு வேலைக்குச் சென்றீர்கள். யானை தன் தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக்கொள்ளுவது போல், கெடுத்துக்கொண்டீர்கள். உங்களுக்கு நன்மை செய்ய வந்த எங்கள் பெயரையும் கெடுத்தீர்கள்," என்றார். உடனே அனைவரும், "உன்னை யாரு எங்களுக்கு நன்மை செய்யச் சொன்னது?" என்று, மண், கல்களை அவர்மேலெறிந்தார்கள். "நன்றி கெட்ட பன்றிகள்," என்று வைதுவிட்டு, அவரும் போலீஸ் உதவியைத் தேடினார். இதுவரை, முருகேச முதலி, எப்படியாவது தங்களுக்கு ஜயம் வரும் வழியைச் சொல்லுவாரென்று நினைத்திருந்த கோவிந்தன், இனி சீக்கிரம் வேலைக்குச் செல்வதே நலமென்று கருதினான். அனைவரும் வேலைக்குச் சென்றார்கள். மில்னர் துரை, "நீங்கள் நன்றியில்லாதவர்கள், தகப்பனாரைப் போல் உங்களை ரக்ஷிக்கு மெங்களை வெறுக்கிறீர்கள். இதில், கோவிந்தன், 18 வருஷ காலமாக, இந்த "மில்" லில் வேலை பார்த்து, மேஸ்திரி பதவி அடைந்தும், முக்கிய கலகக்காரனாக இருந்திருக்கிறான், இனிமேலிப்படி நடக்காமலிருப்பதற்கு ஒரு திருஷ்டாந்தமாக, அவன் வேலையினின்றும் தள்ளப்படுவான். பாக்கி ஆட்களுக்கு, வேலைசெய்யாத நாட்களுக்குச் சம்பளம் கொடுக்கமாட்டோம். இஷ்டமானால் வேலைக்கு வரலாம்" என்றார்.

பாவம்! இவர்கள் என்ன செய்வார்கள்? எல்லாம் இவர்கள் நினைத்தவாறின்றி வேறாக முடிந்தது. இந்தியர்களாகிய இவர்களோ ஏழைகள்; படிப்பில்லாதவர்கள். இவர்கள் எஜமானர்களாகிய துரைமார்களோ, பணக்காரர்கள், படித்தவர்கள், மேதாவிகள். இராஜ்ஜியம், சைனியம், எல்லாம் அவர்கள் கையில். இதில், நிர்யோசியாமல், சிலர், தங்கள் பேர்கள் பிரபலமாவதின் பொருட்டும்; இன்னும் அநேக எண்ணங்களால் தூண்டப்பட்டும், முருகேச முதலி போன்றவர்களுக்குப் பண உதவிசெய்து, இந்தியர்கள் முன்னேற்றமடைவதற்கு ஏற்பாடு செய்யுங்களென்று விட்டனர். முழுவதும் பண உதவி செய்யப் பணமுமில்லை; செல்வாக்குமில்லை; இவர்களை நம்பின ஏழைகளை நட்டாற்றில் கைவிட்டனர்.

கோவிந்தன் வேலை போனதும், இதில்லாவிட்டால் வேறிடம் கிடைக்குமென்று கவலைப்படாம லிருந்தான், ஆனால், எங்கும் அவனுக்கு வேலை யகப்படவில்லை. "வியாபாரம் படுத்துவிட்டது; எங்கள் ஆட்களையே குறைக்கப் போகிறோம்,'' என்பாரும்; "நீ தொழிலாளிகள் சங்கத்தைச் சார்ந்து கலகம் செய்தவன்; நீ வேண்டாம்,'' என்பாருமாக முடிந்தது. மங்கை, குழந்தை தாயிக்கு வெள்ளைக் கம்மல் செய்ய வைத்திருந்த 25 ரூபாயும் செலவாயிற்று. சிறுவயது முதல் "மில்'' லில் வேலைசெய்த கோவிந்தனுக்கு வேறு வேலை செய்யத் தெரியவில்லை. கூலிவேலைக்குச் சென்று, மண்வெட்டியைக் காலில் போட்டுக்கொண்டான். அவர்களும், இந்தக் கூலியாள் எங்களுக்கு வேண்டா மென்றுவிட்டார்கள். மங்கை நகையெல்லாம் ஈடுவைத்துச் சாப்பிட்டாய்விட்டது. மங்கையும், "நான் அப்பொழுதே சொன்னேனே!'' என்றும்; குழந்தைகள் அழுதால், "முருகேச முதலி எல்லாம் போடுவார்'' என்றும், சொல்லிக்கொண்டே யிருந்தாள். இப்படிக் கோவிந்தன் கஷ்டப்படும் காலத்தில், அவன் துரதிஷ்ட வசம், அவன் பாலிய சிநேகிதனை ஒரு குடிகாரன் பட்டணம் வந்தான். முருகேச முதலிமேல் தனக்கிருந்த துவேஷத்தை மறக்கும் பொருட்டும், மங்கை, குழந்தைகள் படும் கஷ்டத்தைப் பார்த்து சகிக்கமுடியா தவனும், கோவிந்தன், தன் சிநேகிதனுடன் சேர்ந்து, குடிக்கத் தலைப்பட்டான்.

மேற்சொன்ன விஷயங்கள் நடந்து நாலுமாத கால மாய்விட்டது. ஒருநாள் சாயங்காலம் சுமார் ஐந்து மணிக்கு, கோவிந்தன் நன்றாகக் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்தான். அவன் குழந்தைகள் முன்போல் "நாயனு,'' என்று சந்தோஷமாக ஓடி வாராமல், எங்கே குடி வெறியில் தங்களை அடித்து ஹிம்சிப்பானோ என்ற பயத்தால், ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டார்கள். மங்கை "ஆறு மாசம் குடிக்கூலி கொடுக்கலெ; வீட்டுக்காரு, சாமானெ தெருவில் போடறேன் என்றாரு'' என்றாள். கோவிந்தன், "வாட்டும்; தவடையைப் பேத்துடறேன், களுதங்க!' என்றான். இதற்குள் வீட்டுக்காரன் இரண்டு போலீஸ் ஆட்களுடன் வந்தான். கோவிந்தன் அங்கே யிருந்த ஒரு தடியை யெடுத்து, "யாருடா, நாயுங்கே!'' என்று, கதவை ஓங்கி அடித்தான். போலீஸ் ஆட்கள் அவன் கையிலிருந்த தடியை, சுலபமாகப் பிடுங்கிவிட்டனர். சாமானை யெல்லாம் தெருவில் கொண்டுவந்து போட்டார்கள். கோவிந்தன் ஸ்தம்பித்து, நின்றுகொண் டிருந்தான். அப்பொழுது, பக்கத்து ராஜ

வீதியில், ஒரு கோச் வண்டியில், முருகேச முதலி ஒரு சிநேகிதருடன் சென்றுகொண் டிருந்தார். "நான் திருச்சி போகிறேன். ஒரு ரெயில்வே ஸ்ட்ரைக் ஏற்பாடு செய்யவேண்டும். பணம் வேண்டுமென்றால், வேலை யென்ன ஆச்சுது என்கிறார்கள், என் செய்வது ?" என்றார்.

"யாரு பணம் கொடுப்பது?" என்று நண்பர் கேட்டார்.

அவர்கள் பெயரைச் சொல்லக்கூடாது," என்றார் முருகேச முதலி. இதற்குள் வண்டி கோவிந்த னிருந்த சந்தருகே வந்தது. "அதென்ன ?" என்று கேட்டார் சிநேகிதர். முருகேச முதலி எட்டிப் பார்த்துவிட்டு, "ஏதோ வீட்டு மாற்றல் சண்டை," என்றார். இதுவரை சும்மா நின்றுகொண் டிருந்த கோவிந்தன், முருகேச முதலியைப் பார்க்கவே, அவர்மேல் அவனுக்கிருந்த அகங்காரத்தினால் தூண்டப்பட்டு, ஒரு விறகுக் கட்டையை எடுத்துக் கொண்டு வண்டியை நோக்கி ஓடினான். போலீஸார் அவனைத் தாத்தினார்கள். அவனை இன்னாரென்று தெரிந்துகொண்ட முருகேச முதலி, வண்டியைத் துரிதமாக விடச் சொன்னார். "அது யாரு?" என்றார் சிநேகிதர். "ஒரு "மில்" வேலையாள். அதிகப் பிரசங்கித்தனத்துக்காக, துரை வேலையை விட்டுத் தாத்திவிட்டார். நான் தொழிலாளிகள் சங்கத்தைச் சேரச் சொன்னேன் ; அதனால் தான் வந்ததென்று என்னைக் கொன்றுவிடுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறானாம், குடிகாரன்; குடிக்கூலி கொடுத்திருக்கமாட்டான். என் விதி, இவர்களிடமெல்லாம் போய் அவர்கள் நன்மைக்குப் பாடுபடுவதாகக் கூறவேண்டியிருக்கு! எக்கேடு கெட்டாலெனக்கென்ன ? நன்றியுமில்லை, பிற்பாடு என்னால் வந்ததென்று என்னை அடிக்கவும் வருகிறார்கள்," என்றார். கோவிந்தன் தன்னைத் தடுத்த போலீஸ் ஆட்களுடன் சண்டை போட்டு, ஒருவன் மண்டையை உடைத்துவிட்டான். தன் கடமையைச் செய்யும் போலீஸ் உத்தியோகஸ்தனைத் தடுத்து அடித்ததற்காக, அவனைக் கைதியாக்கி, போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துச் சென்றார்கள். இதுவரை, ஒருபுறமாக ஒதுங்கி நின்ற குழந்தைகள், கோவிந்தனைப் போலீஸா ரிழுத்துச் செல்லவே, "நாயனு ! நாயனு!" என்று கதறிக்கொண்டு பின் சென்றார்கள்; மங்கையும் அழுதுகொண்டு உடன் சென்றாள்.

907

# ஸம்ஸ்கிருத சுவடிகள்

(823-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. R. அனந்தகிருஷ்ண சாஸ்திரி, சாந்திநிகேதனம்

## எழுத்துச் சுவடிகளின் விவரம்



எழுத்து எழுதிப் பின் வருகிறவர்களுக்குப் புஸ்தக மூலமாக வைக்க வேண்டும் என்று தீர்மானஞ் செய்த காலத்தில், எழுதவேண்டிய பதார்த்தங்களைத் தேட வேண்டியது ஆவசிகமாயிற்று. அசோக மகாராஜன் காலத்தில், கல் அதாவது சிலை, ஏடாக ஆயிற்று. பிறகு, ஸமுத்திரகுப்தன் முதலான அரசர்களின் காலத்தில், செப்புப்பட்டயங்கள் வழங்கி வந்தன. பிறகு, புஸ்தகங்கள் விருத்தியானபடியினால், நம் ஆரியர்கள் ஒரு விதமான காகிதத்தைத், தங்கள் வீடுகளில் உண்டாக்கி, அதில் பூச்சி விழா திருக்கும்படி மஞ்சட் பொடியும் சேர்த்து, கொஞ்சம் கட்டியாகச் செய்து, பொடியாகத் தங்கள் புஸ்தகங்களை யெழுதினார்கள். இது வட தேசத்தில் நடந்தது. சில காலத்திற்குப் பிறகு, கேரள தேசத்திலிருந்து குடைப்பனை ஓலைகளைப் பதப்படுத்தி, தங்கள் தேசங்களில் உபயோகப் படுத்தினதும் தவிர, வட தேசத்திற்கும் அனுப்பி வந்தார்கள். பன்னிரண்டாவது நூற்றாண்டில் எழுதியிருக்கிற ஒரு ஓலையேட்டில், இந்த ஓலை கேரள தேசத்திலிருந்து சம்பாதிக்கப்பட்டது என்று கடைசியில் எழுதியிருக்கிறது. ஆகையால், குஜராத், காத்தியவார், ராஜ புதனம், இவற்றிலிருக்கிற சில ஜைந (Jain) புஸ்தகசாலைகளி னுள்ள

பழைய ஜைன கிரந்தங்கள், 11 முதல் 14 நூற்றாண்டுவரை யெழுதப்பட்டவைகள், அனேகமாக அகலமான பனை ஓலைகளி லிருக்கின்றன. சில ஏடுகள், நாலு அல்லது ஐந்து அடி நீள மிருக்கின்றன; அகலமும் ஜாஸ்தி. தெற்கு தேசத்தில், ஓலைகளில், ஒரு கூர்மையான எழுத்தாணியை வைத்து எழுதி வந்தார்கள். வடக்கில், ஓலைகளின்மேல் மையினால் எழுதியிருக்கிறார்கள். புராதன மையின் குணந்தெரியாத சில தெற்கு தேச வாஸிகள், மையினால் எழுதினால் எழுத்து வெகு நாள் இராதென்று நினைக்கலாம். அது அரக்கு மையான படியினால், ஓலைகளுக்கு ஜலம் முதலான வற்றால் கெடுதல் வந்தாலும், எழுத்துக்கள் அழிகிறதேயில்லை. மையும், காலமாக ஆக, பிரகாசம் ஜாஸ்தியாகவே வருகின்றது. அந்த மையைக் கூட்டுகிற விபரம், நமக்கு மறந்து போய்விட்டபடியால், பல எழுத்து வித்துவான்கள், வடக்கே எவ்வளவு முயற்சி செய்தும், பழைய மையை யுண்டாக்க முடியாததினால், அந்த நஷ்டமாய்ப் போன தொழிலைக்குறித்து வெகு வருத்தப்படுகிறார்கள். வங்காள தேசத்தில் நாட்டுப் பனையோலை ஜாஸ்தி கிடைக்கிற படியினால், அந்தப் பிரதேசங்களிலும், 15-வது நூற்றாண்டு முதல், மையினால் எழுதிய ஏட்டுச் சுவடிகள் வெகுவா யுண்டு. இப்பொழுதும், வங்காள கிராமங்களில் மையினால் ஏடுகளில் எழுதுகிற வழக்க மிருக்கிறது. அப்படியே, எழுத்தாணியினால் தெற்கு தேசங்களிலும் எழுதுகிற வழக்கம் போக வில்லை.

சில சரித்திரக்காரர், காகிதம் செய்யும் மோரிய(Moor) தேசத்து வியாபாரிகள் காம்பே (Cambay) என்கிற நகரத்திற்கு, சமுத்திரமார்க்கமாக 13 வது நூற்றாண்டில் வந்து, ஹிந்துக்களுக்குக் காகிதஞ் செய்கிற முறையைக் கற்றுக் கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள். 13 வது நூற்றாண்டிற்கு முன் எழுதிய புஸ்தகங்களும், இப்பொழுது நமக்கு அகப்படுகிறதில்லை. தென் இந்தியாவும் வங்காளமும் தவிர, நம் பரதகண்டம் முழுதும், காகிதத்தில் எழுதிவைத்த புஸ்தகங்கள், 13 முதல் 19 நூற்றாண்டு வரையே அகப்படுகின்றன.

ஆஸாம் தேசம், பிரமபுத்திரா நதி ஜலத்தினால் அமுத்தப்பட்டு இருக்கிறதினாலும், வருஷத்தில் 100 முதல் 250 இஞ்சு மழை பெய்கிறபடியினாலும், அவ்விடத்துப் புஸ்தகங்களெல்லாம், (Agarutvak) அகருதுவக்கில் மையினால் எழுதப்பட் டிருக்கின்றன. இந்தத் துவக்கைக்

குறித்து நம்முன்னோர்கள் ஏழாவது நூற்றாண்டு முதல் தங்கள் புஸ்தகங்களில் எழுதியிருக்கிறார்கள். அகருத் துவக் புஸ்தகங்கள், பார்க்க வெகு அழகாயிருக்கும். காச்மீர தேசத்தில் முன்காலத்தில் பூர்ஜபத்திரத்தில் (Bhurja-patra) புஸ்தகங்களை யெழுதினார்கள். பூர்ஜமரம் வெகு ஜாஸ்தியாக ஹிமாலயாவில் கிடைக்கிறதினால், அந்த மரப் பட்டைகளால் மழைக்காகக் குடைகள் செய்கிறதுமுண்டு. தவிரவும், சில தேசங்களில் அபூர்வமாக, நெட்டி (pith) யினாலும் பருத்தியினாலும் காகிதஞ் செய்து, அவற்றிலும் எழுதி யிருக்கிறார்கள். ஆகவே, சுருக்கமாக கீழ்ச் சொல்லு கிறபடி யெழுத்துப் பதார்த்தங்கள் பூர்வகாலங்களில் வழங்கி வந்தன:—(1) இரண்டுவிதமான பனையோலை. சிதாலம் (குடைப்பனையின் தாலபத்திரம்) கரதாலம் (நாட்டுப் பனைத் தாலபத்திரம்), (2) காகிதம், (3) அகருதுவக், (4) பூர்ஜபத்திரம். இந்த நான்கும் முக்கியம். இது தவிர, சிலை, செப்புப்பட்டயம், நெட்டி, பருத்தி, துணிகளில், சில சாஸனங்களும் சுலோகங்களும, எழுதப்பட் டிருக்கின்றன. ஆனால் இவற்றில் பெரிய புஸ்தகங்கள் எழுதி யிருக்கிற தாகத் தெரியவில்லை.

## சித்திர ஏடுகள்

சித்திரமானது வெகு யுக்தியுடன் கூடிய கலையானதினாலும், பண்டித பாமரர்களுக்கும் ஒரு சந்தோஷத்தை யுண்டுபண்ணுகிறதினாலும், காகிதங்கள் நன்றாக உண்டு பண்ணத் தெரிந்தவுடன், புஸ்தகங்கள் எழுதும்பொழுது, சித்திரங்களும் எழுத ஆரம்பித்தார்கள். திருஷ்டாந்தமாக, மகாபாரதம் எழுதும்பொழுது, தர்மபுத்திரர், அவர் செய்த யுத்தங்கள், சித்திரங்களில் எழுதப்பட்டுள்ளன. சித்திர எழுத்துக்கள் இரண்டுவிதம்: ஒன்று, சுத்த ஹிந்து; இரண்டாவது மொகல். முதலில் சோதிட் புஸ்தகங்களில், சூரியன் முதலான கிருகங்களின் சித்திரம், அனேகமாக ஆரியர்கள் யுக்தியினால் எழுதினார்கள். பிறகு, யவன தேச சம்சர்க்க காலத்தில், மேற்கு தேசத்தின் யுக்தியும் சேர்ந்து கலந்தது. இது பாமரர்களுக்கு வெகு சந்தோஷத்தை யுண்டாக்கும். முதலில் எழுதியது வித்து வான்களை மாத்திரம் திருப்தி செய்யும். இவ்விதமான சித்திரப் புஸ்தகங்கள் அதிகமாகப் புராதனமாக அகப்படுகிற பக்ஷத்தில், நம் ஆரியர்கள் எவ்விதமான உடை, ஆபரணங்கள், அணிந்திருந்தார்க ளென்று கண்டுபிடிக்கலாம்,

14 வது நூற்றுண்டிற்கு முன், காலக்குறிப்புள்ள புஸ்தகங்கள் அகப்படுகிற தில்லை. ஜயபுரத் (Jaipur, மத்ஸிய தேசம்) திலுள்ள வித்துவான்கள், சித்திரவேலையில் வெகு சமர்த்தர்கள். அனேகமாக, சித்திரப் புஸ்தகங்கள் இவர்களால் எழுதப்பட்டன. துருக்கர்கள் இந்தியாவுக்கு வந்தது முதல், அவர்களின் சித்திரம் கலக்கப்பட்டது. அதிலும் ஆக்பர் காலத்தில், சித்திரங்களில் அதிகக் கலப்பு ஏற்பட்டது.

நம்முன்னோர்கள் சில தேசங்களிலும் தீரங்களிலும் சிலர் நியதமாக வாஸமும், சில மகா வித்வான்கள் எப்பொழுதும் பரதகண்ட பிரதக்ஷிணமுஞ் செய்துவந்தபடியினால், எல்லா இடங்களிலும் நம் கிருந்தங்கள் அகப்படும். ஆனல் நாலு வேதங்களிலும், அதன் உள் சாகை அத்தியயனஞ் செய்து, அந்தந்த முக்கியமான சிரௌதங்களை அனுஷ்டித்து வந்த இடங்களில், அந்தந்தப் புஸ்தகங்கள் அதிகமாக அகப்படும்.

காச்மீரத்தில், அதர்வ வேதத்தில் பிப்பலாத சாகையும், யாஜுஷத்தில் கட சாகையும், அனுஷ்டித்து வந்தவர்கள் அதிகமானதினல், அந்த வேதங்களும் சிரௌதங்களும், பாஷியத்துடன் அகப்படும். காச்மீரமும் காந்தாரமும் துருக்கர்களால் வியாபிக்கப்பட்டு, நூற்றுக்குத் தொண்ணூறு பிராமணர்கள் அந்நிய மதத்தில் சேர்ந்தபடியினல், அவர்களுடைய கிருந்தங்களும் நஷ்டமாகி விட்டன. மீதியானவர்கள் வெகு அபிமானத்துடன் அவரவர்கள் கிரந்தங்களை ரக்ஷித்து வந்தார்கள்.

காச்மீரத்தில் ஈசுவர அவதாரமென்று சொல்லிவந்த சில மகான்களால் செய்யப்பட்ட சில ஸூத்திரம், சக்தி சூத்திரம், இவற்றின் பாஷியம், வியாக்கியானம் முதலிய புஸ்தகங்களும் அகப்படும்.

சுசோமா நதி, அதாவது காபூல் நதியானது சிந்து நதியில் வந்து சேருகிறது. இந்த நதி தீரத்தில் சோலதை உண்டாகிறது. இந்தப் பக்கத்தில் பாணனீ முனி அவதரித்தவர். வியாகரண சம்பந்தமான புஸ்தகங்களிருக்கிற இடம்.

காந்தாரம்—இதுவும் இதைச் சுற்றிலும் ஸாம வேதத்தில் கௌதம சாகைக்காரர் திராக்கியன சூத்திரத்தையும் லாட்டியாண சூத்திரத்தையும் அனுஷ்டித்து வந்தவர்களின் இடம். இப்பொழுது துருக்கர் உபத்திரவத்

தினுல் அனேகர்கள் ஸிந்துவுக்கு வந்துவிட்டார்கள். சிலர் கள் வீட்டில் ஜோதிஷத்தில் புராதன சித்தாந்தங்கள் 18 ம் அகப்படும்.

மத்திய ஹிமாலயத்தில்—வெகு கிராமங்களில், முக்கியமாக யாஜுஷத்தில் கண்வ சாகையும் மாத்தியந்தின சாகையும், அதின் சிரௌத ஸூத்திரங்களை அனுஷ்டித்தவர்களுடைய புஸ்தகங்களும் அகப்படும். ஹிமாலயம், ஆஸாமிலிருந்து தென்கிழக்காக ஆரம்பித்து, வடமேற்கில் காச்மீரத்திற்கும் மேற்கே வெகுதூரம் சென்று, சுமார் ஆயிரம் மைலுச்குமேலிருக்கிறபடியினுலும், அங்கங்கே இருக்கிற கிராமஙகளுக்குப் போகிறது வெகு சிரமமும் காலதாமஸமுமாகிறபடியினுலும், முக்கியமான இடங்களுக்குமாத்திரம் நான் போயிருக்கிறேன். இவ்விடங்களில், எல்லாவித புஸ்தகங்களும் கிடைக்கும். அந்நிய மதஸ்தர்களின் உபத்திரவம் அதிக மில்லாததனுல், புஸ்தகங்கள் அதிக நஷ்டமாக வில்லை. ஆல்மோரா பக்கத்திலும் சம்பா, கூலு பக்கங்களிலும், வெகு அபூர்வ கிரந்தங்கள் அகப்படும்.

நேபாலம், சைலம் — தேவி தந்திர கிரந்தங்கள் அதிகம்.

ஆஸாம்—பிர்மபுத்திரா நதி தீரத்திலும், அதற்குக் கிழக்கே யிருக்கிற பர்மா தேச பௌத்த மதத்தின் பீடையினுல் அடிக்கடி நம் புஸ்தகங்கள் நஷ்டமடைந்தன. ஆனுலும், வைதிகர்கள் வீட்டிலும் மடங்களிலும் சில அபூர்வ கிரந்தங்கள் அகப்படுகின்றன. ஆனுல் சுமார் 500 வருஷங்களுக்குமுன் வங்காளமும் ஆஸாமும் சைதந்நிய மதமும், சாக்தத்தில் வாம மார்க்கமும் பூராவாக வியாபித்து, வேதம் அடியோடே போய்விட்டபடியினுல், வேத புஸ்தகங்கள் கிடைப்பது அபூர்வம். வாம மார்க்கத்திலிருக்கிற ஆகமங்கள் அதிகம் அகப்படும். அதே காலத்தில், தர்க்க சாஸ்திரத்திற்கு நவத்வீபியில்(Naddia)வித்துவான்கள் உண்டாகி, அந்த சாஸ்திரத்தையும், தர்ம சாஸ்திரங்களையும், அதிகமாகப் பயிற்சி செய்துவந்தபடியினுல், அந்த ஏடுகளும் அதிகமாகக் காணப்படும். இப்பொழுது வங்காளத்திலும் ஆஸாமிலும் வேதபாடமும் சிரௌதானுஷ்டானமும் கிடையாது. திரும்பி அவர்களுக்கு வேதம் படிக்க இஷ்டமு மில்லை. வங்க பாஷையில் நாக்கு வழக்கமானபடியினுல், திருப்பி நாக்கைச் சுத்திசெய்ய வெகு சிரமப்படும், க்ஷ முதலான கடின எழுத்துக்கள்,

அவர்கள் நாவில் நுழையாது. ஆகையால், நம் ஆரிய மதப்படி அவர்கள் அவைதிகர்கள் ஆவார்கள்.

காசி— ஆரியர்களுடைய புராதன வாஸமுடையது. சகல மகாவித்துவான்களும் வசித்த இடம். வேதம் முதல் சகல சாஸ்திரங்களு மிருக்கிற இடம். இந்த இடத்திலிருந்துதான் சகல தேசங்களுக்கும் கிரந்தங்கள் நகல்செய்து அனுப்பப்பட்டன. வித்துவான்கள், அந்நிய தேசத்தில் வசித்துப் புஸ்தகங்கள் செய்தாலும், அவற்றைக் காசிக்குக் கொண்டுவந்து, சபையில் அரங்கேற்றி, பிறகு ஒரு பிரதியை காசியில் விட்டுப் போனதாகத் தெரிகிறது. காசியானது பாதகண்டத்தினுடைய ஹிருதயம். இந்த இடத்தில் கிடையாத புஸ்தகம் அந்நிய இடத்தில் கிடைத்தால், வித்துவான்கள் அதை நம்பமாட்டார்கள். 13 வது முதல் 19 வது நூற்றுண்டுவரை யெழுதிய எவ்வித புஸ்தகங்களும், இவ்விடத்திலிருந்தன. இந்த மகா க்ஷேத்திரத்தைக் குறித்து லைபிரரி விஷயம் எழுதும் பொழுது இன்னம் விஸ்தரிக்கப்படும்.

முல்தான்—மூலத்தாரான க்ஷேத்திரம். இவ்விடத்தில் தான் நரசிம்மாவதார மானதென்று கூறப்படுகிறது.) இது சிந்து தேசத்திற்கு வித்தையில் மூலஸ்தானம். வெகு அபூர்வ கிரந்தங்கள் எல்லா விஷயத்திலும் அகப்படும். நிதி விஷயமாகக் கூட ஒரு கிரந்த மிருக்கிறது.

சிந்து—அனேகமாக துருக்கர்களுக்குச் சொந்தமாகி விட்டது. ஆனால் பிராமணர்கள் சிகாரிபூர் முதலான இடங்களில் அபூர்வ கிரந்தங்களை ரக்ஷித்து வருகிறார்கள்.

மத்ஸியம் — ராஜபுதனம் முதலான தேசங்கள் ஜயபூர், இவ்விடத்தில் வெகு காலமாக கணித சாஸ்திர வித்துவான்களும், வேத வித்துவான்களு மிருந்தபடியினால், அவை சம்பந்தமான புஸ்தகங்கள் சுலபமாகக் கிடைக்கும். ராஜபுதனத்துச் சூரிய வமிச ராஜாக்கள் வித்துவான்களை நன்றாக ஆதரித்து வந்தபடியினால், புஸ்தகங்களும் சுலபம்.

உஜ்ஜயினீ—விக்கிரமாதித்தியன் ராஜ்யம், பத்திருஹரி (Bhatrihari) இருந்த ஊர்; இதை வர்ணிக்க என்னால் முடியாது; காசிக்கு அடுத்தபடி. காசியில் எல்லா வித்துவான்களும் அவர்கள் அந்தி காலத்தில் போய்த் தீரவேண்டும். இவ்விடத்தில் சில சாஸ்திரங்களில் ருசி உள்ளவர்

மாத்திரம் உண்டு. ஆகையால் காசிக்குச் சமமாக, புஸ்தகங்களில் இது ஆகாது; அடுத்தபடி யென்னலாம்.

ரேவாதீரம்—உஜ்ஜயினீ மூலமாக வியாபிக்கபட்ட இடம்.

கச்சம்—துவாரகை.—இவை அசோகன் கால முதல் வித்துவான்கள் பெருத்த இடம். இவ்விடங்களில் நாலு வேதங்களுக்கும் அததன் சாகையுடன் உள்ள வித்துவான்க ளிருக்கிற படியினால், உத்தமமான ஸ்தானம். இவ்விடங்களில் அதர்வவேத கனபாடிகள் வெகு பெயர் இருக்கிறார்கள். தெரியாத சில மூடர்கள், அதர்வவேதம் படிக்கிற பிராமணர்கள் கிடையாது என்றெண்ணுகிறார்கள். இவர்கள் புஸ்தகங்களை யெடுத்துத் தான், அதர்வ வேதம் சிரௌதம் முதலானவைகள் அச்சுப்போட்டது. அதர்வ வேதப் பிராமணர்கள் கிராமங்களில் நான் நேரே போய், வித்துவான்களுடன் சம்பாஷித்து, அனேக பிரயோகங்கள் தெரிந்து கொண்டு, அவை சம்பந்தமான புஸ்தகங்களையும் பரோடா லைபிரரிக்குச் சேர்த்தேன். கூர்ஜர தேசத்திலிருந்து மகாராஷ்டிர தேசத்தில் ஸாங்கலி யென்கிற கிருஷ்ணாநதிதீரத்தில் ஒருபெரிய அதர்வவேதி மகான் வந்திருந்து, இப்பொழுது கொஞ்ச காலத்துக்குமுன் பரலோகம் போய்விட்டார். அவர் மந்திர சக்தியினால் தினந்தோறும் எவ்வளவு வியாதிகளைக் குணமாக்கினார் என்கிறதை, ஸாங்கலி போய் விசாரித்தால் தெரியும். அவர் பெயர் சொல்லுவதே புண்ணியம்.

கூர்ஜரம்—ருக்கு வேதத்தில் லட்டியாயன சாகை சூத்திரம்; யஜுஸில் கடம், பிராச்சிய கடம், மைத்திராயண சாகை; சாமத்தில், ராணாயணீய சாகை; அப்படியே அததுகளின் சிரௌத சூத்திரங்கள், அதாவது லாட்டியாயனம், மானவம், வாராகம், சரகம், முதலானவையும்; சில்பசாஸ்திர சூத்திரங்களும் இவ்விடத்திலேதான், அகப்படுகின்றன. எல்லா சாஸ்திரங்களுக்கும் இருப்பிடமான தேசம்; வித்துவான்களும் அதிகம்.

நாஸிகை—புராதன ஸ்தானம். சிரௌதத்திற்கு இருப்பிடம். உஜ்ஜயினீக்கு அடுத்தபடி; புஸ்தகங்கள் அபாரம்.

உத்கலம்—அதாவது ஒட்டாம், ஜகநாதம், இவ்விடங்களில், புராணங்கள் ஜாஸ்தி; ஸங்கீத புஸ்தகங்களும் அதிகம்.

தேலுங்கு தேசம்-கோதாவரி கிருஷ்ணா தீரங்கள்.—வேதம், சிரௌதம், யஜுஸில் தைத்திரிய சாகை, அதிகம்; மற்றது சாதாரணம். நாஸிகை முதல் கோதாவரி சமுத்

திரம் சேருகிற வரை, நதிக்கரையில் இரண்டு பக்கங்களிலு மிருக்கிற கிராமங்களில் வெகு கிரந்தங்க ளிருக்கின்றன.




மகாராஷ்டிரம்—புனு, சாதாரா முதலான இடங்களில், தைத்தரீயத்தில் ஹிரண்ய கேசிய சூத்திரம் அதிகம்.

கோங்கணம்—சாதாரணம்; கோகரணத்தில் சிரௌதம் அதிகம்.

(தொடரும்)

# தட்சிண சரித்திர வீரர்

## 2. மைசூர் ஹைதர் அலி.

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.

ஒரு சாமானியப் போர்ச்சேவகன்; சொற்பக் கூலிக்காக ஏவிய வண்ணம் உயிரை விற்பவன்; உயர் பிறப்பு, செல்வம், செல்வாக்கு எதுவுமின்றி, வயிறு பிழைக்கும் பொருட்டுத் தன்னாடுநீங்கி இந்நாடுவந்து குடியேறிய ஏழைக்குடும்பத்தைச் சேர்ந்தவன்; தன்பெயர் எழுதவுமே அறியாத தற்குறிப்பேதை; இப்பேர்க்கொத்த ஒருவன், இயற்கையில் அமைந்த தன் தோள்வலி மூளைவலி சாதுரியம் தைரியம் ஊக்கம் முதலிய குணவிசேஷங்களையே துணையாக்கொண்டு, பூமியெங்கும் போர்முழக்கம் மிஞ்சித் தீரசூரர்கள் மலிந்து திகழ்ந்த நாளிலே, தன் பெயர் கேட்டோரெல்லாம் பீதியுற்று நடுநடுங்கும் வீரசிகாமணியாய் விளங்கினதுமன்றி, மகத்தானதோர் ராஜ்யாதிபதியாயும் சிறப்புற்றிலங்கினன் என்றால், அந்த அற்புதந்தான், அழுக்குப்பிடித்து அரிதில் நகருமோர் சிறு புழுவானது, வானவில்லினும் மிக்க பிரகாசமும் விசித்திரமும் கூடிய பலவர்ணப் பட்டுப்பூச்சியாக மாறிப் பறந்திலங்கும் காட்சியினும் அதிக ஆச்சரியத்தை விளைக்குமன்றோ? ஹைதர் அலி இப்படிப்பட்ட ஓர் அற்புத வீரர்.

பதினேழாவது நூற்றாண்டின் முற்பாகத்திலே, முகம்மது பைலால் என்ற ஒரு பக்கிரி, ஆப்கானஸ்தானத்திலிருந்து வந்து, நிஜாம்ராஜ்யத்தி லுள்ள குல்பர்கா என்னும் ஊரில் குடியேறினர். அவர் மக்கள் இருவரில் இளையவரான அலிமுகம்மது என்பவர், அவ்வூரையும் விட்டு, மைசூர் ராஜ்யத்தின் கீழ்ப்பாகத்திலே, இப்பொழுது பொன்விளையும் பூமியாய்த் திகழும் கோலாரில் வந்து குடியேறினர். அலிமுகம்மதுவுக்கு நான்கு பிள்ளைகள். அவர்களில் கடைக்குட்டியான பட்டி முகம்மது என்பவருடைய மக்களே ஷாபாஸ் என்பவரும் ஹைதர் அலியும் ஆவர். பட்டி முகம்மது, மைசூர் ராஜ்யத்தில் பௌஜ்தார் என்னும் பதவியை அடைந்து, பூதிகோட்டை ஜாகீரைப் பெற்று, உத்தியோகஞ்செய்து வந்தார். ஹைதர் அலி

பிறந்த வருஷம் நிச்சயமில்லை: கி. பி. 1717 என்பார் சிலர்; 1722 என்பாரும் உளர்.

அக்காலத்திலே மைசூர் அரசர், பெரும்பாலும் தமது அமைச்சர் கையில் அகப்பட்டு, அவர்கள் ஆட்டுவிக்கும் பொம்மைராஜாக்களாயிருந்தனர். ஹைதரலியின் தமையனான ஷாபாஸ் என்பவர், மைசூர் ஸம்ஸ்தானத்தில், 200 குதிரை வீரருக்கும் 1000 சேவகருக்கும் தலைவராய் இராணுவ உத்தியோகஞ்செய்து வந்தார். அவர் படையில் ஓர் (Volunteer) உமேதவாரிப் போர்ச் சேவகனாகவே ஹைதர் முதல் முதல் வேலைபார்க்கத் தொடங்கினர். நிஜாம் ராஜ்ய உரிமையைப்பற்றி நடந்த போரில், மைசூர்ப் படைகள் முஸபர் ஜங்கு கட்சிக்கு உதவியாயிருந்த பிரெஞ்சுக்காரர் பக்கத்தில் சண்டை செய்தன. அந்த யுத்தத்தில் ஹைதரின் போர்த்திறனையும் ஆர்வத்தையும் சாமர்த்தியத்தையும் மைசூர் பிரதம மந்திரியான நஞ்சராஜர் பார்த்து, அவர் ஒரு சாமானியப் படைவீரனாக இருப்பது தகுதியன்றென்பதைக் கண்டு, அவரை 1755ம் ஆண்டில், அப்பொழுது மைசூர் ராஜ்யத்துக் குட்பட்டிருந்த திண்டுக்கல்லுக்கு பௌஜ்தாராக நியமித்தார். இதுவே ஹைதரின் உயர் பதவிக்கு முதற்படி என்னலாம்.

ஹைதர் அலியின் இராணுவ உத்தியோக வரலாற்றையும், அவர் புரிந்த போர்களையும், அவர் படிப்படியாக மேலேறி மைசூர் ராஜ்யத்தின் சிம்மாசனத்தை அடைந்ததையும் விரித்துக் கூறுதல், சரித்திரத்தின் கடமையாகும். அவற்றையெல்லாம் ஈண்டு விஸ்தரிக்காது, அவர் குணாதிசயங்களையும், சாதாரண சரித்திரங்கள் கூறாதுவிடும் சிற்சில குறிப்புக்களையும் பொதுப்பட எடுத்தோதுவதே பொருந்தும்.

அவர் நாளிலே தர்ம யுத்தம் என்பதே இல்லை; இராஜ்ய தந்திரங்களிலும் உடன்படிக்கைகளிலும் நாணயமான வாக்கு சுத்தமுள்ள நடத்தை யென்பதும் எவரிடத்தும் இல்லை. ஈஸ்டிந்திய கம்பெனியாரான ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும், மொகலாய சக்கரவர்த்தியும், அவர்க்குக் கீழ்ப்பட்ட நிஜாம் நவாபுக்களும், மகாராஷ்டிரரும், மற்றுமுள்ள சிற்றரசர் தலைவர்களும், அவரவர் சொந்தக் காரியத்துக்கும் லாபத்துக்கும் வேண்டியபடி வேடம்பூண்டு, வாக்குமாறி, நடத்தைமாறி, அப்படியொழுகுவதில் எவ்வித வெட்கத்தையேனும் அவமானத்தையேனும் ஒரு சிறிதும் உணராமல், பாராட்டாமல், நடந்



மைசூர் ஹைதர் அலி

தது போலவே, அவரும் நடந்து வந்தனர். காலத்துக்கேற்ற கோலமேயது. எனினும், ஹைதர் அலி தன் ஒழுக்கத்தில் மற்றவரினும் கீழ்த்தரமாக நடக்கவில்லை யென்பது மட்டுமன்றி, பலமுறை, பல அம்சங்களில், மேன்மையாக ஒழுகினரென்றே கூறுதல் பொருந்தும். அவருக்கு எழுதவும் படிக்கவும் தன் கையெழுத்துப் போடவுமே தெரியாதெனினும், தன் அரிய ஞாபகசக்தியினால், எப்படிப்பட்ட தந்திரிகளும் தன்னை எளிதில் ஏமாற்ற முடியாமல் காத்துக்கொண்டது மன்றி, ஒரே சமயத்தில் பல வேலைகளைக் கவனித்து, நன்கு செய்துமுடிக்கும் அவதான சக்தியும் பெற்றிருந்தார். அவர் நாளிலே, இந்தியர்களுடன் பழகுவதில், ஆங்கிலேயரைவிடப் பிரெஞ்சுக்காரரே அதிகத்திறமை காட்டினர். மஹாராஷ்டிரர் ஹைதரை அடிக்கடி தொந்தரை செய்ததனால் அவர் வலி குலையாதிருப்பின், அல்லது பிரெஞ்சுக்காரர் தம் வாக்குப்படி அவருக்குச் சமயோசிதமான உதவிசெய் திருப்

பின், அல்லது அவர் அகாலமரணத்தை அடைந்திராது பின்னும் சிலவாண்டுகள் உயிரோடிருந்திருப்பின், தென்னிந்தியாவின் சரித்திரம் முழுதுமே வேறு விதமாக முடிந்திருக்குமென்பது சரித்திரக்காரர் துணிபு.

ஹைதரின் ஜீவ சரிதையில் நிகழ்ந்த சில ருசிகரமான சம்பவங்களை இனிக் கூறுவோம்: அவருக்கு முதலில் கண்டேராவ் என்னும் பிராமணர் துணைவராகவும் மந்திரியாகவும் விளங்கினர். உண்மையில் ஹைதரே மைசூர் இராச்சியத்தின் அதிபதியா யிருந்தபோதிலும், அவர் அரசுரிமைப் பேரை ஏலாமல், பழைய ஹிந்து அரசகுடும்பத்தில் ஒருவரையே அரசராகப் பாவித்து நடத்தி வந்தார். இப்படிப் பொம்மையரசாக விளங்கின அரசிளங்குமாரின் தாயாகும் இராணியார், உண்மையில் இராஜ்யாதிகாரத்தைப் பெற விரும்பி, கண்டேராவைத் தன் வசமாக்கிக் கொண்டு, ஹைதருக்குத் துரோகஞ்செய்யும்படி தூண்டினர். கண்டேராவின் சூழ்ச்சியினாலும் போர்த்திறமையினாலும் ஹைதரின் ஆட்சி தொலைந்த தென்னும்படி யாகிவிட்டது. பிறகு, ஹைதர் வெற்றிபெற்று, கண்டேராவையும் சிறைப்பிடித்த பொழுது, அரமனை ஸ்திரீகள், அவர் எப்படியும் பிராமண குலத்தின ரானபடியால், அவரைக் கொல்ல வேண்டா மென்று ஹைதரை வேண்டிக் கொண்டனராம். அதற்கு ஹைதர், "இல்லை அவரைக் கிளிப்பிள்ளைபோல் பேணிக் காப்பாற்றுகிறேன்" என்று பதிலளித்தனராம். அவ்வாறே, கண்டேராவ் சாகும்வரை, ஹைதர், அவரை ஓர் இரும்புக் கம்பிகளாலான கூட்டில் அடைத்துவைத்து, நாள்தோறும் ஒரு கிண்ணியில் போதுமான பாலும் சோறும் கொடுத்து வந்தனராம்!

முகம்மதலி என்பவரை ஆறுகாடு நவாபாகக்கொண்டு இங்கிலீஷ் கம்பெனியார், அவருக்காகப் பல சண்டைகள் செய்தது சரித்திர விஷயம். அயோக்கியத்தனமே மிகுந்துள்ள அந்த நாளிலேயும், அவர் மற்றெல்லோரினும் பரம அயோக்கியர்; ஆண்மையேனும் வீரமேனும் இல்லாதவர். அவர் குணத்தை நன்கு அறிந்து கொள்ளாமல், மீண்டும் மீண்டும் அவரை நம்பியே, கம்பெனியார் அல்லற் பட்டனர். ஹைதாலி அவரை உள்ளபடி மதிப்பிட்டு, முற்றிலும் வெறுத்து வந்தார்; அவர் மட்டும் தடையாகா திருந்திருப்பின், ஹைதரலி இங்கிலீஷ் கம்பெனியாருடன் சிநேகம் பாராட்டலாகி, மைசூர் அரசின் சரித்திரம் வேறு விதமாய் முடிந்திருக்கலாம். இதைக் கூறும் இங்கிலீஷ்

சரித்திரக்காரர், ஹைதரின் கூரிய மதியையும் சாதுரியத்தையும் மெச்சித் தம் நாட்டவரின் மதியீனத்தை இகழ்கிறார்.

1776-ம் வருஷத்தில் பேருக்கு ராஜாவாக விளங்கிய சாமராஜா இறந்தபொழுது, அவருக்குப் பதில் ஒருவரைத் தெரிந்தெடுக்க, ஹைதர் பின் வருமாறு செய்தார். அரமனையில் ஓர் அறையில் பலவகை விளையாட்டுச் சாமான்களைச் சேகரித்துவைத்து, ஹிந்து ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவராயும், அரசுக்குரியவரெனத்தக்கவராயுமுள்ள சிறு குழந்தைகள் எல்லோரையும் அங்கே கொண்டுவந்துவிட்டு, அவரவர் இஷ்டம்போல் சாமான்களை எடுத்துக் கொள்ளச் சொன்னார். ஓர் எலுமிச்சம் பழத்தையும் நவமணி குயிற்றிய பிடியுள்ள ஒரு கட்டாரிக்கத்தியையும் தனக்குப் பிரியமாக எடுத்த சாமராஜா என்ற சிறுவனையே, ஹைதர், மைசூர் அரசனாக முடிசூட்டி வைத்தார்.

காஞ்சிபுரத்துக் கருகே கர்நல் பெய்லி என்ற இங்கிலீஷ் தளகர்த்தரைச் சைநியத்தோடும் முறியடித்து ஹைதர் சிறைப்பிடித்ததே, இங்கிலீஷ்காரர் இந்தியாவில் அடைந்துள்ள பல தோல்விகளிலெல்லாம் கடுமையானதென்று கூறப்படுகிறது. சீரங்க பட்டணத்திலே, அரமனைச் சுவரில் இச்சண்டையும் வெற்றியும் பெரிய சித்திரமாக எழுதப்பட்டிருப்பதை இன்றும் காணலாம்.

பின் வருவது ஹைதரின் யுத்த தந்திரத்தை விளக்கும். தார்வார் கோட்டையை ஹைதர் பிடிக்க முயன்றபொழுது, மராட்டியரிடமிருந்து உதவி விரைவில் வருவதாகக் கோட்டைத் தலைவனுக்கு ஒரு பொய்க்கடிதம் அனுப்பப்பட்டது பிறகு, ஹைதர், தன் சேனைகளில் சிலரை மராட்டியப் படைகளைப்போல வேஷம் போடச் செய்து, அவர்களே கோட்டையின் உதவிக்கு வருபவர் போலும், அப்படி உதவவரும் மராட்டியரைத் தன் சேனைகள் தாக்குவது போலும் நடித்து, குண்டில்லாத தோட்டாக்களைச் சுடச்செய்தார். கோட்டைத் தலைவன் அதை நம்பி, கோட்டை வாயிலைத் திறக்க, மராட்டியர் வேஷம்பூண்ட ஹைதரின் படைவீரர் உள்ளே நுழைந்து, அவனையும் கோட்டையையும் பிடித்துக் கொண்டனர்.

குற்றஞ் செய்தவர்களை மூக்காலியில் கட்டியும் கட்டாமலும் குறடாவால் அடித்துத் தண்டிப்பது அந்த நாளை வழக்கம். ஒரு போர்நிகழ்ச்சியில் ஒரு விஷயத்தை அவர் நேரில் செய்ய முடியாமற்போக, அதைச் செய்யும் கடமை பூண்டிருந்த அவர் அருமை மகன் திப்பு, தானும் செய்யத் தவறியதற்காக, ஹைதர், அவரைத் தன் கையாலேயே குறடாவால் அடித்துச் சிக்ஷை செய்தனர். இவ்விதமான நியாயவுணர்ச்சி ஹைதருக்கு அதிகம் உண்டு; அன்றியும், தன் மகன் திப்பு சுலத்தானுக்கு இருந்தது போன்ற மதத்துவேஷமும் குறுகிய நோக்கமும் வைராக்கியமும் அவருக்கு அணுவேனுமில்லை. தன் கீழ் உத்தியோகஸ்தர் அவரவர் கடமைகளை நன்கு செய்வதை மட்டும் கவனிப்பாரே யன்றி, அவர்கள் எம்மதத்தின ராயினும், அவர் பாரபக்ஷம் பாராட்டுவ தில்லை.

ஹைதரிடத்தில் அவருடைய உத்தியோகஸ்தர்கள் கொண்டிருந்த விசுவாசத்துக்கும் வாஞ்சைக்கும், அவருடைய மந்திரி பூர்ணையாவின் நடத்தையே சான்றாகும். ஹைதர் திடீரென இறந்துபோன பொழுது, அவர் மகன் திப்பு, நெடுந்தொலையில் வேலூர் இராணுவச் சேவியாகப் போயிருந்தார். ஹைதர் இறந்ததைக்கொண்டு, பிராமணரான பூர்ணையா, ஹிந்து ராஜாவையே மீண்டும் உண்மையில் மைசூர் அதிபதியாக்கிவிட, அச்சமயம் முயன்றிருக்கலாம். ஆயினும் அவர் அப்படித் துரோகம் செய்யவில்லை. ஹைதர் இறந்தமை வெளிக்குத் தெரிந்தால் சைநியங்கள் அடங்காமல் கலகஞ்செய்யு மென்று தெரிந்து, ஹைதரின் சவத்தைப் பொக்கிஷப்பெட்டியில் அடக்கிப் பொக்கிஷ மென்று சீரங்கபட்டணத்துக்கு அனுப்பிவிட்டு, ஹைதர் உயிருடன் நோயாளியா யிருப்பதாகவே செய்தியைப் பரப்பி, திப்பு திரும்பி வந்து ராஜ்யபாரத்தைக் கைக்கொள்ளும் வரை, வெகு பதனமாய் அவர் உரிமையைப் பாதுகாத்து வந்தார். திப்புசுல்த்தானும் பூர்ணையாவையே தன் மந்திரியாக்கிக் கொண்டது வியப்பன்றே.

ஆங்கிலேய ஈஸ்டிந்தியா கம்பெனியாருக்காக ஹைதரிடம் தூது சென்றவரும், கீர்த்திபெற்ற கிறிஸ்தவப் பாதிரியுமான ஷ்வார்ட்ஸ் என்பவர், சீரங்கபட்டணத்திலே ஹைதர் அரண்மனையிலே சில நாட்கள் தங்கி, தான் நேரில் கவனித்த அவர் துரைத்தனமுறைகளையும் ஒழுங்குகளையும்பற்றி எழுதியிருப்பதை எடுத்தோதி; இதை நிறுத்துவோம்:—

'ஹைதர் அலி தனக்காகக் கட்டிக்கொண்டிருக்கும் மாளிகை, இந்திய சிற்ப சாஸ்திரப் பிரகாரம், வெகு அழகா யிருக்கின்றது. அஃது, அநேக ஸ்தம்பங்களுடன், செதுக்கிய கற்களால் அமைந்துள்ளது. அதன் அந்தத்தில்,



ஷ்வார்டஸ் பாதிரியார்.

மைசூர் ராஜாக்களின் புராதனமான அரண்மனை இருக்கின்றது. முந்திய மைசூர் அரசர் இன்னும் அதில் வசித்து வருகிறார்; ஹைதர் அவருக்குச் செலவுக்கு வேண்டிய திரவியம் உதவுகிறார்; அவருக்குப் பிரத்தியேகமான சிப்பந்தி யிருந்தபோதிலும், அவர் ஒரு ராஜ கைதியாகவே நடத்தப்பட்டு வருகிறார். சில வேளைகளில், ஹைதர், அவரைச் சென்று காண்பதுண்டு: அப்பொழுது, அவர் முன் வீற்றிராது, ஒரு பணியாள்போலவே ஹைதர் நிற்பார்.

உலகாநுபவம் உள்ளவர்கள், தங்கள் காரியசித்தியின் பொருட்டுப் பாசாங்கு செய்வது இப்படித்தான். அரசரின் மக்கள் எல்லாரும் இறந்து போயினர்; அவர்கள் இரகசியமாய்க் கொல்லப்பட்டன ரென்பதுதான் பொதுஜன அபிப்பிராயம். அரண்மனையின் முன்பு ஒரு பெரிய சதுர வெளி: இதன் இருபுறமும், அடைப்பில்லாத கட்டடங்கள் இருக்கின்றன; இவற்றில்தான் ஹைதரின் இராணுவ உத்தியோகஸ்தர்களும் நாட்டாண்மை அதிகாரிகளும், தத்தமக்குரிய இராஜ்யபரிபாலன அலுவல்களை நடத்துவது. நாட்டுப் பிரதேசங்களிலிருந்தும் படைவீடுகளிலிருந்தும் அப்போதைக்கப்போது வரும் அறிக்கைப் பத்திரங்களைப் பெறுதற்பொருட்டு, இவர்கள், தங்கள் தங்கள் ஸ்தானங்களில் குறிப்பிட்ட வேளைகளில் சித்தமாயிருப்பர்; ஆகவே, சர்க்காருடன் வேலையாக வருபவர்க்கெல்லாம் இவர்களிருக்குமிடம் தெரியும். இவ்விடங்களையும் அவற்றில் நடக்கும் சம்பவங்கள் யாவற்றையும், ஹைதர், தன் மேல்மாடியிலிருந்து கவனிக்கக்கூடும். இந்த உத்தியோகச் சாலைகளில் எவ்வித ஆடம்பரமும் இல்லை; எல்லா வேலைகளும் ஒழுங்காகவும் துரிதமாகவும் நடக்கின்றன. தன் வேலைக்காரர்க்கு ஹைதர் சில சமயங்களில் வெகுமதி கொடுப்பதுண்டெனினும், பீதி மூலமாகவே எல்லா வேலைகளும் செய்யப்படுகின்றன. ஒவ்வொருவனும், தன் கடமை தவறினால் தனக்கு விளையும் கொடுந்தண்டனையை நினைந்து, மனத்தில் அச்சத்தோடு வேலை செய்கிறான். அதியுன்னத பதவியி லுள்ள அதிகாரிகளுக்கும், மிகத்தாழ்ந்த படியிலுள்ள குற்றேவலாளருக்கும்,ஒரே விதமான தண்டனையே. இருநூறு கிங்கரர்கள் குறடாக்களுடன் எப்பொழுதும் தயாரா யிருக்கின்றனர்; நாள் தப்பினாலும் பலர் தண்டனையடைவது தப்பாது. ஒரு ஜில்லா முழுமையும் ஆளும் கவர்னரும், கேவலம் ஒரு தோட்டியைப் போலவே,குறடாவால் அடிக்கப்படுகிறான். ஹைதர் எல்லோரையும் ஒரே விதமாக நடத்துகிறார். அவர் இருமக்களுக்கும் மருமகனுக்கும் கூட இதே கொடிய தண்டனை தான். அவருடைய உயர்ந்த உத்தியோகஸ்தர்களில் யாராவது, இவ்வாறு பகிரங்கமாகக் குறடாவடிபெற்ற பிறகு, வேலையை ராஜிநாமா செய்துவிட்டுப் போய்விடுகிறேனென்றால், அவர் விடுவதில்லை; குறடாத் தழும்பு தம் தேகத்திலுள்ள வரை, மீண்டும் அவ்வுத்தியோகஸ்தர் அதேமாதிரிக் குற்றம் செய்யமாட்டாரென்று நினைந்து, அவரை

வேலையிலேயே இருக்கும்படி நிர்ப்பந்தம் செய்கிறார். தன் நயத்தையே கருதி அக்கிரமமாகப் பணம் பறிக்கும் எவர்க்கும், மானவுணர்ச்சி, சீலக்கொள்கைகள் ஒன்றும் இராதென்பது ஹைதருடைய அபிப்பிராயம்.*

ஒரு நாள் சாயங்காலம் அரமனைக்குட் புகுந்தவுடன், கொலுமண்டபத்தில், அநேகர் வளைவாய் வீற்றிருப்பதைக் கண்டேன். அவர்களின் உடையினால், அவர்கள் ஜில்லா கலெக்டர்கள் (வரி தண்டுவோர்) என்பதைத் தெரிந்து கொண்டேன். அவர்கள் முகங்கள், அவர்கள் மனத்தி லுள்ள கவலையையும் அச்சத்தையும் காட்டின. ஹைதருடைய பாரசீக காரியதரிசி, அவர்கள் தத்தம் கணக்குகளை ஒப்புக்கொடுக்க வந்திருப்பதாக எனக்குச் சொன்னார். மரணதண்டனையை நோக்கிக் கொண்டிருக்கும் குற்றவாளிகளைப்போல் அவர்கள் எனக்குத் தோன்றினர். ஹைதருக்குத் திருப்திகரமாகக் கணக்கை ஒப்புக் கொடுப்பவர், மிகச் சிலரே; எனவே, நாள்தோறும் பலர் கொடிய தண்டனைகளுக்குள்ளாயினர். இந்த நிர்ப்பாக்கியர்களில் ஒருவன் பட்டதைச் சொல்லலாமோ கூடாதோ என்று திகைக்கிறேன். அந்த ஏழைக் குற்றவாளியை ஒரு தூணோடு சேர்த்துக் கட்டி, இரண்டு கிங்கரர்கள் குறடாவால் மிகக் கொடிய வண்ணம் அடித்தனர்; குறடாவி லுள்ள கூரிய ஆணிகள் அவன் சதையைக் கிழித்துப் புண் செய்தன. கேட்டோர் இருதயத்தை ஊடுருவிப்பாயும்படி அவன் கதறியழுதான்.

தண்டனை இவ்வளவு கண்டிப்பாயும் கொடிதாயு மிருந்துங்கூட, இந்த வேலைகளை நாடி அநேகர் போட்டி போட்டுக் கொண்டு ஆவலுடன் மேல்விழுந்து வருகின்றனர் இந்த வியாபாரத்தில் பிராமணர் தான் முழுமோசமாய் நடப்பவர். ஒரு ஜில்லா முழுதும் வரிதண்டும் அதிகாரத்தை ஒரு பிராமணன் அடைந்தவுடன், ஈவிரக்கமின்றி ஜனங்களை உறிஞ்சிவிடுகிறான். கடைசியில் ஹைதர் கணக்குக் கேட்கும்போது, தான் ஏழை, தன்னிடத்தில் பணமில்லை என்கிறான்; குறடாப்பூசை பெற்றான பின், மீண்டும் தன் ஜில்லாவுக்குச் சென்று, ஜனங்களை உறிஞ்சத் தொடங்குகிறான். இப்படி நடைபெறும் துரைத்தனத்தில்

* ‘மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்,
எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார், அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்’’ என்றார் பிறர். [ப-ம் பா-ர்.]

ஜனங்கள் மானவுணர்ச்சியே யின்றிக் கெட்டுப்போதல் ஆச்சரியமில்லையே.

ஹைதருடைய சைநியம், 'பக்ஷிகள்' என்ற நான்கு அதிகாரிகள் வசத்தில் இருக்கிறது. அவர்கள் தண்டுகளுக்குச் சம்பளம் கொடுப்பதன்றி, சைநியத்துக்கு ஆட்சேர்ப்பது, மற்ற ராணுவ விஷயங்களை முறைசெய்வது, சைநியத்துக்குள் உண்டாகும் சிறிய உட்கலகங்களில் வழக்குத்தீர்த்து நியாயம் கூறுவது, முதலிய இதர வேலைகளையும் செய்கின்றனர். இந்தப் பக்ஷிகளுடன் அடிக்கடி நான் சம்பாஷித்திருக்கிறேன். சிலர் பாரசீக பாஷையும், சிலர் ஹிந்துஸ்தானி மட்டும் பேசுகின்றனர்; எல்லாரும் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவரே.......ஹைதரின் அரண்மனை நிர்வாகம் எல்லாம் விசேஷமாய்ப் பிராமணர் வசம் தானிருக்கிறது. இவர்களோடும் அடிக்கடி நான் பேசுவதுண்டு...............ஹைதரின் ஒற்றர்கள் எங்கும் இருக்கின்றனர். அத்யந்த நண்பர்கள் கூட மனத்திலுள்ளதைத் தாராளமாய் ஒளியாது பேசத் துணிவதில்லை; ஆனால் மதவிஷயத்தில் மட்டும், இராப்பகலாக நான் எதைப் பேசினும், ஹைதருக்குக் கோபம்வராதென்பது எனக்குத் தெரியும்.

ஹைதர் எனக்குப் பேட்டி கொடுத்தபொழுது, கீழே விரித்திருந்த விலையுயர்ந்த கம்பளத்தின் மீது, தன்னருகே உட்காரும்படி சொன்னார். என் ஜோடுகளைக் கழற்றச் சொல்லவில்லை. நான் சொன்னதையெல்லாம் கவனித்துக் கேட்டார்; ஒளிப்பு மறைப்பின்றித் தன் மனத்திலுள்ளவற்றை வெளிப்படையாகச் சொன்னார். ஐரோப்பியர் (சென்னையிலுள்ள ஈஸ்டிந்தியா கம்பெனியார்) பகிரங்கமாய்ச் செய்த உடன்படிக்கைகளை மீறி நடந்து விட்டனரெனினும், தான் அவர்களுடன் சமாதானமாக வாழ விரும்புவதாகச் சொன்னார். அவர் கட்டளைப்படி எழுதப்பட்ட ஒரு கடிதம், எனக்கு அவர் காரியதரிசியால் படித்துக்காட்டப் பட்டது. பிறகு, ஹைதர், "நமக்குள் நடந்த சம்பாஷணையின் சாராம்சத்தை இந்தக் கடிதத்தில் குறித்திருக்கிறேன்; விவரங்களை நீர் நேரில் வாய்மொழியாகச் சொல்லிவிடலாம்" என்று கூறினார். இதனால், என் தூதை ஒரு புதிய உடன்படிக்கைக்கு அடிப்படையாக ஹைதர் கருதினாரென்பது தெரிந்தது; ஆனால், சென்னையிலிருந்த நவாபு (முகம்மதலி) அதைக் கெடுத்துவிட்டார். ஹைதரின் பக்கத்தில் நான் வீற்றிருந்தபொழு

து, துரைத்தன காரியங்கள் எவ்வளவு துரிதமாய் நடத்தப் பட்டன என்பதைக் கவனித்து, நான் ஆச்சரியப்பட்டேன். அவர் என்னுடன் பேசி முடிந்தவுடன், ஒரு காரியதரிசி சில கடிதங்களை அவருக்குப் படித்துக் காட்டினார்; உடனே அவருக்கு ஹைதர் பதில் கூற, அவர் குறித்துக் கொண்டார். பிறகு காரியதரிசிகள் ஓடிப்போய், அவர் கட்டளைப்படி பதில் கடிதம் எழுதிக் கொண்டுவந்து, அவருக்குப் படித்துக் காட்ட, ஹைதர், தன் முத்திரையை வைத்தார்.

இவ்விதமாக அன்று சாயங்காலத்துக்குள் அநேக கடிதங்கள் எழுதி முடிந்தன. ஹைதருக்கு நேரில் எழுதவோ படிக்கவோ தெரியாது; ஆனால், அரிய ஞாபகசக்தி யுண்டு; ஒருவரும் அவரை ஏமாற்றத் துணிவ தில்லை. அவர் முதலில் ஒருவரை ஒரு கடிதத்தை எழுதித் தனக்குப் படித்துக் காட்டச் சொல்வார்; பிறகு அதே கடிதத்தை வேறொருவரை அழைத்து அவரிடம் கொடுத்துப் படித்துக் காட்டச் சொல்வார். கடிதத்தை எழுதிய காரியதரிசி, இம்மியேனும் பிசகி எழுதியிருந்தாலும், அவர் கட்டளையில் மயிரிழை விலகி யிருந்தாலும், அவர் தலை போய்விடும்.

பளிக்குத்தூண்களுள்ள அழகிய மாடத்தில் நான் அவருடன் அடிக்கடி வீற்றிருப்பதுண்டு. அந்த மாடத்தின் முன்பு அரண்மனைத் தோட்டம். தோட்டம் சிறிய தெனினும்—கோட்டைக்குள் பெரிய தோட்டத்துக் கிட விசாலமில்லை—அதில் இரண்டுவிதப் பழங்களை யுதவும் அழகிய ஒட்டுமரங்களின் வரிசையும், தமால மரச்சாலையும், நீரூற்றுக்களும் பிறவும் உண்டு. வாலிபர் பலர், அந்தத் தோட்டத்தில் மண்தூக்கிச் செல்வதைக்கண்டு, அவர்கள் யார் என்று விசாரித்தேன். அவர்கள் எல்லோரும் அநாதைப் பிள்ளைகள் என்பதையும், ஹைதர் அவர்களைப் பராமரித்துக் காப்பாற்றி, ஊண் உடை உதவி, அவர்கள் பயிற்சிக்கு வேண்டியன அளித்து வருவதையும் அறிந்தேன். ஏழை அநாதைகளை இப்படிப் போஷிப்பதை யறிந்து நான் ஸந்தோஷப்பட்டேன். நம்முடைய ஸர்க்காரும் இதுபோற் செய்து, மதவிஷயமான போதனைகளும் புகட்டினால் நலமாயிருக்கும். கடைசிநாள் மாலை நான் அவரிடம் விடைபெற்றுக் கொள்ளும் பொழுது, ஹைதர் பாரசீக பாஷையில் பேசும்படி என்னை வேண்டினார். அவருடைய பரிவாரத்தில் சிலருடன் நான் பேசினது அவருக்குத் தெரியும். அவருக்குப் பாரசீக பாஷை பேச

வராது; ஆனால் பிறர் பேசினால் கொஞ்சம் அர்த்தமாகும். நான் அப்படியே பேசி, நான் தூதுசென்ற உட்கருத்தை விளக்கினேன்: "இராஜ்யபரிபாலன விஷயங்களில் ஒரு சம்பந்தமுமில்லாத மதபோதகனைப் பாதிரியாகிய நான், என் தொழிலுக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தைப் பற்றி உம்மிடம் தூதுவந்தது, உமக்கு ஒரு வேளை வியப்பாயிருக்கலாம். என் தூதின் கருத்துச் சமாதானமே என்பதையறிந்து, யுத்தத்தினால் விளையும் பெருங்கேடுகளையும் கஷ்டநிஷ்டூரங்களையும் பயங்கரமான கொடுமைகளையும் உணர்ந்தவனானதால், இவ்வாறு இரண்டு துரைத்தனத்தாருக்குள் யுத்தம் உண்டாவதைத் தடுத்துச் சமாதானத்தை உண்டுபண்ணும் முயற்சியில் தலையிட்டேன். தேசத்துக்கு இதனால் விளையலாகும் நன்மையையும் க்ஷேமத்தையும் கருதியே தூதுக்கு இசைந்தேன். சமாதான மதபோதகனான என் தொழிலுக்குப் பொருந்தியதே இதுவும் என்றெண்ணியே வந்தேன்," என்று சொன்னேன். அதைக் கேட்டு அவர் சந்தோஷப்பட்டு "நல்லதே; மிகவும் நல்லதே! நானும் உம்மைப் போலவே நினைக்கிறேன். இங்கிலீஷ்காரர் என்னுடன் சமாதானமாய் வாழவேண்டுமென்பதுதான், என் மனப்பூர்வமான கோரிக்கை. அவர்கள் சமாதானத்தை நாடிக் கையுதவினால் நான் பின் வாங்கமாட்டேன்" என்று உடனிற் சொன்னார்.

மேலே கூறிய வண்ணம் எழுதியவர் கிறிஸ்தவமத போதகர், இங்கிலீஷ் கம்பெனியாருக்காகத் தூது சென்றவர்; ஹைதரோ, முகம்மதியர், கம்பெனியாரின் விரோதி; இங்கிலீஷ் கம்பெனியார் காரணமாகவே, ஹைதரும் திப்பு சுல்தானும் மாண்டு, அவர் வம்மிசம் அரசிழந்து, நசித்துப் போயிற்று. அங்ஙனமிருந்தும், ஷ்வார்ட்ஸ் பாதிரியார் ஹைதரைப்பற்றிக் கூறியிருப்பது, ஹைதர், உண்மையில் எவ்வளவு நியாயப்பற்றும் பெருந்தன்மையும் ஔதாரியகுணமும் விசாலநோக்கமும் உள்ளவராயிருந்தாரென்பதை நன்கு விளக்கும். அவரது யுத்த சாமர்த்தியத்தையும் வீரத்தையும் அரசியல் திறமையையும், அவரைப் பழிதூற்றும் விரோதிகளுமே ஒப்புக்கொண்டு புகழ்கின்றனர். இதனால், சாதாரணச் சரித்திர நூல்களைப் படித்து, அவற்றின்படியே ஹைதரை மதிப்பிட்டு, அவனை ஒரு கொடிய துராத்மாவாக எண்ணுவது முற்றும் தவறென்பது விளங்கும். இராஜ்யபரிபாலனத்தில் அவர் கண்டிப்பையும் குரூரப் பிரயோகத்தையும் அநா

கரிகமென்று இகழ்வோர், அக்காலத்து வழக்கங்களை மனக்கொள்வதன்றி, இக்காலத்திலுமே, இராணுவச் சட்ட அதிகாரத்தின் கீழ் நடைபெறும் குரூரங்களையும் அழிம்புகளையும் கசையடியையும் அதனினும் மானக்கேடான தண்டனைகளையும் மறவாதிருக்கக்கடவர். இவ்வாறு நிதானித்து நியாயங்கண்டு மதிப்பிடுவோர், மைசூர் ஹைதர் அலியை, தக்ஷிணத்திலே புகழ்பெற்றிலங்கிய வீரர் பலர்க்குள் எல்லாவிதத்தாலும் மிகச் சிறந்த ஒருவராகவே கருதுவர் என்பதில் ஐயப்பாடில்லை.

# தேசமாதா தேவாரம்

ஸ்ரீ. பா. ஆதிமூர்த்தி, காசி.

(பண்—நட்டராகம். "நீளநினைந்தடியேன்" என்றவிதம்.)

நீள நினைந்தடியோம் உனை நித்தலும் கை தொழுவோம்:
வாளன கண்ணுடையாய்! துயர் வாடி வருந்தாமே,
கோளகல் முப்பதெனும் உரை கோடியின் மைந்தர் உளோம்,
ஆளிலை என்றுரையேல், உனதடிமை நிலையகல்வாய். (க)

முப்பது கோடி முகம், இரு முப்பது கோடி புயம்,
ஒப்பரும் வீரமுளாள், அவள் ஓங்கிய பேறுமுளாள்,
தப்பறு வெற்றியினள், இனித் தந்திடுவாள் அபயம்,
செப்பிய பாரதியாள், அவள் சேவை சிறந்திடவே. (உ)

கார்கடல் ஆடையினள், கவினார் மலைக் கச்சுடையாள்,
ஏர் பொழில் மாலையினள், எழிலார் நதிப் பூணுடையாள்,
பார்புகழ் கீர்த்தியினள், எங்கள் பாரதிப் பாவையன்னள்,
பேர்பெறு மைந்துடையாள், அவள் பிள்ளைகள் பெற்றுடையாள். (ங)

இதந்தரு மென்மொழியாள், அறம் ஏந்திய நல்வழியாள்,
பதந்தரு செல்வமுளாள், பல பாஷைகள் பாடிடுவாள்,
மதந்தவம் யோகமுளாள், வளர் மாமுனி யோர்களுளாள்,
சுதந்திர தாகமுளாள், அவள்தோ மகல் தூய்மையுளாள். (ச)

ஈடில் மனோவலியாள், உலகேழும் எதிர்த்தாலும்,
ஆடல் வரப்பொருவாள், ஒரு ஆயுத முந்தரியாள்,
தேடு புகழ்க்குரியாள், எங்கள் தேவி தொழற்குரியாள்,
பாடல் புரிந்திடுவோம், அவள் பாடில் பணிந்திடுவோம். (ரு)

வந்தே மாதரம்.

928

# முருகன் ஆரூடம்

ஒரு சிறு கதை.

ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.

முருகதாசர் பேர்போன ஜோஸ்யர். அவருக்கு முருகக் கடவுள் பிரத்யக்ஷம்; சுப்ரமண்ய உபாசனையே அவர் ஜீவாதாரம். அவருடைய இயற்பெயர் இரங்காராமாநுஜ ஐயங்கார்; ஆனல் அவர் வீட்டு வாசலில், பலவர்ண மைகளில் எழுதித் தொங்கிய பெயர்ப்பலகை இதுவே:

> முருகன் துணை.
>
> முருகன் ஆரூடம் ஆபீஸ்.
>
> சூரிய சந்திரர் நிலை தவறினாலும்
>
> முருகன் ஆரூடம் தவருது!
>
> சாதகங்களும் கணிக்கப்படும்.
>
> கலியுக பிரகஸ்பதி முருகதாஸர்.
>
> முருகன் துணை.

வீட்டின் முன் கூடமே ஆபீசு. அதில் முருகவேளின் படமும் வேலாயுதமும் ஒருபுறமும், மேஜை நாற்காலிகள் ஒருபுறமும் காணலாம். முருகதாஸர் நவநாகரிக ஜோஸ்யர்: ஸூட்டு, தலைப்பாகையோடுதான் வேலை பார்ப்பது; இங்கிலீஷ், தமிழ், தெலுங்குப் பத்திரிகைகளில் செய்யும் விளம்பரங்களே மாதம் ஐம்பது ரூபாய்க்கு மேலாகும். இச் செலவுக்கும், ஐயங்காரின் குடும்ப ஸம்ரக்ஷணைக்கும், முருகன் ஆரூடம் இடம் தந்தது.

ஒரு நாள் பிற்பகல் தாஸர் ஆபீசுக்கு ஒரு கனவான் வேகமாய் வந்தார். அவரும் பட்டு ஸூட்டும் சரிகை வெல்வெட் குல்லாயும் அணிந்திருந்தார். தன் பெயர் சாமிநாதபிள்ளை என்றும், தான் சங்கனூர் ஜமீன்தாரின் காரியஸ்தர் என்றும் சொன்னர்.

முருகதாஸர்:—அப்படியா, ஸந்தோஷம்! தாங்கள் அவசரமாய் வந்த காரியமோ?

சாமிநாதபிள்ளை:—ஜமீன்தாரவர்கள் இன்று ஊரி லிருந்து திருக்கழுக்குன்றம் போகிருர்கள். நாலுமணிக்குக் கார் பட்டணம்

வழியாகப் பாஸாகும். அவர்கள் மகளுக்கு அடுத்த மாசம் கலியாணம். ஜாதகத்தைத் தாங்கள் கொஞ்சம் பார்க்க வேண்டுமாம். அவர்கள் டீபன் சாப்பிடும் ஹோட்டலில் தங்களைக் கால்மணி நேரம் சந்திக்க விரும்புகிறார்கள்.

முரு :—நாம் அப்படி வெளியே போகும் வழக்க மில்லை. ஐம்பது ரூபாயாவது தருவதா யிருந்தால்,—

சாமி :—அது பாதக மில்லை. தங்கள் இஷ்டம்போலாகட்டும்.

மணி மூன்றரை யாகிவிட்டபடியால், முருகதாஸர் சாமிநாதபிள்ளையுடன் புறப்பட்டார். அடுத்த மௌண்ட்ரோட்டிலுள்ள 'ஸந்தோஷபவனம்' என்ற ஹோட்டலுக்குச் சென்று, அதில் ஒரு தனி அறையை ஜமீன்தாருக் கென்று பிள்ளை திட்டம் செய்து கொண்டார். பிறகு பிள்ளையும் முருகதாஸரும் முதலில் சிற்றுண்டி உண்டார்கள். அப்பால், ஜமீன்தார் ஒரு மோதிரம் வாங்க விரும்பினதால், தான்போய் அதற்கு ஏற்பாடு செய்துவிட்டுப் பத்து நிமிஷத்தில் திரும்புவதாயும், அதற்குள் ஜமீன்தார் வந்து விட்டால், அவ்விடமே வருவா ரென்றும் சொல்லி, பிள்ளை வெளியே போனார். முருகதாஸர், சிற்றுண்டி ஜரிக்கத் தாம்பூலம் மென்றுகொண் டிருந்தார்.

சிறிது நேரத்தில், "இதுதானா சங்கனூர் ஜமீன்தாரவர்கள் வரும் இடம் ?" என்று கேட்டுக்கொண்டு, ஒருவர் உள்ளேவந்தார்.

"ஆமாம் ; தாங்கள் ஆர், தெரிய வில்லையே" என்றார் முருகதாஸர். "நாமிருக்கிறது ஆற்சர் ஷாப்புங்க ; ஜமீன்தாருக்கு மோதிரம் வேணுமின்னு செக்ரடரி வந்து சொன்னாருங்க ; கொண்டு வந்தேங்க" என்று சொல்லி விட்டு, வந்தவரும் ஒரு நாற்காலியில் உட்கார்ந்தார்.

"எங்கே, மோதிரத்தை எடுங்கள் பார்ப்போம்" என்று ஜோஸ்யர் கேட்க, வந்தவர் ஒரு சிறு செப்பைத் திறந்து, இரண்டு காரட்டுக்குக் குறையாத பெரிய வைரமோதிரத்தை எடுத்துக் கொடுத்தார். ஜோஸ்யர் அதை வாங்கிப் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, "இன்னும் ஜமீன்தாரவர்கள் வரவில்லையா ? காரைக் கண்டதாகச் சொன்னார்களே" என்று கேட்டுக்கொண்டு, சாமிநாதபிள்ளை திரும்பி வந்தார். நகைக் கடைக்காரரைப் பார்த்தவுடன், அவர் : "ஸார் ! மானேஜர் உங்களை வரச்சொன்னார். இன்னும் ஒரு மோதிரம் இருக்கிறதாம் ; அதையும் ஜமீன்தாரவர்கள் பார்வைக்கு அனுப்ப வேண்டுமாம் ; தங்களை ஒரு நிமிஷம் வந்து போகச் சொல்கிறார்" என்றார்.

"மோதிரம் பத்திரங்க" என்று சொல்லிவிட்டு, வந்தவர் மீண்டும் அடுத்துள்ள தம் கடைக்கு ஓடினர்.

"எங்கே அதைக் கொடுங்கள் பார்ப்போம்" என்று, சாமிநாதபிள்ளை, ஜோஸ்யர் கையிலிருந்த மோதிரத்தை வாங்கிப் பார்த்த வுடனே: "சீ! சீ! இதென்ன முட்டாள் தனம்! நான் சொன்னது பச்சை, அல்லது நீலம்; அவர்கள் வைரமோதிரத்தை அனுப்பி யிருக்கிறார்கள். மற்றொன்றும் இப்படியே இருக்குமோ என்னவோ? அதோ! கார் வந்துவிட்டது, இல்லை வேறு ஏதோ கார். நான்போய் இதைக் கொடுத்து விட்டு, ஒரு நிமிஷத்தில் வந்துவிடுகிறேன். ஜமீன்தாரவர்கள் வரும் டைம் ஆய்விட்டது" என்று சொல்லிக்கொண்டே, அந்த மோதிரத்தைக் கொண்டு வெளியே ஓடினர்.

பின்னும் பத்து நிமிஷத்தில், கடைக்காரர் மற்றொரு மோதிரத்துடன் திரும்பி வந்தார். வந்தவர் முருகதாசரைப் பார்த்து: "செக்ரடரியவாள் எங்கேங்க?" என்று கேட்க, ஜோஸ்யர், "உங்கள் ஷாப்புக்குத்தானே போனர். பச்சையோ நீலக்கல்லோ வேணுமென்று அவர் சொன்னாராம், நீங்கள் வைரத்தைக்கொண்டு வந்தீர்களாம். எதிரே காண வில்லையா?" என்று பதிற் சொன்னர்.

"நாம் காண வில்லையே" என்றார் கடைக்காரர்.

இருவரும் ஊர்வம்பளந்துகொண்டு கொஞ்சநேரம் காத்திருந்தார்கள்; ஜமீன்தாரும் வரவில்லை, அவர் காரியஸ்தரும் வரவில்லை. பிறகு இருவரும் நகை ஷாப்புக்குச் செல்ல, சாமிநாதபிள்ளை அங்கும் வரவில்லை என்பது வெளியாயிற்று. காப்பிஹோட்டல்காரர், தனக்கு ரூ. 2-3-9 வரவேண்டு மென்று முருகதாஸரைத் தொடர்ந்தார். ஆனல், நகை ஷாப்பு மானேஜர், ரூ. 2370 விலை மதிப்புள்ள வைரமோதிரத்தைத் தமது குமாஸ்தா ஜோஸ்யர் கையிலே கொடுத்ததால், அந்த மோதிரத்துக்கு அவரே பொறுப்பாளி என்று, அவரைப் போலீஸார் வசம் ஒப்பித்துவிட்டார். பிறகு சாமிநாதபிள்ளையைத் தேடத் தொடங்கினர்; இன்னும் அகப்பட வில்லை. சங்கனூர் ஜமீன்தார் யார்? நீர்தான் சொல்லுமேன், நான் அறியேன்.

# ஜப்பானிய கலாசாலைகள்*

ஸ்ரீ. வே. நாராயணையர், M.A., M.L., சென்னை.

கி.பி. 1868-ம் வருஷ முதல் ஜப்பானில் ஒரு புதிய உணர்ச்சியும் இயக்கமும் உண்டாயின. அந்தப் புதிய கிளர்ச்சியால் முன்னிருந்த புராதன ஏற்பாடுகள் சிதறுண்டு போகவே, மற்றைத் துறைகளிற் போலக் கல்வித் துறையிலும் மேனாட்டு நாகரிகம் அதிகம் பரவத்தொடங்கியது. மற்றைச் சீர்திருத்தங்களைப் போலவே, கல்வி முறையிலும் அரசாங்கத்தாரே சீர்திருத்தங்களைச் செய்தனர். 1872-ம் வருஷம், சக்கிரவர்த்தியின் ஆக்ஞையொன்று புதிதாய்ப் பிறந்தது. அது வருமாறு:—

"எமது நாட்டில் எந்தக் கிராமத்திலும் படிக்கத் தெரியாத குடும்பம் இருத்தல் கூடாது; எந்தக் குடும்பத்திலும் படிப்பறியாத பிரஜை இருத்தல் கூடாது. இதுவே எமது நோக்கம். இதற்கு வேண்டிய வழிகளில் கல்வியைப் பரவச் செய்தல் வேண்டும்."

ஆரம்பம்.—இக்கட்டளைக் கிணங்க, நாட்டை எட்டுக் கல்வி இலாகாக்களாகப் பிரித்தனர்; இவற்றில் 32 மத்திய தரக் கல்விச் சாலைகளையும், 6720 அடிப்படைக் கல்விச் சாலைகளையும், ஸ்தாபித்தனர். அதன்பொருட்டு, அமெரிக்காவிலே படிப்பு முறையிற் பயிற்சிபெற்ற டாக்டர் டேவிட் மர்ரே என்பவரை வரவழைத்து, அவரைக் கல்வி மந்திரியாக நியமித்தனர். அவருடைய முயற்சியாலேயே கல்விச் சாலைகள் ஒழுங்கு படுத்தப்பட்டன.

(1) அடிப்படைக் கல்விச்சாலைகள்.—இருவகை:—

* தமிழ்நேசன் பத்திரிகையி லிருந்து சுருக்கி எழுதியது—
பட்ம் பர்.

(a) சாதாரண வகை.—இதில் 6 வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்குள்ள கட்டாயப்படிப்புண்டு. "ஆறு வயதான பின்பு, தகுந்த காரணங்கள் இருந்தாலொழிய, குழந்தைகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பாமல் இருக்கக்கூடாது" என்பது விதி. நோய், தரித்திரம், மூளைக் கோளாறு, இவை மட்டுமே தகுந்த காரணங்களாவன. விசேஷ உத்திரவுபெற்று, குழந்தைகளை வீட்டிலேயே கற்பிக்கலாம் என்ற விதியொன்று முண்டு.

வருஷந்தோறும் கல்வி இலாகா உத்தியோகஸ்தர், தமது அதிகார எல்லையி லுள்ள குழந்தைகளைக் கணக்கிட்டு, அவர்களைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப வேண்டும் என்ற அறிக்கையைத் தாய் தந்தையருக்கு அனுப்புவார். அதின்படி அனுப்பாதிருக்க வேண்டுமெனில் விசேஷ உத்திரவு பெறவேண்டும்.

(b) மேல்வகை.—இவ்விதச் சாதாரணப்படிப்பு 6 வருஷ காலமானதும், மேல்வகுப்புத் தொடங்கும். கீழ் வகுப்போடு நிறுத்த விரும்புவோருக்கு அவசியமான வற்றை, ஒரு வருஷத்தில் கற்றுக் கொடுக்கின்றனர். மற்றவருக்கு இம்மேல்வகுப்பு இரண்டு மூன்று வருஷங்களாகும்.

கீழ் வகுப்பில் ஆண் பெண்கள் சேர்ந்து வாசிக்கக் கூடும். அதில், ஜப்பானிய பாஷை, கணிதம், சித்திரவேலை, கீதம், தேகப்பயிற்சி இவை பாடங்கள். மேல்வகுப்பில் சரித்திரம், பூகோளம்,; இயற்கைத்தத்துவம், பாடங்கள்.

இருவகுப்புக்களிலும், ஒருவாரத்திற்கு 20 மணி முதல் 30 மணி நேரம் வேலை யிருக்கும்; ஆயினும், கீழ் வகுப்பில் ஒவ்வொரு மணிக்கும் 45 நிமிஷமே பாடம் சொல்லுவதும், இடையிடையே 15 நிமிஷம் குழந்தைகளை சுயேச்சைப்படி விடுவதும் உண்டு.

கீழ்வகுப்புப் பள்ளிக்கூடம் ஒவ்வொரு ஊரிலும் உண்டு; இரண்டு மூன்று ஊர்கள் சேர்ந்து ஒரு மேல் வகுப்புப் பள்ளிக்கூடத்தை நடத்தும். கீழ்வகுப்புப் பள்ளிக்கூடங்களில் அதிகம் சம்பளம் வாங்குவ தில்லை; மேல் வகுப்புப் பள்ளிக்கூடங்களிலும் அநேகமாய் அப்படியே; ஒருவேளை சம்பளம் வாங்கினாலும், கீழ்வகுப்புப் பள்ளிக்கூடங்களில் 6-8 அணாவுக்கு மேலிராது; மேல் வகுப்புகளுக்கு 1 ரூபாய்க்கு மேலிராது. "சம்பளம் வாங்குவதற்குக் கல்வி இலாகாவின் விசேஷ அநுமதி பெற வேண்டும்" என்ற நிபந்தனையுமுண்டு. தற்காலம் நூற்றுக்கு

74 பள்ளிக்கூடங்கள் அவ்வாறு அநுமதிபெற்றுள்ளன.

1909-ம் வருஷத்தியெடுத்த கணக்கின்படி, ஜப்பானில், அடிப்படைக் கல்விச்சாலைகள் 25,625; இவற்றில் சர்க்கார்க் கல்விச்சாலைகள் 4; சொந்தக் கல்விச்சாலைகள் 164; பொது ஜனக் கல்விச்சாலைகள் 25,457; பள்ளி செல்லுதற்குரிய மாணவர் 7,731,938; பள்ளிக்குப் போவார் 76,13,367.

(2) மத்தியதரக் கல்விச் சாலைகள்.—1886-ம் வருஷத்திய ராஜாக்ஞையின்படி, இவைகள் "ஆண்பாலார்க்குரிய மேற்படிப்பை அளிப்பவை"யாக அமைக்கப்பட்டன. மேற்குறித்த ஆக்ஞையின்படி தேசத்தைப் பல பிரிவுகளாகப் பிரித்து, ஒவ்வொரு பிரிவிலும் ஒரே ஒரு மத்தியதரக் கல்விச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. 1891-ம் வருஷத்தில் இந்த நிபந்தனை மாறி, ஒவ்வொரு பிரிவிலும் அநேக கல்விச்சாலைகள் கிளம்பின. இப்பொழுதுள்ள மத்தியதரக் கல்விச்சாலைகள் 1899-ம் வருஷத்திய ஆக்ஞையின்படி நடைபெறுவன.

இவை சுயேச்சைப்படி நடத்தக்கூடாதனவாக இருத்தலின், இக் கலாசாலைகள் அதிகம் பயன்தர இடமில்லை. மத்தியதரக் கல்விச்சாலை யொன்றை ஸ்தாபிக்க, கல்வி மந்திரியின் அநுமதி வேண்டும். "பள்ளிக்கூடத்தின் ஸ்தலம், அதின் விஸ்தீரணம், அங்குள்ள தண்ணீர் வசதி, இவற்றை விளக்கி மனுக்கொடுத்து, உத்திரவு பெறவேண்டும்; கல்வி இலாகாவின் விதிகளின்படி நடத்தவேண்டும்.

இக் கல்விச்சாலைகளில் 5 வருஷம் படிக்க வேண்டும். கீழ்வகுப்புச் சாலையில் 6 வருஷங்களானதும் இவற்றில் சேரலாமெனினும், சேருமுன் ஒரு பரிக்ஷை உண்டு. அதனால் நூற்றிற்குப் பத்து மாணவர்களே இவற்றில் சேர முடியும். இவ்வகைக் கல்விச்சாலைகள் 321 மட்டுமே இருக்கின்றன; அவற்றில் சர்க்கார் ஸ்தாபனங்கள் 2, சொந்த ஸ்தாபனங்கள் 77, பொதுஜன ஸ்தாபனங்கள் 242; படிப்பவர் 1,41,215; மாதச்சம்பளம் ரூ. 3 முதல் 4½ வரை ஒடும். இவற்றிற் படித்துத் தேர்ந்தவர் வேறு பரிக்ஷையொன்றுமின்றி, சர்க்கார் உத்தியோகத்தில் குமாஸ்தாக்களாக அமர முடியும்; ஆகவே, இவற்றில் படித்தவர்களில் மூவரில் இருவர், உத்தியோகஸ்தராகின்றனர்.

ஜப்பானிய பாஷை, சீன பாஷை, ஆங்கிலம், பிரஞ்சு, ஜெர்மன், இப்பாஷைகளில் ஒன்றும், சரித்திரம், பூகோளம், கணிதம், இயற்கைத் தத்துவம், ரசாயனம், சித்திரவேலை, தேகப்பயிற்சி, நன்னடத்தை, இவைகளும் போதிக்கப்படு

கின்றன. வாரத்திற்கு 28–30 மணிநேரம் பாடம். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் எத்தனை மாணவர்கள் வாசிக்கலாம் என்று, கல்விமந்திரி நிர்ணயிப்பார்; சாதாரணமாக, 400 மாணவர்கள் வாசிக்கலாம்; விசேஷ அநுமதியின் பேரில், 600 வரை இருக்கக்கூடும். ஆயினும், வகுப்புக்கு 50 மாணவருக்குமேல் இருக்கக்கூடாது. இந்த நிபந்தனையை மீறிய பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் மாணவரை அறிந்து பழகுவது அசாத்தியமாம்.

(3) உயர்தரக்கல்விச்சாலைகள்:—இவை மூவகைப்படும். (க) உபாத்தியாயர் பள்ளிக்கூடம் (Normal School) 1872-ம் வருஷத்தில் டோகியோ தலைநகரில் உபாத்தியாயர் பள்ளிக்கூட மொன்று ஸ்தாபிக்கப்பட்டது. இப்பொழுதோ, ஒவ்வொரு பிரிவிலும் இவ்விதப் பள்ளிக்கூடமொன்றுண்டு. இங்கே உபாத்தியாயராக விரும்பும் மாணவர், குழந்தைகளுக்குப் பாடங்கள் சொல்லக் கற்கின்றனர். படிப்பு 4 வருஷ காலம்; சமீபத்திலே, புருஷருக்கு வேறு, ஸ்திரீகளுக்கு வேறாக, பள்ளிக்கூடங்கள் வேண்டுமென்ற நோக்கத்துடன், ஒவ்வொரு பிரிவிலும் இரண்டு பள்ளிக்கூடங்கள் நடத்த முயன்றுவருகின்றனர். 'கின்டர்கார்டன்' உபாத்தியாயர்களைத் தயாரிக்கும் விசேஷ வகுப்புக்களும் இவற்றில் உண்டு. இவை இரண்டு விதமாகும்: (1) நான்கு வருஷப் படிப்புள்ளது; இவற்றில் ஆண் பெண் இருபாலரும் வாசிக்கலாம். அடிப்படைக் கல்விச்சாலையில் வாசித்துத் தேர்ந்தபின், இதில் சேர வேண்டும். (2) ஒரு வருஷப் படிப்பு; மத்தியதரக் கல்விச்சாலையிற் படித்துத் தேர்ந்த பின்பே சேரக்கூடும்.

'நார்மல்' பள்ளிக் கூடங்கள் ஆண்பாலருக்கு 48, பெண்டிருக்கு 36, பொது 9, ஆக 93 இருக்கின்றன. இவற்றில் படிப்பவர் ஆண்மக்கள் 16,923; பெண்டிர் 7,734.

உபாத்தியாய மாணவருக் குள்ள பள்ளிக்கூடங்களுக்கு உதவியாக, அம்மாணவர் கற்றுக்கொடுக்கும் அடிப்படைக் கல்விச்சாலைகள் அவற்றோடு சேர இருப்பன. இவை தவிர, சாதாரணப் பள்ளிக்கூடங்கள் சிலவற்றில், உபாத்தியாய வழியில் மாணவர்களைப் பழக்கும் வகுப்புக்களும் உண்டு. ஆகவே, இவ் வகைப் பள்ளிக்கூடங்களில், ஜப்பானிய பாஷை, இலக்கியம், கணிதம், சரித்திரம், பூகோளம், ஆங்கிலம், இயற்கைத் தத்துவம், ரசாயனம் முதலிய கற்பிக்கப்படும் வகுப்பு ஒன்று;

உபாத்தியாய முறையில் மாணவர்களைத் தயாரிக்கும் வகுப்பு ஒன்று; மேற்படிப்புக் கற்பிக்கப்படும் விசேஷ வகுப்பு ஒன்று; ஆக மூன்று பிரிவுகள் இருக்கக்கூடும். இப் பள்ளிக்கூடங்களில் வாசிக்க மூன்று வருஷம் பிடிக்கும்; விசேஷ வகுப்பில் வாசிப்பதானால், ஒரு வருஷம் அதிகம் வேண்டும். இவ்விதப் பள்ளிக்கூடங்களில் 1061 புருஷர் களும், 693 பெண்டிரும் வாசிக்கின்றனர். பள்ளிக்கூடங் கள் ஆண்பாலருக்கு 2, பெண்பாலருக்கு 2, ஆக 4, சர்க்கா ரால் நடத்தப்படுகின்றன. இவற்றை உயர்தர 'நார்மல்' பள்ளிக்கூடங்கள் என்னலாம்.

(உ) உயர்தரப் பள்ளிக்கூடங்கள்.—இவை சர்வ கலாசாலை செல்ல விரும்புவோரைத் தயாரிப்பதற்கும், விசேஷப் படிப்பு வேண்டுவோருக்காகவும் ஏற்பட்டவை; மூன்று வருஷப்படிப்புக் கொண்டவை; இவற்றிற் சேரு முன் பரிக்ஷையுண்டு; ஆதலின், மத்தியதரக் கல்விச் சாலை களில் படித்தவரில் அநேகர், இங்கு வர முடிவ தில்லை. நூற்றுக்கு 21 மட்டுமே வருகின்றனர்.

இவற்றில் கற்பிக்கப்படும் படிப்பு மூன்று பிரிவுள்ள தாகும்: (1) இலக்கியம் (2) சாஸ்திரம் (3) வைத்தியம் என்பன. மேனாட்டுப் பாஷைகளில் தேர்ச்சி, இன்றியமை யாதது. உதாரணமாக, வைத்தியங்கற்போர், வாரத்திற்கு 15 மணிநேரம், ஜெர்மன்பாஷை கற்கவேண்டும். இப்படி இருந் தும் ஜப்பானியர் மேனாட்டுப் பாஷைகளில் தேர்ச்சி யடைவ தில்லை. மற்றைய இலக்கிய சாஸ்திரப் பிரிவுகளிலும், ஆங்கிலமோ ஜெர்மனோ, பிரஞ்சோ, வாரத்திற்கு 9 மணி நேரம் கற்கவேண்டும். ஜப்பானிய பாஷை, மேனாட்டுப் பாஷையொன்று, கணிதம், இயற்கைத்தத்துவம், ரசாயனம், பூதத்துவம், சுரங்க சாஸ்திரம், பயிரிடுதல், மிருக சாஸ் திரம், தர்க்கம், சரித்திரம், மனத்தின் இயல், தேகப்பயிற்சி, இலக்கியம், முதலியவை கற்பிக்கப்படுகின்றன.

இவ்விதப் பள்ளிக்கூடங்கள் 8 உள்ளன; இவற்றில் வருஷந்தோறும் 1800 பேர் படிக்கின்றனர். கல்விக்கு வேண்டிய சாதனங்கள் அளித்துக் கற்றுக்கொடுக்க வரு ஷத்திற்கு ரூ. 55 செலுத்தவேண்டும். இவற்றில் தேர்ந்த வரே சர்வகலாசாலைக் குரியவர்; இவர்களுக்கு இடங் கொடுத்த பின்புதான், மற்றவர்களைச் சர்வகலாசாலைகளில் சேர்த்துக் கொள்வார்கள்.

இவ்வகைப் பள்ளிக்கூடங்கள் சர்க்காரால் மட்டுமே நடத்தப் படலாமாகையாலும், இவற்றில் தேறியவர் சேர்வ

தற்குச் சர்வகலாசாலைகள் நான்கே உள்ளன வாதலாலும், இவற்றிலும் மாணவர்களைப் பரிக்ஷித்தே எடுத்துக்கொள்கின்றனர்; ஆகவே, சேர விரும்புவோர் 100 ஆயின் 21 மட்டுமே சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். மற்றவருக்கு இவ்விதப் பள்ளிக்கூடங்களில் படிக்க வழி யில்லை.

சட்டக்கலாசாலைகள்.–சர்வகலாசாலையைச் சேர்ந்தவை சட்டக்கலாசாலைகள்; முன்பு, இவற்றில் படித்தவர், வேறு பரிக்ஷை யின்றி வக்கீல்களாக அமர்தல் கூடும். 1914-ம் வருஷத்திற்குப் பிறகு, வக்கீல்க ளாகுமுன் பரிக்ஷை யொன்று ஏற்படுத்தப்பட் டிருக்கின்றது. சட்டப் படிப்பு மூன்று வருஷகாலமாகும்; மற்றைய கலாசாலைகளிலும் படிப்பு மூன்று வருஷகாலமாகும். வைத்தியப் படிப்புக்கு மட்டும் 4 வருஷ காலம். கலாசாலைகளைத் தவிர, சர்வகலாசாலை மண்டபங்கள் (University Halls) எனப்படும் ஆராய்ச்சிப் பள்ளிக்கூடங்களு முண்டு.

(ங) சர்வ கலாசாலைகள்.—இவை "சகல சாஸ்திரங்களையும் கற்பித்து, நுண்ணிய ஆராய்ச்சிக்கும் உதவுவன."

டோகியோ சர்வகலாசாலை:—தலை நகராகிய 'டோகியோ'வில், 1877-ம் வருஷத்தில் சர்வகலாசாலை ஸ்தாபிக்கப் பட்டது. இங்கு ஆறுகலைகள் கற்பிக்கப் படுகின்றன: சட்டம், வைத்தியம், சாஸ்திரம் (Science), வியவசாயம், கட்டடவேலை (Engineering), இலக்கியம் (Literature). சர்வகலாசாலைப் புஸ்தகசாலையில் 5,89,000 புஸ்தகங்கள் உண்டு; அவற்றில் 2,62,000 ஐரோப்பிய புஸ்தகங்கள்; வைத்திய கலாசாலைக்கு அநுகுணமாக 'ஆசுபத்திரி' அமைக்கப்பட் டிருக்கின்றது.

க்கெயோடோ சர்வகலாசாலை:—1897-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது; கற்பிக்கப்படும் கலைகள் ஐந்து; அவை யாவன:—சட்டம், வைத்தியம், சாஸ்திரம், கட்டடவேலை, இலக்கியம். புஸ்தக சாலையில் 36,800 புஸ்தகங்கள்; வைத்திய கலாசாலையோடு ஒரு ஆசுபத்திரியுண்டு.

தோஹூகு சர்வகலாசாலை:—1907-ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது; சாஸ்திரம், வைத்தியம், கட்டடவேலை, வியவசாயம், ஆக நான்கு கலைகள்; 93,000 புஸ்தகங்கள்; ஆசுபத்திரி. இங்கு வியவசாயக் கலாசாலை மிகப் பெரிது; சர்வகலாசாலையி லுள்ள 1781 மாணவரில், வியவசாயம் படிப்பவர் 845. இந்த 'தோஹூகு' சர்வகலாசாலையே 1913-ம் வருஷத்தில் 3 ஸ்திரீகளை விசேஷக் கல்வி கற்கும் மாணவராகச் சேர்த்து, புதியவழி காட்டியது.

கையுஷு சர்வகலாசாலை :—1910-ம் வருஷம் ஸ்தாபனம்; வைத்தியமும் கட்டடவேலையுமே கற்பிக்கப்படுகின்றன. நல்லதோர் ஆசுபத்திரி யுண்டு.

ஆராய்ச்சி வகுப்பு :—சர்வகலாசாலை ஆராய்ச்சி மண்டபங்களில் மாணவராக இருப்பவர் சம்பளம் செலுத்த வேண்டிய தில்லை. ஆராய்ச்சி சாதனங்களும் அவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுகின்றன. புத்திமான்களுக்கு உதவியாக, உபகாரச் சம்பளங்களும் கொடுக்கப்படுகின்றன. முதல் இரண்டு ஆண்டுகள் உபாத்தியாயர் மாணவர்களை ஆராய்ச்சி முறைகளில் பழக்குகின்றனர். பிறகு மூன்று ஆண்டுகள் தனி வேலை. இறுதியில் தத்தம் ஆராய்ச்சியை வியாசரூபமாக அமைத்துப் பரீக்ஷிக்கப்பட்டபின், தேர்ந்தவர்களுக்கு 'டாக்டர்' பட்டத்துக்குச் சமமான "ஹகூஷி" என்ற பட்டம் அளிக்கப்படும். ஐந்து வருஷமானபின் சர்வகலாசாலையை விட்டு வெளிச்செல்ல வேண்டும்.

கலாசாலைகள் :—இவற்றில் வாசிப்பவர் வருஷத்திற்கு ரூ 60 சம்பளம் செலுத்த வேண்டும்; இது, படிப்புக்கு வேண்டிய சாதனங்களின் கிரயம் உள்பட; ஏழை மாணவருக்கு உபகாரச் சம்பளம் அளிக்கப் படுகின்றது; (Honors) 'ஹானேர்ஸ்' என்ற ஆழ்ந்த கல்வி கற்பவர், சம்பளம் செலுத்த வேண்டிய தில்லை.

'டோகியோ' சர்வகலாசாலைக்கு ரூ 450 லக்ஷமும், 'கையோடோ' சர்வகலாசாலைக்கு ரூ 300 லக்ஷமும், மூலதனம் வைக்கவேண்டு மென்று, ராஜ்யஸபையார் 1906-ம் வருஷம் தீர்மானிக்கப் பட்டும், இன்னும் மூலதனம் யாதும் பிரத்யேகமாய்ச் சர்க்காரால் வைக்கப்பட வில்லை.

ஒவ்வொரு சர்வகலாசாலைக்கும் அத்யக்ஷரைச் சக்கிரவர்த்தியார் நியமிக்கின்றனர்; அவரின் கீழ் ஒவ்வொரு கலாசாலைக்கும் ஒரு தலைவர் கல்வி மந்திரியால் நியமிக்கப்படுகின்றார் : ஒவ்வொரு சர்வகலாசாலைக்கும் மந்திராலோசனை சபை (Senate) ஒன்று உண்டு; அதின் அக்கிராசனாதிபதி சர்வகலாசாலையின் அதிபதி. அங்கத்தினர், கலாசாலைத் தலைவர்களும், கலாசாலைக்கொருவராகக் கலாசாலை உபந்நியாசகர்களால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுமாவர்.

கலாசாலைகளில் படித்துத் தேர்ந்தவர் 'கக்ஷகூஷி' என்ற பட்டம் பெறுவர். இப்பட்டம் அளிக்கும் சொந்த ஸ்தாபனச் சர்வகலாசாலைகளும் உண்டு. 'டோகியோ'வில்

'வாஸிடா' 'கியோ' 'சைக்கியோ' எனப்படும் மூன்றும், 'கையோடோ'வில் 'டோஷியா' என்பதும், இவ்வகைப் பட்டன. இவை தவிர, கைத்தொழில் முதலான (Technical) 'டெக்னிகல்' பள்ளிக்கூடங்களும் உண்டு. இவற்றில் வியவசாய மார்க்கங்கள், காடு வளர்க்கும் வேலை (Forestry), பட்டுத் தயாரித்தல் (Sericulture), வர்த்தகம், துணி நெசவுத் தொழில், சுரங்கவேலை, வைத்தியம், முதலிய வற்றைக் கற்பிக்கின்றனர். இவ்விதப் பள்ளிக்கூடங்கள் 18 சர்க்காரால் நடத்தப்படுகின்றன. மத்தியதரக் கல்விச் சாலைகளிற் படித்துத் தேர்ந்தவரை, இவற்றிற் சேர்த்துக்கொள்கின்றனர். சேருமுன் சில பாடங்களில் பரிக்ஷையு முண்டு. இப் பள்ளிக்கூடங்களில் படிப்பதற்கு, 3, 4 வருஷங்கள் பிடிக்கும்.

பெண் கல்வி.—கிறிஸ்தவப் பாதிரிமாரின் முயற்சியின்றேல், ஜப்பானில் பெண்கல்வி மிகக் குறைவுபட்டிருக்கும். பெண்பாலார்க்குத் தனியே கல்விச்சாலைகள் அமைப்பதற்கு வேண்டிய பொருள் கொடுப்பாரில்லை. ஆகவே பெண்பாலர் மேற்படிப்புக்கு வேண்டிய சௌகரியங்கள் இல்லை. அடிப்படைக் கல்விச்சாலைகளும், 'டெக்னிகல்', 'நார்மல்' பள்ளிக்கூடங்களும், உயர்தரக் கல்விச்சாலைகளும், பெண்பாலருக்கென்று தனியே ஏற்பட்டிருப்பினும், சர்க்கார்ச் சர்வகலாசாலைகளில் பெண்கள் சேர மார்க்க மில்லை. "ஜப்பான் ஸ்திரீகளின் சர்வகலாசாலை" (Japan University for Women), யூனியன் கிறிஸ்தியன் சர்வகலாசாலை, 'கோப்' கலாசாலை, என்ற இம் மூன்றுமே, பெண்மக்களுக்கு உதவும் கலாசாலைகளை உடையன.


# குறள் நானூறு

எளிய கருத்துரை, அரும்பதவுரை, இங்கிலீஷ் கருத்துரை, அட்டவணை, அகராதிகளுடன்

## வெளிவந்து விட்டது!!

பேப்பர் ராப்பர்0—4—0; டக்ஸீன்-0—6—0; காலிகோ கில்ட்-0—8—0; தபால் கூலி-0—1—0

பஞ்சாமிர்தம் ஆபீசு—மயிலாப்பூர், சென்னை.

# சீமைக் கடிதம்

(881-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள்,
(B. A. Hons.) லண்டன்

இந்த வருஷம் புதிதாய் இங்கு வந்திறங்கிய நம் தேசத்துப் பெண்கள் சிலருக்கு நான் வழிகாட்டியாகி, ஊர் விநோதங்களைப் பார்க்கலே, போனவாரம் முழுவதும் பொழுது சரியாயிருந்தது, பட்டணத்தை நெடுகப் பார்க்க வேண்டி, 'பஸ்'ஸிலேறி, முக்கியமாயுள்ள வீதிகளையெல்லாம் சுற்றினோம். 'க்யூ' தோட்டத்தையும், 'ஹைட்' தோட்டத்தையும், பிரிடிஷ் 'மூஸிய'த்தையும், வேறு சில மூஸியங்களையும், சித்திர சாலைகளையும், போய்ப் பார்த்தோம். "இந்தச் சீமை உனக்கு எப்படிப் பிடித்திருக்கிறது? லண்டன் நீ நினைத்தபடியிருக்கிறதா? இங்குள்ள காட்சிகளையெல்லாம் பார்த்து, உனக்கு என்ன தோன்றுகிறது?" என்று, போனவருஷம் என்னை யாராவது கேட்டபோது, நிலைப்பேர்த்தியும் ஆவலும் ஏக்கமும் என் மனத்தில் குழப்ப, அக் கேள்விகளுக்குத் தக்க பதிலேதும் எனக்குச் சொல்லத் தோன்றாமலிருந்ததை நினைத்து, நான் என் சிநேகிதிகளை ஒன்றும் தூண்டித் துளைத்துக் கேட்கவில்லை. அவர்கள் அபிப்பிராயம் எப்படியுள்ளதோ, அறியேன்; லண்டனைப்பற்றி எனக்குள்ள சில அநுபவங்களை மட்டும் சொல்கிறேன்.

இத்தேசத்துக் குளிர் தாங்காது வருந்துபவர்கள், வெந்நீரைவிட்டு, பச்சைத் தண்ணீரில் ஸ்நானம் செய்வதே நலமாம்; கூசும் மனத்தை வசக்கித் திடப்படுத்துவதற்கு, லண்டன்மாநகரம் வெகு தக்கதே. லண்டன் பல பட்டணங்கள் சேர்ந்த பெரும் பட்டணமென்றும்; கரிக்கோலம் பூண்டதென்றும், எங்கும் ஜனநெருக்கமும் சந்தடியும் அவசரமும் அதிகமென்றும் நான் கேட்டிருந்தும்,

அவற்றை யெல்லாம் நான் உள்ளபடி மனத்தில் உருவகப் படுத்திக் கொள்ள வில்லை; அவை ஒன்றுக்கொன்று தகவல் இல்லாதவைபோலப் பாவித்திருந்தேன். ஓயாமல், தெருக்கள் ஒன்றுக்குள் ஒன்று நுழைந்து சிக்கிப் பார்ந்து கிடப்பதையும்; ஒன்றுக்கொன்று வித்தியாச மின்றி பல அடுக்குமாடிகள் சேர்த்துக் கட்டிய கட்டடங்கள், அடைத்த வாயிற்கதவுகளுடன், செங்குத்தான பெருஞ் சுவர்களாய் வீதியைக் காத்து நிற்பதையும்; மழைபெய்து கரிவழியும், வீதிகளில் அனைவரும் ஒரே ரீதியாய் மங்கிய வர்ண உடைகள் தரித்து, தணிந்த குரலும், முத்திரை யிடப்பட்டது போன்ற புன்னகையும், விரைந்த நடையும் உள்ளவர்களாய், ஜனங்கள் கூட்டம் கூட்டமாய்ச் சாய்ந்து, தெருக்களைக் கடக்க வேண்டியபோது பஸ்களின் இடையே கூடிப் பாயும் பாய்ச்சலையும்; யந்திரத் தூண் பெட்டிகளிற் காசை யெறிந்து, 'டிகெட்' வாங்கிக்கொண்டு, மின்சாரத் தூக்குக்கள் வழியாய் அதபாதாளத்தில் இறங்கி, தரைக் கீழ் ரயில் மார்க்கமாய்ப் பிரயாணம் செய்யும் தீவிரத்தையும்; லண்டன் மேலுலகிலும் கீழுலகிலும், எங்கும் கடை சாமான்களின் நயத்தை எடுத்துரைக்கும் விளம்பரங்கள்

---

SRINIVASA VARADACHARI & Co.,

*Printers & Booksellers,*

MOUNT ROAD, MADRAS.

## தமிழ்ப் பிரசுரங்கள்.

1. நந்தன் சரித்திரம்.—ஆசிரியர் T. V. ஆராவமுத அய்யங்கார் அவர்கள், M. A. விலை அணா 10.

2. போஜ சரித்திரம்.—ஆசிரியர் K. S. ராமஸ்வாமி சாஸ்திரி அவர்கள், B. A., B. L., ஸப்ஜட்ஜ், நாகபட்டணம். விலை அணா 10.

3. ராஜராஜசோழன் I.–ஆசிரியர் P. V. ஜகதீச ஐயர் அவர்கள், R. ரங்காசாரியா ரவர்களுடைய முன்னுரையுடன் கூடியது. விலை அணா 8.

(அடுத்த பக்கம் பார்க்க)

கண்ணைப் பறிப்பதையும்; இவை யெல்லாவற்றையும் பார்த்து, நகரத்தின் இக் கோலத்துக்கேற்ப, நடுப்பகலில், காமாலைக் கண்ணால் கண்டாற்போல் தோன்றும் ஆகாய வெளியின் ஒரு மூலையில், உள்ளங்கை யளவே யாகிய செந்நிற வட்டமாய், ஏதோ உற்பாதம்போலச் சூரியன் தென்படுவதையும்; நாளுக்கு நாள் குளிரும் மப்பும் அதிகரிப்பதையும் கண்டு, முதலில் நான் அடைந்த மனச்சோர்வு கொஞ்ச மல்ல. லண்டனில் பெண்கள் சுயேச்சையாய் நிர்ப்பயமாய் வாழலாம். கல்வியையும் அநுபவ ஞானத்தையும் விருத்தி செய்து கொள்ளப் பல வசதிகளுண்டு. ஆனால், லண்டனின் சிறப்பும் சுக சௌகரியங்களும் என்னவா யிருந்தாலும், நம் தேசத்துப் பெண்களுக்கு, இந்நகர வாழ்க்கை, ஆதிமுதல் எல்லாவிதங்களிலும் மனத்துக்கொத்து உற்சாக மளிக்கத் தக்கது என்று, சிலர் சொல்வது வீணே. மொத்தத்தில், நன்மை தரக் கூடியதென்றும்; பலர் அநுபவத்தில், சலிப்பைக் காட்டிலும் சந்தோஷம் மிக்குள்ளதென்றும் மட்டும் தான், சொல்லலாம்.

---

4. இட்டார்க்கு இட்டபலன்.—ஆசிரியர் மிஸ்டர் J. பொன்னுஸாமி ராவ். விலை அணு 10.

5. திலகவதி.—சகோதரி V. பாலம்மாள் எழுதியது. ராவ் ஸாஹெப், S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் எழுதிய முன்னுரையுடன் கூடியது. விலை ரூ 1-4-0.

6. தமிழ் வசன லக்ஷணம்.—G. தாமோதர முதலியார், B. A. எழுதியது. விலை அணு 12.

7. இரகுவம்சம் முதல் பாகம்.—(1-6 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.

8. இரகுவம்சம் இரண்டாம் பாகம்.—(7-12 சருக்கங்கள்) பண்டித நடேச சாஸ்திரியாரவர்கள் எழுதியது. விலை அணு 12.

9. சுகாதாரபோதினி.—(மூன்றாவது பாரத்திற்கு) K. வரதாராஜ ராவ் இயற்றியது. விலை அணு 8.

CXIII 942



வெஸ்ட் மினிஸ்டர் ஆபி—கோயிலும் கல்லறையும்.

இப்பொழுது லண்டனில் மட்டும், நம் தேசத்துப் பெண்
கள் தனியாக வந்து கலாசாலைகளிற் படிக்கபபட்டவர்கள்,
சுமார் நாற்பது பெயர்க ளிருக்கிறார்கள். அவர்களிற் சிலர்,
இதுவரை 'கோஷா' பராமரிப்புக் குட்பட்டு வாழ்ந்தவர்
கள்; 'சாகத் துணிந்தால் சமுத்திரம் முழங்கால்' என்
கிறதை உட்கொண்டு, மழைகால ஆரம்பத்தில் இந்நாட்
டுக்கு வந்து, முதலில் சிறிது ஆதரிப்பார் யாரு மில்லாமல்,
தாமே பல விஷயங்களிலும் வேண்டாத கவலையையும் சிர
மத்தையும் பட்டுத் தெளிந்து, அநுபவத் தேர்ச்சி யடை
துள்ளவர்கள். இப்படிப் பட்டவர்களுக்கு, கிறிஸ்தவச்
சங்கத்தைச் சேர்ந்த சில ஆங்கிலேய ஸ்திரீகள், தம்மா
லான மட்டும் உதவி செய்யப் பார்க்கிறார்கள்.

நாளடைவில் புதுமை மாறி, நகரவாசிகளில் நானும்
ஒருத்தியாகி, இங்குள்ள பல நாகரிகமான சௌகரியங்
களையும், ஜனங்களின் உபகார குணத்தையும் தெரிந்து
கொண்டபின்பு கூட, லண்டனின் ஓட்ட சாட்டமும், கடை
வீதிகளின் அழகும், எனக்கு உற்சாகம் தரவில்லை. அவரவ
ருக்கு மனங்கொண்டதே மாளிகையாம். லண்டனில் உள்ள
வியாபாரச் செல்வத்தையும் காரிய நிர்வாகத்தையும் கண்டு,
தாம் அடைந்த மகிழ்ச்சிக்கும் பெற்ற பயனுக்கும் அள
வில்லையென்றும்; அவற்றின் காரண காரியங்களை அறிந்து,
நம் நாட்டில் அவ் வறிவை உபயோகப் படுத்தக்கூடுவதே,
இச் சீமைக்கு வருவதின் நலம் என்றும், என் சிநேகிதி
களிற் சிலர் வற்புறுத்திச் சொல்லக் கேட்டிருக்கிறேன்.
இந் நகரக் காட்சிகளைப் பற்றி நான் இன்னும் ஒன்றும்
சொல்லவில்லையே? முதல் தடவை நான் வெஸ்ட்மின்ஸ்டர்
கோயிலைப் போய்ப் பார்த்தபோது, "நான் எண்ணிய
எண்ணமெல்லாம் ஈடேறியது" போல் தோன்றிற்று. அக்
கோவிலின் அழகையும் மகிமையையும் எடுத்துச் சொல்வ
தரிது. அதன் ஒரு புறமாய், பார்லிமென்ட் சபைக் கட்ட
டங்கள் இருக்கின்றன; எதிரே யுள்ள பெரு முற்றங்களில்,
பாமெர்ஸ்டன் முதலிய மந்திரிமாரின் பிரதிமைகளும்,
கோயிலுக்குள் அரசர்கள், மந்திரிகள், புலவர், புகழ்பெற்
றோரின் கல்லறைகளும், இருககின்றன. 'புலவர் மூலை'யில்
சாஸர் முதலான இங்கிலீஷ் கவிகள் பலருடைய கல்லறை
களும், பதுமைகளும், ஞாபகச் சின்னச் சாஸனங்களு மிருக்
கின்றன. கோவிலின் மற்றொரு பிராகாரத்தில், மகா யுத்
தத்தில் மரித்த இனம் தெரியாத ஒரு 'பிரிடிஷ்' போர்ச்

சேவகனுடைய உடலை, பிரான்ஸி லிருந்து கொண்டுவந்து, "அரசர் மத்தியில்" அடக்கம் செய்த புதையலிடம், தினம் புதுமலர் மாலைகளால் அலங்கரிக்கப்பெற்று, பல ஜனங்களாலும் போற்றப்பட்டு வருகிறது. 'ஸென்ட்பால்' கோவிலில், 'நெல்சன்' 'வெலிங்டன்' முதலியோரின் புதையலிடங்கள் இருக்கின்றன. ஆராதனை வேளைகளில் அக்கோவிலில் வாசிக்கும் சங்கீதம், எதிரொலியோடு கலந்து வெகு இன்பமாய்த் தொனிக்கும். வெளியில் ஸென்ட் மார்க் கோவில் வாசலிற் போல, இக் கோவில் வாசலிலும், பழகிய கோவிற் புறாக்கள் எப்பொழுதும் பறந்துகொண்டே யிருக்கும்; அவற்றிற்குத் தானியம் வாங்கி யிறைத்துக் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

லண்டனில் அழகா யுள்ள பாகங்கள், அநேகமாய் (தேம்ஸ்) ஆற்றங்கரையை யடுத்துள்ளன; எல்லாப் பாலங்களும் போய்ப் பார்க்கத் தக்கவையே; அவற்றுள் செல்ஸீ ஊஞ்சற் பாலமும், அதைச் சுற்றுமுள்ள தோட்டங்களும், பழைய நாளைக் கட்டடங்களும், அழகிற் சிறந்தவை என்று சொல்லலாம். அந்தப் பக்கம், அதிக ஜன நெருக்க மில்லாமல் அமைதியாயிருக்கும்; அங்குள்ள காட்சி கண்ணுக்கினியது; மனத்துக்கு ஆறுதல் அளிப்பது.

முதலில் நான் வழிகாட்டிப் புஸ்தகத்தில் சொல்லியுள்ள ஒவ்வோரிடத்தையும் ஒரு முறையேனும் போய் நேடுகப் பார்த்து விட்டு வரவேண்டு மென்று எண்ணியிருந்தேன். பிறகு அதை வீணாசை யென்று விடவேண்டிய தாயிற்று; பிரபலமான காட்சிச் சாலைகளைப்பற்றி, அவற்றின் சில மூலைகளை மட்டும் பார்த்துவிட்டு, நான் என்ன சொல்லக்கூடும்? சாரமாய் அறிவூட்டும் காட்சிச்சாலைகள் இங்கு எத்தனையோ இருக்கின்றன; நாடகசாலைகளில் நடிப்பவரின் சாமர்த்தியம், ஸொப்பனத்தில் ஒரு புதுப் பாஷையைக் கற்றுக்கொண்டு, அதிலுள்ள சிறந்த இலக்கியங்களை யெல்லாம் எளிதில் படிக்க நேர்ந்தாற்போன்ற வியப்பையும், சந்தோஷத்தையும் உண்டாக்குகின்றது. லண்டனின் மகிமையே மகிமை! ஆயினும், என் மனம், இந்தியாவை நோக்கி, "என் முக்கவரே!" என்று ஏங்குகின்றதே: மனத்தின் விந்தையே விந்தை!

# அருள் ஆனந்தக் களிப்பு

(முத்திநெறி யறியாத என்னும் திருவாசக மெட்டு)

ஸ்ரீ. மு. போ. ஈசுவர மூர்த்தியாபிள்ளை,

அன்பகம், முன்னீர்ப்பள்ளம்

பல்லவி.

என்ன குறை? என்ன குறை?
இனிமேல் எமக் கென்னகுறை?
தன் எதிர்இல் லாதவராம்
தற்பரனைச் சார்ந்த நமக்கு—என்ன.

சரணங்கள்.

(1) பன்னுகலை கற்றுணர்வோம்
பண்பொழுக்கம் பற்றிநிற்போம்
மன்னுயிர்க் குழைத்திடுவோம்
மக்கள் இனம் ஒன்றே என்போம் —என்ன.

(2) யாரிடத்தும் அன்பு வைப்போம்
யாவருடனும் பகையோம்
சீரியரைச் சேர்ந்திடுவோம்
செல்வம் அறி வென்றுணர்வோம் —என்ன.

(3) சொன்னவாக்குச் சோரவிடோம்
சொலற்குரிய மெய்யே என்போம்
தன்னயம் வே றில்லை என்போம்
தக்கபொது நலம் அதென்போம் —என்ன.

(4) சித்திவழி பொறுமை என்போம்
சிறுமைதொழி லின்மை என்போம்
எத்தொழிலும் இழிவென் றெண்ணோம்
எவர்பணியும் தாழ்ந்து செய்வோம்—என்ன.

(5) மருளகத்தில் மாற்றிடுவோம்
திருவுளத்தைத் தேர்ந்திடுவோம்
அருளகத்தில் பூண்டுகொள்வோம்
திருவருளே துணையாக்கொள்வோம் —என்ன.

(6) எம்முயிரைப் பெரிதென் றெண்ணேம்
எவ்வுயிரும் எமதாம் என்போம்
எம்மையுமே மறந்திடுவோம்
எம்பெருமானை மறவோம் —என்ன.

(7) முத்திநெறி அறிந்திடுவோம்
முத்திநிலை அடைந்திடுவோம்
பத்திநெறி தேர்ந்திடுவோம்
பரமபதம் சேர்ந்திடுவோம் —என்ன.

(8) அன்பேஉயிர் என்றறிவோம்
அன்பேஇன்பம் என்றறிவோம்
அன்பேமுத்தி என்றறிவோம்
அன்புசிவம் ஒன்றே என்போம் —என்ன.

---


# ஸ்ரீமத்பகவத் கீதை.

மூலத்துடன் அத்வைத விசிஷ்டாத்வைத த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும் இது வரையில் வெளியிடாத ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும் கண்ணனுடைய கருத்திற் கிணங்கச் சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயர் ஸ்ரீமான் சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ அவர்களால் எழுதப்பட்டது.

முழு காலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூபா 3—0—0

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை.

# தமிழ் அகராதி *

## ஸ்ரீ. அ. மாதவையர், சென்னை.

முகவுரை.—இந்த அகராதியைப் பற்றி, சென்னைத் துரைத்தனத்தார், அமெரிக்கன் கிறிஸ்தவ மதபோதகரான ரெவ். சான்ட்லெரின் தூண்டுதலின் மேல், 1911-ம் ஆண்டிலே முதலில் ஆலோசித்தனர். அப்பொழுதிருந்த 'ஆரம்ப சூரத்தனம்' கொஞ்சமன்று: முற்றிலும சிறந்ததும், குறைவின்றி நிறைந்ததும், ஐயந்திரிபுகளின்றி அனைவரும் ஒப்புக்கொள்ளத் தக்கதும், தமிழ் மொழிக்கு என்றும் நிலைத்த் பிரமாணமாவதுமான ஓர் அரிய பெரிய தமிழ் அகராதியே, அவர்கள் இலக்ஷியமா யிருந்தது. இப்படிப்பட்டதோர் அகராதி கிரகத்தை இயற்றி முடிக்க, ஒரு லக்ஷம் ரூபாயும், ஐந்தாண்டுகளும் பிடிக்குமென்றெண்ணினர். இதைப்பற்றி உலகெலாம் பறையறையவே, ஐரோப்பிய அமெரிக்க மேதாவிகள் பலர், தத்தம் அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் அளித் துதவினர். இத்தனை முழக்கத்தோடு 1913-ம் ஆண்டிலே அகராதி வேலை தொடங்கிற்று. சான்ட்லெர் பாதிரியாரே, மாதம் 500 ரூ. சம்பளத்தில், பதிப்பாசிரியரானார்; ஸ்ரீ M. அரங்காசாரியாரும், இன்னும் மூவரும், அவருடன் அகராதிக் கமிற்றியாராயினர். வடமொழி தென்மொழிகளில் அதிகப் பழக்கமில்லாத பதிப்பாசிரியருக்கு உதவியாக, சொற்பச் சம்பளங்களில் பண்டிதர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாண்டு (1913) முடியுமுன்பே, செக்கடிக்கும் தம்பூருக்கும் ஒவ்வாதென்று, ஸ்ரீ. M. அரங்காசாரியார் விலகிவிட்டார். கமிற்றியிலே ஊதியமின்றி ஊழியஞ் செய்துவந்த மற்ற அங்கத்தினரும், அப்போதைக் கப்போது மாறலாயினர். பாதிரியாரும் பண்டிதர்களும் மட்டும் நிலைத்த சிப்பந்திகளா யிருந்தனர். வேலை முதலில் தொடங்கி நடந்துவந்தது மதுரையில்; பிறகு இடம் சென்னைக்கு மாற்றப்பட்டது; பதிப்பாசிரியருக்குச் சம்பளம் தவிர, பங்களா

---

* சென்னைச் சர்வகலா சங்கத்தார் பிரசுரம்: முதல் தொகுதி-முதல் பகுதி-க்ரௌன் 8 vo. 266 பக்கங்கள்-விலை ரூ. 4-0-0. சென்னை, வேப்பேரி, டயோஸிஸன் அச்சுக்கூடம்.

வர்டகையும் அதுமுதல் கொடுக்கப்பட்டது. துரைத்தனத்தார் வேண்டியபடி, சென்னைச் சர்வகலா சங்காத்தார், அகராதிக் கம்மிற்றியின் வேலையை ஆதிமுதல் மேற்பார்த்து வந்தனர்.

பதிப்பாசிரியர் சான்ட்லெர், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்றவரல்லர்; அமெரிக்கராதலின், இங்கிலீஷ் பாஷையை இங்கிலாந்துக் கலாசாலைகளில் ஐயந்திரிபறக் கற்று, அகராதி தொகுத்தற்கு வேண்டிய அளவு, அம்மொழியிற் புலமையுற்றவருமல்லர்; அவருக்குத் துணைநின்ற பண்டிதர்களுக்கோ, இங்கிலீஷ் தெரியாது. இன்னோர் கூடித் தொகுத்த அகராதி, ஐந்து குருடர் யானைகண்ட கதைபோல் முதலில் முடிந்தது, வியப்பன்றே. நான்கு வருஷங்களும் நாற்பதினாயிரம் ரூபாயும்செலவாகிய பின், 1917-ம் ஆண்டிலே, முடிந்த வேலையில் முதற் பகுதியைப் பரீக்ஷார்த்தமாக வெளியிட்டபோதுதான், உண்மை துலங்கலாயிற்று. அப்பொழுது சர்வகலா சங்கத்தின் உப அத்யக்ஷராயிருந்த ஸர் பி. எஸ். சிவஸ்வாமி ஐயர், அகராதி வேலையையும் பதிப்பாசிரியர் சான்ட்லெரின் புலமைத் திறனையும்பற்றி எழுதியுள்ள கட்டுரை, வெகு ருசிகரமானது. கதையை வளர்ப்பதில் பிரயோசனமில்லை: சாயம் இவ்வளவு துலங்கிய பின்பும், சான்ட்லெரே தலைமைப் பதிப்பாசிரியராக 1922-ம் ஆண்டுவரை இருந்து வந்தார்; அவருக்குப் பின், அதுவரை துணையாசிரியராயிருந்த ஸ்ரீ S. அனவரதவிநாயகம் பிள்ளை, ஈராண்டுகள் தலையாசிரியராயிருந்தார்; 1924 முதல் ஸ்ரீ. C. P. வேங்கடராமையர் தலையாசிரியாயிருந்துவருகிறார்; ரெவ். F. கிங்ஸ்பெரி, இவரோடு கூட்டாசிரியர். ஸ்ரீ வேங்கடராமையரின் காலத்தில்தான், இப்பகுதி வெளிவந்துள்ளது.

மதிப்புரை. - I. போது – (1) அ, ஆ, என்னும் ஈரெழுத்துக்களில் தொடங்கும் 7511 சொற்கள் இப்பகுதியில் அடங்கியுள. சான்ட்லெர் கூறியபடி சொற்களின் மொத்தத் தொகை 81 ஆயிரமே யாயினும், அகராதி, ஏறத்தாழ 3000-பக்கங்களாகும்; இப்பகுதிக்கு 4 ரூபா வீதம், அகராதி விலை ரூ. 45 ஆகும். இவ்வளவு தடித்த காகிதத்திலும் பெரிய எழுத்துக்களிலுமின்றி, இலேசான காகிதத்தில் பொடியெழுத்துக்களில் அச்சிட்டிருந்தால், மொத்த விலை ரூ. 20க்கு மேலாயிராது. அகராதி சருவதா பாராயணம் பண்ணும் நூலன்று; அபூர்வமாய் அவசியமானபோது திருப்பிப் பார்க்கும் நூலேயாம். நம் நாட்டு ஏழைமை ஒருபுறமிருக்க, தமிழறிவாளரில் செல்வர் பிரபுக்களுமே, இவ்விலை கொடுத்து இவ்

வகராதியைவாங்கத் தியங்குவ ராதலின், எங்ஙனமாயினும் இதன் விலையைத் தாழக் குறைத்தல், சர்வகலா சங்கத்தாரின் கடமையாகும்; வாணிக முறையில் நற்பயன் தருவதுமாகும்.

(2) மேனாட்டு மேதையர்கள் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லையும் ஆங்கிலத்திலும் நகல்செய்யவேண்டு மென்றபடி, செய்யப்பட்டிருக்கிறது. (உ-ம். அம்மான் பச்சரிசி—Amman-paccarici) Cut கட், Put புட், Psalm ஸாம், Though தோ, என்று, எழுத்தும் உச்சரிப்பும் வேறுபட்டு வழங்கும் வரம்பில் மொழியன்று தமிழ்; பெரும்பாலும் எழுத்துப்படி உச்சரிக்கப்படுவ தொன்றே. இதை யறியாரே ஆங்கிலநகல் அவசிய மென்பர். தமிழை எழுத்துக் கூட்டி வாசிக்கத் தெரியாத எந்த துரையும், இந்த அகராதியை வாங்கப்போவ தில்லை. ஆகையால், இனி வெளிவரும் பகுதிகளிலேனும், இடத்தை வீணாக்கிச் செலவை யதிகரிக்கும் இந்த அம்சத்தை நீக்கி விடலாம்.

(3) அடிப்படையான சொல்லின் பொருளை விளக்கிவிட்டு, அதன் வழியே வரும் பிரயோகங்களை யெல்லாம், அதனோடு சேர்த்துக் காட்டுவது, அகராதிகளின் மரபேயாம். உதாரணமாக, அடைக்கலம் என்ற சொல்லை விளக்கிவிட்டு, அடைக்கலப் பொருள், அடைக்கலம் புகுதல் என்பவற்றை, இடத்துக்குச் சேதமாகத் தனித்தனியே விரித்துக் காட்டாது, அதனோடு சேர்த்துக் காட்டிவிடலாம். இம்முறையால் அகராதி மிகச் சுருங்கும்.

II. சொற்கள் — சாதாரண வழக்கிலுள்ளவை அதிகம் விடுபடவில்லை; ஆயினும், சோதிடம் மருத்துவம் முதலிய சாஸ்திர நூல்களில் வழங்குவன பலவும், சங்க நூல்களில் காண்பன சிலவும், சேர்க்கப்படவில்லை. உதாரணங்களாக, பின்வரும் சோதிடச் சொற்கள் இதிலில்லை:—அகசன், அகணம், அகத்திய நட்சத்திரம், அகம் (சூரியன், நாள்), அகர், அகாயு, அகி (ஆவணி, மேகம், சூரியன், ஒரு நட்சத்திரம்), அகிகை, அகிப்பிரத்தினம், அகிரன், முதலியன; விருக்கிற் பெருகும். அகராதியின் முதல் 17 பக்கங்களில், சோதிடச் சொற்களில் மாத்திரம் பத்து விடுபட்டிருப்பதை நோக்குக. இதிற் காணும் பிறமொழிச் சொற்களைப்பற்றியும் ஒன்று கூறுதற்குளது: இவற்றைச் சேர்ப்பதில், சர்வசாதாரண வழக்கி லுள்ளவற்றை மாத்திரம் சேர்த்தலே பொருந்தும். உதாரணமாக, சீட்டாட்டத்து ஆடுதன் (hearts) என்னும் ஆங்கிலச்சொல்லைச்சேர்த்துக் கொள்ளலாம்; துரப்பணம் என்பது சாதாரண வழக்கிலிருக்க, சிலர்மாத்திரம் அரிதில் வழங்கும் ஆகர் (auger) என்னும் சொல்லைச் சேர்ப்பது உசிதமன்று. தமிழ்த் தாய் தலைநிமிரும் போது, இத்தகைய மொழிகளெல்லாம் வழக்கொழியு மென்பது திண்

ணம். இவற்றை நிதானித்துக் குறைத்தலாலும், இடம் சுருங்கும். அதிருஷ்டம், அதிட்டம், போன்றவற்றைத் தனித்தனியே காட்டுவது மாத்திர மன்றி, தனித்தனியிடங்களில் அனுவசியமாகப் பொருளுங் கூறுதல், வீண். இவ்வாறு கணக்கிட்டுத் தான் சொற்றொகை 81 ஆயிரமாயிற்றோ என்ற ஐயமுண்டாகின்றது.

III. சொற்றொடர்கள்.—சேரும்போது சொற்களின் அடிப்பொருள் மாறிக்காணும் தொடர்களையும், சங்கேத சம்பிரதாய வழியனவாம் சொற்றொடர்களையும் மாத்திரம் கூறி விளக்குதல் பொருந்தும். உதாரணமாக, ஆடேழும்பு நேரம் என்பதைச் சேர்த்தது சரி; ஆடிக்கழைத்தல் போன்ற, தொடர்களைச் சேர்ப்பதாயின், தீவாளிக்கழைத்தல், ஆருமாதத்துக் கழைத்தல், கார்த்திகைக் கழைத்தல் என்று எல்லையின்றிப் பெருகிவிடும். அடிமடக்கு என்னும் யாப்பிலக் கணக்குறியீட்டை அகராதியில் காணவில்லை; அநுபந்தத்திலேனும் சேர்த்தல் வேண்டும்.

IV. பொருள் கூறுதல். – சமுசயம் நேர்ந்த சமயமே மூதறிவாளரும் அகராதியை நாடுவாராதலின், அகராதிகளிற் கூறப்படுவன, சிற்றளவோ பேரளவோ, ஐயந்திரிபுகளின்றி இருத்தல் வேண்டும். அறியாமை அயர்ச்சிகளால் சொற்கள் விடுபடலாம்; கூறும் சொற்களின் பொருள் முதலியன தவறின்றி யிருத்தல் அவசியம். இதை மனத்தில் வைத்துக்கொண்டு இவ்வகராதிப் பகுதியை நோக்கும்போது, அதிமுக்கியமான இவ் விஷயத்திலும், இது குறை குற்றங்கள் இல்லாததாகக் காணவில்லை. அகராதியின் முதல் நோக்கம் காரணமாக, இங்கிலீஷில் கூறும் அர்த்தமும் தமிழ் அர்த்தமும் ஆனையும் பூனையும் போலிருத்தலை நான் குறிப்பிடவில்லை. அந்தக்குறைக்கும், தமிழ் அகராதி சிறந்ததொன்று இன்னும் இல்லாதிருக்கையில், தமிழ்-இங்கிலீஷ் அகராதியைத் தொகுக்கப் புகுந்து பெரும் பணத்தைச் செலவிட்டு வரும் தன் நயங்கருதாப் பரோபகாரச் சிந்தைக்கும், துரைத்தனத்தாரும் சர்வகலா சங்கத்தாரும் பொறுப்பாளிகளே யன்றி, அகராதிப் பதிப்பாசிரியர் பொறுப்பாளிக ளாகார். ஆனால், தமிழிலோ இங்கிலீஷிலோ, சொல்லும் பொருளும் பொருந்தாமைக்கும், ஒரே சொல்லின் ஆங்கிலப் பொருளும் தமிழ்ப் பொருளும் ஒன்றோடொன்று பொருந்தாமைக்கும், அகராதிப் பதிப்பாசிரியர்தாம் பொறுப்பாளிகள். இவ் வகராதியை முதலொடு கடை யான் படித்துப் பார்க்க வில்லை. பானைச் சோற்றில் பதம்பார்க்கு முறையில், ஆங்காங்கு பக்கங்களைத் திருப்பிப் பார்த்ததில், கண்ணுக்குப் புலப்பட்டனவற்றையே கீழே குறித்திருக்கிறேன் :—

"அரக்கு—கள்ளின் விகற்பம்." கள்ளின் விகற்பமாகும் அரக்குச் சிறுபான்மையே வழங்குவது; தமிழ் நாட்டு விளையாட்டுச்

சிறுவரும் அறியும். "வேலம்பட்டை கருப்புக் கட்டி, வேர்த்து வடிந்தால் சாராயம்" என்னும் வசனத்தை அறியார் போலும்.

"அபின்—கசகசாச் செடியின் பால்." ஆங்கிலத்தில் "inspissated juice" என்றதைத் தமிழில் விளக்காமையால், தமிழிற் கூறியிருப்பது விபரீத ஞானத்தையே விளைக்கும்.

"அப் பிராமணன்—Pseudo-Brahman; போலிப் பிராமணன்." முதற் பக்கத்தில் அ என்பதை விளக்குகையில், "privation, அன்மை"க்கு, இதே உதாரணம்காட்டியிருக்கிறதே: அன்மை சரியா? போலி சரியா? அல்லது, இரண்டும் ஒன்றேயோ?

அரமனை-அரண்மனை—இரண்டையுமே அரண் + மனை என்று காட்டியிருப்பது பொருந்தாதெனத் தோற்றுகிறது.

"ஆடிப் பெருக்கு—பதினெட்டாம் பெருக்கு;" இவ்விழா, மதுரை திருநெல்வேலி ஜில்லாக்களிலும் கொண்டாடப்படுகிறது. இங்கிலீஷிலே காவேரியை மட்டும் குறித்திருப்பது சரியன்று.

"அறிவிலி—அறிவில்லாதவன் (கம்பரா. மந்தரை. 67.)" மேற்கோளும் பெண்பாலையே குறிப்பதையும் மறந்து, ஆண்பாற் பொருள் மாத்திரம் கூறியிருப்பதேன்?

"அரும்பு—4. அரிசி." அதிமதுரம் என்பதை இருவேறு சொற்களாகப் பிரித்துக் காட்டிவிட்டு, இதை நான்காவது பொருளாக ஒரே தலைப்பின்கீழ்க் காட்டி யிருப்பதேன்?

"அரைத்தல்—அம்மி முதலியவற்றால் அரைத்தல்;" குழவியால் அரைத்தலைக் கண்டும், கேட்டு மிருக்கிறேன்; எவ்வூரில் அம்மியால் அரைக்கின்றனரோ அறியேன்.

அரணம்-அடிநிலை—செருப்பு; மாவடி; Sandal; தோற் செருப்பும் மாவடியும் குழம்பிக் காண்கின்றன.

"அடி பட்டவன்—2. Wounded person; காயம் பட்டவன்." இது போலீசார் அர்த்தம் போலும்!

"அடிதோறும்—Repeatedly:" "அடிக்கடி, At every step" என்பது நன்கு பொருந்துமே? இங்குமட்டுமன்று, வேறு பல விடங்களிலும், இங்கிலீஷில் நன்கு பொருந்தும் சொற்களிலேயே பொருள்கூறாமல் விடப்பட்டிருப்பது, விசனிக்கத் தக்கதே.

"அட்சதைப் பொட்டு—Turmeric paste &c." கருவியும் காரியமும் குழம்பிக் காண்கின்றனவே.

"அமிர்தம்—Ambrosia, nectar &c. தேவருணவு"

"அமிர்து—Ambrosia; தேவாமிர்தம்."

Ambrosia தின்பது; nectar குடிப்பது; அமிர்தமும் பானப் பொருளே; குழப்பத்தை நோக்குக.

“ஆலாப் பறந்தல்—ஆல் + ஆக +. To be in utter distress. as having to wander about for food like the dried banyan leaf blown to and fro by the wind; திண்டாடுதல்.” இங்கிலீஷில் இப்பொருளை எழுதினவர், ஆலா என்னும் நெய்தற் புள் மீனைக்கொத்தப் பறந்தலை பார்த்திலர் போலும்; ஆலஞ் சருகு சோற்றுக்காகப் பறந்து திரிவதை எங்கே கண்டாரோ? இதுவும் விந்தையே.

“அலட்டு—Raving, incoherent talk, delirium; வீண் வார்த்தைகளை மேல் மேலுங் கூறுகை.” “அரம்பை—“Courtesan...நாடகமகளிர்...” “அடிமடை—Head of a sluice; முதன்மடை”—(head-sluice) மேல் மூன்றிலும், சொற்களும் இங்கிலீஷ் தமிழ் அர்த்தங்களும் பொருந்தாமையைக் காண்க.

“அரும்பூட்டு—2. That which is difficult to settle a negotiation: இணக்கக் கூடாதது.” இங்கிலீஷ் அனர்த்தமே.

“அரனிடத்தவள்—Parvati sitting on the left of Siva.” “அர்த்தநாரீசுர” ஐதிகத்தோடு, அர்த்தம் பொருந்துவ தன்று.

“ஆத்திசூடி—A little book of aphorisms written by Auvaiyar * * ஔவையார் செய்த நீதி நூல்களுளொன்று.” Aphorisms என்றால் மாத்திரம் நீதி நூல்களைக் குறியாமையை ஸர். சிவஸ்வாமி ஐயர் எடுத்து விளக்கினரே?

“அரசுவா—State elephant * * with the fore part of the body higher than the back part;” *back* என்பது *hind* என்றிருக்கவேண்டும்.

ஆடுஞ்சரக்கு—1. mineral substances which evaporates on the fire * * உஷ்ணத்தாற் காற்றாய்ப் போகும் &c.” இங்கிலீஷில் எழுவாய் பன்மையிலும் பயனிலை ஒருமையிலுமிருப்பது அச்சுப் பிழையா யிருக்கலாம்; ஆவியைக் காற்றாக்கினவர் யார்?

V. அநுபந்தம்–பிழைத்திருத்தங்கள்—தமிழ் - இங்கிலீஷ் அகராதியைச் சேர்ந்த இப்பகுதி, லத்தீன் பாஷையிற் காணும் விந்தை ஒருபுறமிருக்க, இதில் முதல் 118 பக்கங்களே அடிங்கியுள; பின்னுள்ள 148 பக்கங்களிலும் குற்றங்குறைகள் இல்லையென்றே எண்ணினர் போலும். மேலே எடுத்துக்காட்டியவற்றிற் பல, 118-ம் பக்கத்துக்குப் பிற்பட்டனவேயாம். இது நிற்க: இப்பகுதியில் ஒரு விந்தையைக் காணலாம்: அதாவது, இதற்கும் ஒரு அநுபந்தம், பிழைத்திருத்தப் பகுதி வேண்டியிருப்பதே. உ—ம்:—

அக்ரபூசனை—*Act* என்பது act என்றிருக்க வேண்டும்.

அட்டையாடல்—இங்கிலீஷ்த் திருத்தத்தை விட மூலமே பொருந்தும்; திருத்தம், மிகைபட்டுக் கூறியது கூறலாம்.

"அடிதிரும்புதல்—Sun's shadow turning eastward". "*After* eastward *Insert* in the afternoon." சூரியனின் சாயை ஏது? சாயைகள் முற்பகலிலும் கிழக்கு நோக்கித் திரும்புமோ?

அடியந்தாதி—அகராதியில் இப்பொழுது கூறியுள்ள பொருளே சரி, திருத்தமே தவறெனத் தோற்றுகிறது.

அடிவரலாறு—History என்பது history என்பதோ?

அடைதல். *For* "To obtain eternal bliss, die:" *Read* "An euphemism meaning to die, to attain salvation." திருத்தம் அனுவசியமாகத் தோற்றுகிறது.

அடைந்தந்தகை—இதற்குத் தமிழிற் கூறியுள்ள பொருள் தெளிவாயில்லை; இங்கிலீஷைப்போல் அதையும் என் விளக்கிலரோ?

அதமபட்சம்—அயலகம்—இங்கிலீஷுக் கேற்கத் தமிழையும் என் திருத்திலரோ?

அநுபந்தம்-பிழைத்திருத்தப் பகுதியிலுள்ள 18 குறிப்புக்களில் நேர்பாதி தவறானவை, அல்லது சந்தேகாஸ்பத மானவை என்பது, மேற் கூறியவற்றால் விளங்கும். இதனால், பிந்திய 148 பக்கங்களைப் பதிப்பாசிரியர் திருத்தாது விட்டுவிட்டது நலமே என்னலாம்!

முடிவுரை— மேலே எடுத்துக் காட்டியனவும், இன்னும் இவை போன்றுள்ளனவுமான குற்றங்குறைகளுக்கு, இவ் அகராதி யாசிரியர்மூவரில், எவர் ஜவாப்தாரியோ தெரியாது. இவ்வேலையைக் கடைசியாய்க் கையேற்று, இப்பகுதியைப் பிரசுரஞ்செய்த ஸ்ரீ. வேங்கடராமையரையே பொறுப்பாளியாக்க வேண்டுமென்று யாராவது கூறின், சில்லாண்டுகளுக்கு முன் கம்பரைப்பற்றி இவர் எழுதிய ஆங்கிலநூலைப் படித்துள்ளவர், இவ்வாறு இவர் தவறிழையார் என்று, தடுத்துரைக்கத் துணியார். போனது போக, இனி மேல்நடக்க வேண்டியதைப்பற்றி ஆலோசிப்பதே தகும்.

ஒப்புயர்வற்ற அகராதி இலகமே முதல் நோக்கம். அப்பால், வின்ஸ்லோவின் அகராதியைத் தற்காலத்துக் கேற்கத் திருத்திப் புதுக்கிய அளவுக்குக் குறையக் கூடாதென்று, இலக்ஷியம் மாறிற்று; பிறகு, மேல்நாட்டு மேதையரின் பெருமதிப்பைக் கவரவேண்டா, இந்நாட்டவர் அவசியத்துக்கு வேண்டிய அளவு நிறைவேற்றினாற் போதும் என்று குறிக்கோள் இன்னும் குன்றித் தாழ்ந்தது; கடைசியில், ஆனை குதிரையாகி, குதிரை ஆடாகி, ஆடு கோழியான

கதைபோல, இம்முதற் பகுதி வெளிவந்துள்ளது. இவ் வகராதிப்பகுதி சொற்களின் தொகையிலும், சொற்களின் மூலபாஷையைக் குறிப்பதிலும், இலக்கணங் கூறுவதிலும், மேற்கோள் காட்டுவதிலும், இது வரை வெளிவந்துள்ள தமிழ்-இங்கிலீஷ் அகராதிகளை விட மேம்பட்டதேயாயினும், குறை குற்றங்கள் மலிந்து காண்கின்றது. இது போல இன்னும் ஒன்பது பகுதிகளேனுமுள- இவற்றையெல்லாம் இன்னும் சரிவரத் திருத்த முயலின், பல்லாண்டுகளும் பெரும்பொருளும் வேண்டும். இதுவரையில் ஒருவியாழவட்டமும் 2 லக்ஷத்துக்குமேலானபொருட் செலவுமாகி விட்டன வாயினும், 'முதற்கோணல் முற்றுங்கோணல்' என்றே முடிந்துவிட்டது. இன்னும் பொருளையும் பொழுதையும் பாழாக்குவதைப் பாராட்டாது, இதைத் திருத்தியமைத்தாலுமே, ஐரோப்பியருக் கன்றித் தமிழ்மக்களுக்கு மிகப்பயன்படுவதொன்றாகாது. ஐரோப்பியரிலுமே, இதை வாங்கிப் படித்துப் பயனடைவோர் மிகச் சிலரே யாவர்.

இவற்றையெல்லாம் சென்னைத் துரைத்தனத்தாரும் சர்வகலா சங்கத்தாரும் தீர ஆலோசித்து, திருத்தும் வேலையையும் பதிப்பாலயச் சிப்பந்திகளையும் அறவே நிறுத்திவிட்டு, அச்சுப் பிழைகளின்றிமட்டும் கவனித்து, தொகுத்துள்ளவற்றை உள்ளபடி விரைவில் அச்சேற்றி, வேலையை முடிப்பதே நலமெனத் தோற்றுகிறது. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து, அதனை அவன் கண் விடாததால்' வந்த கேடோயிது.

## குசிகர் குட்டிக் கதைகள்

மூன்று பாகங்களில் 22 கதைகள்

மொத்தம் விலை ராப்பர் 1—8—0.

௸ டக்ஸீன் 1—8—0.

பஞ்சாமிர்தம் ஆபீஸ்,

மயிலாப்பூர், சென்னை.

## பதினோராவது அதிகாரம்

தாமஸ் கே என்பவர் சாதியில் திராவிடர்; மதத்தில் கிறிஸ்தவர்; நடையுடை பாவனைகளில் ஐரோப்பியர் என்க லாம். அவர் பாட்டனார் திருக்குற்றாலலிங்கம் பிள்ளை, சிறு பிராயத்திலே கிறிஸ்தவராகி, ஜான் கே என்ற ஐரோப்பியரிடம் வேலையிலிருந்து, பெருகி வாழ்ந்தவர். அவர் மகன் மார்டின் கே திருக்குற்றாலம் என்பவர், தாம் ஸன் கேசவையர் என்ற பிராமண-கிறிஸ்தவரின் மகளைக் கலியாணஞ் செய்துகொண்டார். அந்தத் திராவிட-ஆரிய -கிறிஸ்தவ தம்பதிகளின் ஒரே மகன்தான் தாமஸ். இவர், தன் பெயரைத் தாமஸ் கே என்று மாற்றிக்கொண்டார்; அதுவுமன்றி, இங்கிலாந்து சென்று படித்து, பாரிஸ்டர் பட்டம்பெற்று மீண்ட பின்பு, ஐரோப்பியர் நடையுடை பாவனைகளை அநுஷ்டிக்கலானார். தாமஸ் கே, ஏராளமான பூர்வ சொத்தைப் பெற்று, பல்லாயிரக் கணக்காகத் தானும் சம்பாதித்து, இப்பொழுது லக்ஷப் பிரபுவாயிருந் தார். அவர் இங்கிலாந்திலே படித்துவந்த காலத்தில், தான் குடியிருந்த வீட்டுக்காரியின் மகளை மணந்துகொண்டன ரென்றும்; அவளை அழைத்துவர யோசித்துக் கொண் டிருக்கையில், அவள் திடீரென இறந்து போயின ளென்று செய்தி எட்டியதென்றும், கூறுவர். அப்பால், தாமஸ் கே, தனது தாய்மாமன் குடும்பத்தைச் சேர்ந்த மிஸ் ஞானபுஷ்பம் கேசவையர் என்னும் பெண்ணைக் கலியா ணஞ் செய்துகொண்டு, நான்கே ஆண்டுகள் அவளோடு சந்தோஷமாய் இல்லறம் நடத்தினர். அப்பால், ஜேன் என்ற ஒரு பெண் குழந்தையை மாத்திரம் தங்கள் காதற் கனியாக விட்டுவிட்டு, அவளும் இறந்துபோனாள். ஞான புஷ்பம் இறக்கும் தறுவாயில், தன் காதலரிடம், ஒரு வரன் வேண்டினாள்: அதாவது, தன் மகள் ஜீவனோடிருந் தால், ஐரோப்பிய துரைசானிகளைப் போல உடை யுடுத் தவோ, ஓர் ஐரோப்பியனை மணம்புரியவோ, கூடாதென்

பதே; தன்னால் இயன்றமட்டும் அப்படியே நடத்த, தாமஸ் கே வாக்களித்து, நடத்திவந்தார்.

தன் ஆசை நாயகியைப் பறிகொடுத்த தாமஸ் கே, அப்பால் வேறு விவாகம் செய்துகொள்ளவில்லை; பாரிஸ்டர் தொழில் செய்து பணம் சம்பாதிப்பதையும் நிறுத்திவிட்டார். தீராத சோகத்தில் ஆழ்ந்தவராய், தன் மகளைப் பேணி வளர்ப்பதொன்றே கவலையாகக் காலம் கழித்து வந்தார். தாமஸ் கே, நன்கு படித்தவர்; கல்வியில் அபிருசியுள்ளவர்; ஆங்கில காவியங்களில் அதிகம் பழகியவர்; சாதுரியமாய், மாதுரியமாய்ப் பேசவல்லவர். தன் கண்மணி போன்ற ஒரே மகள் ஜேனுக்குத் தானே தாயும் தந்தையும் தாதியுமாகி அவளை வளர்த்து வந்ததன்றியும், தானே அவளுக்கு ஆசானுமாகிக் கல்வி கற்பித்துவந்தார்.

சென்னையிலிருந்து திருவொற்றியூர் செல்லும் ரஸ்தாவின் கீழ்பால், தென்னை, மா, பலா முதலிய மரங்கள் அடர்ந்த ஒரு பெரிய தோட்டத்தின் நடுவே யிருந்தது, தாமஸ் கேயின் பங்களா. நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அழகிலும் அறிவிலும் அன்பிலும் வளர்ந்தோங்கிவந்த ஜேன் கே, தன் தந்தையின் முழு மனத்தையும் கருத்தையும் கவர்ந்து, அவர் துக்கத்தை மறந்து மகிழ் வெய்துப்படி செய்து வந்தாள். அவளுக்கு உலகமே தெரியா தென்னலாம். அவள் தந்தையும், முன் போல் வெளிச் சென்று பலருடன் பழகுவதை நிறுத்தி விட்டார்; பெரிய சோலையின் நடுவே வாழும் அவர்கள், கடற்கரை செல்வதுமே துர்லபம். தாமஸ் கேயின் பழைய நண்பர்கள் சிலர் மாத்திரம், எப்பொழுதேனும் ஒருவேளை அவரைக் காண வருவர்; ஆண்டுகள் செல்லச் செல்ல, அதுவும் அத்தி பூப்பதுபோலாய்விட்டது. தாமஸ் கே, தன் மகளை நாலைந்து வயதுக் குழந்தைபோலவே நினைத்து, நெடுங்காலம் நடத்திவந்தார்: அதாவது, சாதாரண விஷயங்களில்; கல்வி விஷயத்திலோ, அவள் எழுத்துக்கூட்டிப்

படிக்கத் தெரிந்த காலந்தொட்டே, தான் படித்து அநுபவித்த காவிய ரசங்களையெல்லாம் அவளுக்கும் ஊட்ட முயன்றார். இவ்வாறு, அப்பன் மகள் இருவருமே தம்மைச் சுற்றியுமுள்ள உலகத்தை மறந்து, பரஸ்பர அன்பிலும் மகிழ்ச்சியிலும் காலங் கழித்து வரும் நாளிலே ஒரு நாள், ஜேன் கே அயர்ப்பிற் சொன்ன யாதோ ஒரு வார்த்தை, அவள் தந்தையின் கனவைக் குலைத்துவிட்டது. தன் மகள் ஈடெடுப்பில்லாத பேரழகும் கல்விப் பயற்சியும் பொருந்திய யுவதி என்பதை, அன்றே அவர் உணர்ந்தார். அன்றுமுதல், அவர் மனத்தில் புதியதோர் கவலை குடிகொண்டது; பலவிதச் சந்தேகங்களும் எழலாயின. அவளிடத்தில் அதைப் பற்றிப் பேசுவதோ, அசாத்தியமாய்த் தோற்றிற்று; இன்ன செய்வதென்று அவருக்கு நிச்சயமாய்த் தெரியவுமில்லை. தானும் அவளும் அதுகாறும் வாழ்ந்து வந்த தனிமையைத் தவிர்த்து, நகர வாழ்க்கையில் முன்போற் கலந்து பழகலாமோ, அவளையும் தன்னோடு பல பொதுஸ்தலங்களுக்கு அழைத்துக்கொண்டு செல்லலாமோ, என்றெண்ணினர். உலகம் இன்னதென்று தெரியாமலே வளர்த்துவிட்டு, திடீரென அவளை உலக நாடகசாலையில் கொண்டுவிடுவது, விபரீதமாய் முடியலாமென்று பயந்தார். தான் முன்போ லின்னுமிராமல், பலருடன் மீண்டும் பழகி, அவளுக் கேற்ற ஒரு வரனைத் தேடுவது, இனித் தன் கடனாகுமென்று எண்ணினர்.

இப்படி யோசித்துக் கொண்டிருக்கும் காலத்திலே ஒரு நாள், திடீரென ஜேனுக்கு ஜுரம் கண்டு, நோய் முதிர்ந்து, கடைசியில், பெரிய ஆசுபத்திரிக்குத் தூக்கிச் சென்று அங்கேயே வைத்துச் சிகிச்சை செய்தால்தான் ஒருவேளை பிழைக்கலாகுமென் றாகிவிட்டது. அவ்வாறே வைத்தியஞ் செய்ய, ஜேன் அரிதிற் பிழைத்தாள். அவள் தந்தையாரோ, அந்த இரண்டு மாதங்களிலே இருபது வயது மூத்துவிட்டன ரென்னும்படி, மாறிவிட்டார்.

ஆசுபத்திரி நீங்கி வீடு வந்தவுடன், தாமஸ் கே, ஜேனைப் பேணி போஷிக்குமாறு, தனக்கு ஒன்றுவிட்ட சகோதரியும், ஜேனுக்கு அத்தைமுறை யானவளுமான தேவநேசம்மாள் என்ற ஏழை விதவையை வரவழைத்துத் தன் வீட்டில் வசிக்கும்படி செய்தார். தேவநேசம்மாள் பாக்கியம் என்ற தன் மகளோடும் வந்து, அவ்வாறே வசிக்கலானள். தேவநேசம், அன்பே உருவெடுத்தாற்போன்ற கிழவி; தன் வாழ்நாளெல்லாம் பிறருக்கு உதவிகள் ஊழியங்கள் செய்வதிலேயே கழித்தவள். அவள் போஷணையில், நோயாளியின் உடம்பு விரைவில் தேறி, பழைய வளமையையும் வனப்பையும் பலத்தையும் பெறலாயிற்று. தேவநேசத்தின் பராமரிப்பிலே, தாமஸ் கேயும் பல கவலைகள் நீங்கி, மனம் ஒருவாறு அமைதியடைந்து, தன் மகளுக்குத் தக்க வரனை நாடி முயன்று வந்தார். முன்போலின்றி, அவர்கள் மாலையிற் கடற்கரை செல்வதும், பிறரைக் காணச் செல்வதும், பிறர் வந்து அவர்களைக் காண்பதும், சகஜமாயின.

ஆயினும், தாமஸ் கே உத்தேசப்படி காரியம் கைகூடும் குறிகள் ஒன்றும் தென்படவில்லை; அவர் மனக்கவலை நாளுக்கு நாள் அதிகரித்தது.

தன் மனத்துக் கிசைந்த மாப்பிள்ளை யென்று தாமஸ் கே அங்கீகரித்தவர், பீட்டர் சாமிவேல் ஒருவர்தான்: அவர், கண்ணுக்கு லக்ஷணமானவர், வயது இருபத்தைந்து தான். எம். ஏ. பரீக்ஷை கொடுத்துப் பட்டம்பெற்று, மாதம் ரூ. 120 சம்பளத்தில் உபாத்தியாயராயிருந்தார். செல்வத்தைப் பற்றி, கே சிந்திக்கவேயில்லை. தன் ஒரே மகளின் மணவாளருக்குப் போதிய செல்வம் தன்னிடம் இருந்தமையால், மற்றக் குணங்களையே அவர் கவனித்தார். சாமிவேல் ஆங்கில பாஷையில் எம். ஏ. பரீக்ஷை கொடுத்தவராதலின், தனக்குப் பிரியமான ஆங்கில காவியங்களையும் புலவர்களையும் பற்றி அவருடன் அளவளாவிப்

பேசப் பேச, தாமஸ் கேக்கு அவர் மீதுள்ள பிரீதி அதிகரித்தது. ஒரு நாள், ஒரு சங்கத்தில், சாமிவேல், யேசு கிறிஸ்துவின் தெய்வீகத் தன்மையைப் பற்றிச் செய்த பிரசங்கத்தைச் செவியுற்ற பின், அவருக்கே தன் மகளைக் கொடுத்து விடுகிறதென்று தன் மனதில் தீர்மானித்துக் கொண்டார். பிறகு, சாமிவேலின் குலங் கோத்திரங்களைப் பற்றி விவரமாய் விசாரணை செய்யத் தொடங்கினர். மேலே கூறியுள்ளபடி, தாமஸ் கே, சைவாசாரத்தைக் கைவிட்டு இரண்டு தலைமுறைகளாயின. அவர் தன் பெயரையுமே மாற்றி, ஓர் ஐரோப்பியப் பெண்ணை முதல்தாரமாக மணந்தது மன்றி, இப்பொழுதும், ஐரோப்பியரைப் போலவே வாழ்ந்து வந்தார். ஆயினும், திருக்குற்றாலலிங்கம் பிள்ளையின் பேரனும் ஒரு பிராமணத்தியின் குமாரனுமான அவர், தன் மகளை மணம்புரிந்து கொடுக்கும் விஷயத்திலே, வரம்பு மீறிச்செல்ல மனமிசையவில்லை. தன் மனத்துக் கிசைந்த மாப்பிள்ளையான பீட்டர் சாமிவேலின் சரீரத்திலுலாவும் இரத்தத்தில், சுந்திரர், அப்பர் மரபினோர் இரத்தக் கலப்பிலும், திருநாளைப்போவார், ஏனாதி நாயனர் மரபினரின் இரத்த சம்பந்தமே அதிகமென்பதை அறிந்தவுடன், காரியம் மேற்போகாமல் அவர் தடுத்துவிட்டார். ஆயினும், இனி வேறென் செய்வதென்ற கவலை அவர் மனதிற் குடிகொண்டது.

இப்படியிருக்கையில் ஒரு நாள், ஜேனுக்குத் தபாலில் ஒரு கடிதம் வந்தது. அப்பொழுது அவள் வெளியே போயிருந்தாள். தாமஸ் கே அந்தக் கடிதத்தைக் கையில் வாங்கிக்கொண்ட பின், விலாசத்தின் கையெழுத்து ஒரு பெண் எழுதியது போலன்றி, ஆண் எழுதியது போலிருந்ததைக் கவனித்தார். மேல் நாட்டார் முறைப்படி ஒருவருக்கு வந்த கடிதத்தை வேறொருவர் திறந்து பார்க்கக் கூடாதென்பது, அவருக்குத் தெரியும்; அதுவரை ஜேனுக்கு வரும் கடிதம் எதையும் அவர் பிரித்துப்

பார்த்ததுமில்லை. ஆயினும், அக் கடிதத்தைப் பிரித்துப் பார்க்கும் வேட்கை, அவர் மனத்திலுதித்தது. அவள் வீட்டிலிருந்தால் உடனே அவள் கையில் கொடுத்திருப்பார்; அவளுமில்லை. ஆகையால், முதலிற் சிறிது திகைத்து, பிறகு அக்கடிதத்தைப் பிரித்து வாசித்துப் பார்த்தார். கடிதத்தின் விவரத்தையும் கையெழுத்தையும் பார்த்தவுடன், அவருக்குண்டான ஆச்சரியத்துக்கும் கோபத்துக்கும் அளவு சங்கை யில்லை.

மேல் விலாசத்தைக் கொண்டும், உள்ளே கண்ட சில விவரங்களைக் கொண்டும், அது தன் மகள் ஜேனுக்கு டாக்டர் கோபாலையர் எழுதிய காதற் கடிதம் என்று தாமஸ் கே நிச்சயித்தார். ஆயினும், அக் கடிதம், "என் காதலி ஜானகிக்கு" என்று எழுதப்பட்டிருந்தமை, சிறிது சந்தேகத்தை உண்டுபண்ணிற்று. ஆசுபத்திரியிலே கோபாலையர் பராமரிப்பிலுள்ள பகுதியில் தான், ஜேன் கே நோயாளியா யிருந்தாள்; ஆகையால், கோபாலையரை அவர்களுக்கு நன்கு தெரியும். ஆனால், கோபாலையருக்கும் ஜேனுக்கும் தான் அறியாத அந்தரங்கப் பழக்கமுண்டென்று, அவர் சொப்பனத்திலும் சமுசயித்ததே யில்லை. கடிதத்தை வாசிக்க வாசிக்க, அந்தச் சமுசயம் பலப்பட்டு, டெஸ்டிமோனவின் கதை அவர் நினைப்புக்கு வந்தது. தன் மகள் ஜேன் திரும்பி வருமுன், தான் சென்று கோபாலையரைக் கண்டு பேசி, சமுசயத்தைத் தீர்த்துக்கொண்டு, அவர் உத்தேசத்தையும் அறிந்து கொள்வதே உசிதமென் றெண்ணி, தாமஸ் கே, உடனே ஒரு வாடகை வண்டியில் வெளிச் சென்றார்.

சிறிது நேரத்தில் ஜேன் திரும்பிவந்து, தூண்டித் துளைத்து விசாரித்ததில், தபால்காரன் ஏதோ ஒரு கடிதம் கொண்டு வந்ததும், அப்பால் அவள் தந்தை ஒரு வாடகை வண்டியில் வெளிச் சென்றதும் மாத்திரம் துலங்கிற்று. அதை யறிந்தவுடன், அவள் மனம் அச்சத்தையும் கவலை

யையும் அடைந்தது. அன்றிரவு தந்தையும் மகளும் நெடு நேரம் தனிமையில் கோபமாய் வாதாடிக்கொண்டிருந்தனர்; ஜேன் பிறந்தது முதல் அதுவரை, அவ்வாறு நிகழ்ந்ததே யில்லை. 'கிறிஸ்து வேதத்தை மதியாத ஒரு பார்ப்பானுக்கும் உனக்கும் என்ன உறவு?' என்பதே தந்தையின் வாதம். முடிவில், கோபாலையருக்குத் தான் இனி எழுதுவது மில்லை, அவர் எழுதினால் கடிதங்களை அங்கிகரிப்பது மில்லையென்று, ஜேன் சபதம் செய்து கொடுக்க வேண்டியதாயிற்று.

தேவநேசம்மாளின் மகள் பாக்கியம் ஒரு கைம் பெண்; தன் தாயைப்போ லன்றிக் கொஞ்சம் தமிழ்ப் படித்தவள்; சாதாரண விஷயங்களைப் பற்றி மற்றவர் இங்கிலீஷில் மெள்ளப் பேசினால், பொதுவாய் அர்த்த மாகும்; அவளும் சிறிது இங்கிலீஷ் பேசுவாள்; தமிழ்ப் பேசுவதிலோ, ஆங்கிலச் சொற்களை விரவி, தடைதட் டின்றி, மணிப்பிரவாளமாக, இலக்கண முடிபுகளை அழுத்திப் பேசுவாள்; அஞ்ஞானிகளான ஹிந்துக்கள் வீடுசென்று, ஹிந்துப் பெண்களுக்குக் கல்வி கற்பித்து, இடையிடையே பைபில் உபதேசமுஞ் செய்து, நாளாவட்டத்தில் அவர்கள் மனத்தைக் கலக்கித் திருப்புவதில் கைதேர்ந்தவள்; தன் கணவரான ஏசுவடியானென்ற பள்ளி உபாத்தியாருடன் வாழுங் காலத்தில், அவளும் மிஷன் சம்பளம் பெற்று, இந்தத் தொழிலையே செய்து வந்தாள். ஒரு வேளாள விதவையும், ஒரு பிராமணப் பெண்ணும், தங்கள் மதத்தை நீங்கிக் கிறிஸ்தவ மதத்தைச் சேரும்படி தூண்டியதற்குத் தானே மூல காரணமென்று, சில சமயங்களில் அவள் பெருமை பேசுவதுண்டு. தன் கணவர் திடீரென வாந்திபேதியினால் இறந்துபோன பின்பு, பாக்கியம், சில காலம் ஒரு தொழிலுமின்றித் துக்கங் காத்திருந்தாள்; அப்பால், மீண்டும் தன் பழைய வேலையைக் கையேற்று, மற்றொரு கணவரையும் நாடி

யடைய யத்தனித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான், தாமஸ் கேயின் கடிதம் கிடைத்துத் தாயும் மகளும் சென்னை வந்தடைந்து, அவர் வீட்டில் தங்கலாயினர். பாக்கியத்தின் வயது முப்பத்தைந்துக்கு மேலிராது; அவள், வளமையாய் உயர்ந்து வளர்ந்தவள்; நல்ல தேகக் கட்டுள்ளவள்; நீண்டு பரந்து விசாலமான அவள் முகம் எப்பொழுதும் புன்சிரிப்புடன் விளங்கும்; அவளைக் கண்ட பிராமண ஸ்திரீகள், "மஹாலக்ஷ்மி போலிருக்கிறாள்" என்று சொல்வதுண்டு. அவள் குணமோ, அவள் தாய் தேவநேசம்மாளின் குணத்துக்கு நேர் விரோதமான தென்னலாம். எந்தப் பேச்சிலும், எந்தக் காரியத்திலும், திர்க்காலோசனையோடும் தூரதிருஷ்டியோடும் தன் னயத்தையே கருதுவாள்; ஆனால், அந்நோக்கமும் உட்கருத்தும், அவளைப் போன்ற ஆழ்ந்த நெஞ்சையுடைய நயவஞ்சகருக் கன்றி, சாமானிய மனிதருக்கு வெளிப்படமாட்டா; இதுவுமன்றி, அவள் எதற்கும் அஞ்சாத துணிவும், விடாமுயற்சியும், மனவுறுதியு முடையவள்; எனவே, அவள் நினைத்ததை நிறைவேற்றாது விட்டது துர்லபம்.

இப்படிப்பட்ட பெண்மணி, தாமஸ் கேயின் வீடு வந்தடைந்த சில நாள்களுக்குள், வீட்டுப் பராமரிப்பும், அவர் கைப்பெட்டியின் சாவி தவிர மற்றச் சாவிகளும், அவள் கைவசமாய்விட்டன. கேயும், அவர் மகள் ஜேனும், பாக்கியத்தைக் கேளாமல் வீட்டில் எதுவும் செய்வதில்லை; வெளிவிஷயங்களில்கூட, அவள் அபிப்பிராயத்தை யறிந்து நடக்கும் வழக்கம், நாளுக்குநாள் பலப்பட்டு வந்தது; ஆயினும், அவள் அதிகாரத்தைப் பற்றி எவரும் நினையாமலும், உணர்ந்து வருந்தாமலும், பாக்கியம் ஒழுகிவந்தாள். தாமஸ் கேயின் குடும்ப விவரங்களை யறியாதவர் எவரேனும் அவர் வீட்டில் பாக்கியம் வாழ்ந்து வருவதைக் கண்டால், அவள் கேயின் மூத்த மகள், அல்லது வீட்டு யஜமானி, என்றெண்ணுவர்.

# கம்ப ராமாயண இன்கவித் திரட்டு*

(885-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ.வே.ப. சுப்பிரமணிய முதலியார், G. B. V. C., வெள்ளக்கால்

## ஊர் தேடு படலம்

அநுமான் சீதையை இலங்கையில் தேடியதைக்கூறுவது.

(ஊர் தேடு—ஊரில் தேடிய)

[அநுமான் பவள மலையிலிருந்து இலங்கா நகரத்தை நோக்கினன். அங்கே உள்ள இராக்கதர் மாளிகைகள் இந்திரன் மாளிகையை ஒத்தவை யென்றால், அவ்வாறு உவமித்தில் குற்றத்தின்பாற் படும்படி அம்மாளிகைகள் சிறந்தன வென்றும், அவ்வாறே அரக்கர் ஐசுவரியம் இந்திரன் ஐசுவரியத்தை யொக்குமென்பது மென்றும், திரிலோகங்களினு முள்ள பெருமையும் ஒளியும் மிக்க எந்த ரத்தினமும் திருமால் மார்பில் அணிந்த கௌத்துவ ரத்தினத்தை ஒத்திராதது போலப், பெருமையும் அழகு முடைய எந்நகரும் இந்நகரை யொத்த தில்லை யென்றும், எந்த ஊரும் இந்த ஊரை யொக்கு மென்பது நரகம் சுவர்க்கத்தை யொக்கு மென்பது போலு மென்றும், வேண்டிய ஒழிவின்றி ஓடச் சூரியன் தேர்க்குதிரைக ளல்லாத எல்லாக் குதிரைகளும் ஒரு கணமும் நிலை பெயர முடியாமல் உலகத்தைத் தாங்கி நிலையாக நிற்கும் திசை யானைக ளல்லாத எல்லாயானைகளும் இந்நகரத்துள்ளன வென்னும்படி குதிரைகளும் யானைகளும் சிறந்தனவாயும் மிகுந்தனவாயு மிருக்கின்றன வென்றும், இராவணன் இந்திரன் ஆட்சியினின்றும் பறித்துக்கொண்டு வந்து வைத்திருக்கின்ற கற்பக தருக்களும் தேவரும் தேவமாதரும் ஏவல் செய்துகொண்டிருத்தல் அவன் செய்த தவப்பய னென்றும், அநுமான் எண்ணினன்.]

14. திருகு நஞ்சினத் தரக்கரும் கருநிறம் தீர்ந்தார்;
அருகு போகின்ற திங்களும் மறுஅற்ற (து;) அழகைப்
பருகும் இந்நகர்த் தன்னொளி பாய்தலிற், பசும்பொன்
உருகு கின்றது போன்றுள துலகுசூழ் உவரி.

---

* All Rights Reserved by the Author

இ - ள் (உண்பவர், வாய்க்கினிய உணவை உண்ணுதல் போலத், தன்னைக் காண்பவர், கண்ணுக்கினிய தனது) அழகை (க் கண்ணால்) உண்ணுவார்போல் ஆவலோடு) காணும் இந் நகரத்தின் ஒளி பாயப் பெற்றதனால், (இந் நகரத்தில் உள்ள) இராக்கதர் (தமக்கியல்பான, கரு நிறம் நீங்கியுள்ளார்கள்; (இந்நகரத்தின்) அருகே செல்லும் சந்திரன் களங்கம் நீங்கினதாம்; இந் நகரத்தைச் சூழ உள்ள (இயல்பாகக் கரியதான) கடல் பொன் உருகுகின்றது போன்றிருக்கின்றது (என்று அநுமான் எண்ணினான்):

திருகுதல் – முறுகுதல் (புறநானூறு). தீர்தல்—நீங்குதல். "'உலகு' என்பது உலகத்தின் ஒரு பகுதியையும் உணர்த்துதலை 'மாயோன் மேய காடுறை யுலகமும்' என்ற தொல்காப்பியத்திலும் காண்க" என்றதனால் 'உலகு' இங்கே இலங்கை நகரத்தை உணர்த்தியது.

இராக்கதர் கரிய நிறம் நீங்கினதும் கடல் பொன்னுருகினாற் போன்றதும் அநுமான் முகக் கண்களாற் கண்டதற்காலக் காட்சிகளாகவும், "அருகு போகின்ற திங்களும் மறுவற்றது" அகக் கண்ணாற் கண்ட பிற்கால நிகழ்ச்சியாகவுங் கொள்க; இப்படலம் 42-ம் பாட்டில் சூரியன் அத்தமித்தல் சொல்லப்படுதலால்.

15\. அண்டம் முற்றவும் விழுங்கிருள் அகற்றும்நின் றவரி
கண்ட ஆற்றின், இக் கடி நகர் நெடுமனைக் கதிர்கள்
உண்ட ஆற்றின், ஒன் றுரைப்பரி (து,) ஒப்பிடில், தன்முன்
விண்ட ஆய்ச் சிறு மின்மினி யென்னவும் விளங்கா.

இ-ள். உலக முழுதும் விழுங்கிய இருளை (அது இல்லா தொழியத் தான் நிலையாக) நின்று நீக்குகின்ற சூரியனை இந் நகரத்து மாளிகைகளின் ஒளிகள் பார்த்தபடியே விழுங்கிய படியால், அச் சூரியன் (உள்ளதாகிய) ஒரு பொருளாகச் சொல்லுதற்கில்லை. (அச்சூரியனை உள்ளதாக வைத்து மேற் கூறிய மாளிகை யோடு) ஒப்பிட்டால், அது அதன்முன் மின்மினிப் பூச்சி (விளங்குதல்) போலவுங்கூட விளங்காததாம்.

அலரி–சூரியன். ஆறு–படி. கடி–காவல். நெடுமை—பெருமை. சிவஞான சித்தியாரின் காப்பில் "செல்வமும் ஒன்றே" என்பதிற் போல, 'ஒன்று' 'ஒரு பொருள்' என்று பொருள் கொள்ள நின்றது. 'உரைப்பரிது' என்பதில் 'அரிது' இன்மை குறித்தது. ஒப்பிடில்—ஒப்பிட்டால். "விண்டு உமிபோனால் முளையாதாம்" என்பதிற் போல, 'விண்ட' 'நீங்க' என்ற பொருள் குறித்தது. "ஆய்—சிறுமை, புறநானூறு 249" (சங்க அகராதி). ஆய்ச்சிறு

மின் மினி—மிகச்சிறிய மின்மினிப் பூச்சி. 'விளங்கா' என்பதில் துவ் விகுதி தொக்கது.

இருள் (ஐ) நின்று அகற்றும் அலரி (யை) மணிக் கதிர்கள் கண்ட ஆற்றின் உண்ட ஆற்றின் (அவ் அலரி) ஒன்று (ஆக) உரைப்பரிது என இயைக்க.

பொன்னே நிலமாகிய இலங்கையில் பொன்னாலும், இரத்தினங்களாலும் அமைக்கப்பெற்ற மாளிகைகளின் ஒளித்திரள், உலக முழுவதையும் விழுங்கிய இருளை விழுங்கிய சூரியனை விழுங்கிய தெனவும், மாளிகை முன் சூரியன், சூரியன்முன் மின்மினியும் ஒவ்வாதெனவும் வியக்குமாறு கூறியது காண்க.

["பொன் மலர், நாற்றம் உடைத்து" ஆனால், எவ்வளவு சிறந்ததாம்! "மாணிக்கம் தித்திக்கில் என் ஆகும் மற்ற மதுரங்களே!" என்ற மனோபாவனைகள் உண்மையானதுபோல "பொன் மணிகளா லியற்றப்பட்ட செயற்கைக் காடுகளும் சோலைகளும் இயற்கை மரங்கள்போலத் தேன் மலர் கனிகளைத் தருகின்ற அற்புதம் இந் நகரத்தினுள்ளதேயன்றி மற்றை நிலவுலகத்திலேனும் வானுலகத்திலேனும் எங்குமில்லை" என்றும், இராவணனுக்கும் பயந்து இலங்கைக்கு மேலாகச் செல்லாமல் சூரியன் உத்தராயன தெக்கிணாயநமாகச் செல்லுகின்றானென்பது உண்மையன்று, நேராக மேலாகச் சென்றால், இந்நகரத்து மதிலொளி கண்கூசச் செய்யுமென்று விலகிச் செல்கின்றானென்றும், கைலாச மலையைத் தூக்கிய வல்லமையுடைய இராவணன், தனக்குப் பகைவர் வானவராதலால் அவர்கள் சேர்தற்கரிதாகச் செய்வேனென்று அவர்களது வானுலகத்தினும் உயரமாக இந்நகர மதிலை அமைத்திருக்கின்றானென்றும், அவன் ஆணையின்றி இம்மதிலைக் கடந்து உள்ளே வாயு நுழையான், சூரியன் பிரவேசியான், இயமனும் போகானென்றால், தேவர் செல்ல வல்லாரல்லரென்று செப்புதல் வீணே யென்றும், இந் நகரத்திலே பாடுவார் பலரெனின், ஆடுவார் அவரினும் பலரென்றும், ஆடல் பாடல்களுக் கியையத் தாளம் தட்டுவார் அவர்களினும் அதிகரென்றும், நர்த்தனஞ் செய்யும் தேவமாதருக்கு எதிராக அவரினும் மேலாக வித்தியாதர மின்னார் நிருத்தம் புரிய, அவரோடு இகலி அவரினும் திறமாக இயக்க மகளிர் நடனமாட, அவருடன் வாதிட்டு இராக்கத மடவார் அவரினும் சிறப்பாக நடிக்கக் கண்டு மகிழ்ந்து எந்நாட்டு மங்கையரும் அவ் அரக்கிகளை எதிரராய் வியந்து

கொண்டிருக்கின்றூர்க ளென்றும், மாளிகைகள்தோறும் சோலைகள் தோறும் கள்ளுண்டு ஆடிப்பாடிக் களிப்படைகின்றவர்களல்லாமற் கவலை யடைகின்றவர்க ளொருவரையும் காண்கின்றிலே னென்றும் அநுமான் கருதினன்.]

16. தேறல் மாந்தினர் ; தேன் இசை மாந்தினர் ; செவ்வாய்
ஊறல் மாந்தினர் ; இன் உரை மாந்தினர் ; ஊடல்
கூறல் மாந்தினர் ; அனையவர்த் தொழுதெழு கோபத்
தாறல் மாந்தினர் ; அரக்கியர்க் குயிரன்ன அரக்கர்.

இ - ள். அரக்கிமார்க்கு அவர்கள் உயிர்போன்ற (கணவராகிய) அரக்கர் (அம்மாதர் கையாற் கொடுக்கப் பெற்று அதனால் இயல்புக் கதிகமாக இனியதான) தேனைக் குடித்து மகிழ்ந்தார்கள் ; (அத்தேனினும் இனிதாக அவர்கள் பாடும்) இசைத்தேனை (ச் *செவி) மடுத்து மகிழ்ந்தார்கள் ; (அவ் இசைத்தேனை அளித்த) செவ்வாயிற் பிறந்த நீர் (ஆகிய தேனை) உட்கொண்டு மகிழ்ந்தார்கள் ; (மீண்டும் அவ் வாயிற் பிறந்த) இனிய பேச்சைக் கேட்டு மகிழ்ந்தார்கள் ; (இனிது பேசியவர் 'ஊடுதல் காமத்திற் கின்பம்' என்று ஊடி அவ்) ஊடலில் ('தொடாதே' 'தூரப்போ' என்பன போன்ற வார்த்தைகளைக்) கூறுதலையும் (பிரியமாகக்) கேட்டு மகிழ்ந்தார்கள் ; (அவ் ஊடல் தணியத்) தொழுது (அதன் பயனாகக்) கோபம் ஆறுதலை உணர்ந்து மகிழ்ந்தார்கள்.

தேறல்-தேன் ; கள் என்றும் பொருள் கூறலாம். 'மாந்தினர்' எனப் பலமுறை வருபவைகளுள் முதல் மூன்றும் 'உண்டார்' என்ற செம்பொருளையும் அடுத்தவை இரண்டும் இறுதிய தொன்றும் முறையே 'கேட்டார்' 'உணர்ந்தார்' என்ற தாற்பரியப் பொருள்களையுந் தந்து நின்றன. 'தேன் இசை' யை 'இசைத் தேன்' என மாற்றுக. தேன் 'இசை'யைத் 'தேன்போலும் இசை' என்று கொண்டால், 'இசை மாந்தினர்' என்பதற்கு 'இசையைக் கேட்டு மகிழ்ந்தனர்' என்று பொருள் கொள்க. கோபத்து ஆறல்—கோபத்தின் தணிவு.

அநுமான், இதன் முன், இராக்கதர் "களிக்கின்றூரன்றிக் கவல்கின்றூ ரொருவரைக் காணேன்" என்று, இப்போது இவ்வாறு களித்தார்க ளென்று தான் கண்டவற்றையும் ஊகித்தவற்றையும் தனக்குத் தானே கூறுகின்றூனதலால், அதனை விளக்க, 'மகிழ்ந்தார்' என்ற சொல்லை வருவிக்க வேண்டிய இடங்களெல்லாவற்றிலும் வருவித்துப் பொருள் கூறப்பட்டிருத்தல் காண்க.

*செவிமடுத்தல்-கேட்டல் ; மடுத்தல்-குடித்தல்.

ஓர் இராக்கத மாது கள்ளுக்கொடுக்க அவள் கணவன் குடித்துக்களித்தான், வேறொருத்தி பாட அவள் புருடன் கேட்டு மகிழ்ந்தான், மற்றொருத்தி வாயமுதை அவள் கொழுநன் உண்டு உவந்தான் என்றிவ் வாறாகத் தொடர் பின்றிப்பிரித்தும் இப்பாட்டுக்குப் பொருள் செய்யலாம்.

(தொடரும்)

## மதிப்புரை.

42. இல்லற இரகசியம் அல்லது இகபர பூஷணம். [பிரம்ம ஸ்ரீ ஹிமயகிரி ராஜரிஷி பால சன்னியாசி சுவாமிகளின் அநுக்கிரகத்தின் பலனாக ஸ்ரீ மோ. முத்துசாமி ஐயர், பி. ஏ., எல். டி., எழுதியது. விலை 0-12-0 M. வெங்கடசாமி ஐயர், அரக்கோணம்]. 'இல்லற இரகசிய' விஷயத்தைப் பற்றிப் 'பால சன்னியாசி' யிடம் அறிந்துகொண்டமையே, இந்நூலின் போக்கைக் குறிப்பிக்கும். தமிழ் நீதி நூல்கள் புராணங்களி லிருந்து பல செய்யுள்கள் எடுத்துக் கையாளப்பட்டிருக்கின்றன.

43. சோதிடப் போகாதி. [மதுரைப் புத்தக சாலை ஸ்ரீ எஸ். கூடலிங்கம் பிள்ளை ஆக்கியது. விலை ரூ. 2-4-0] சோதிடச் சொற்களை விளக்கி, பலா பலங்களையும் சந்தேகங்களையும் எற்ற வாறு கூறும் இந்நூல், சோதிடருக்கும், தமிழ் ஆராய்ச்சி செய்யும் பிறர்க்கும் பயன்படும். இந் நூலாசிரியர், வேறு பல சோதிட நூல்களையும் பிரசுரஞ் செய்திருக்கின்றனர்.

44. சிற்ப நூற் பொக்கிஷம். [இதுவும் மேற்படி யார் இயற்றி யது. விலை ரூ. 1-0-0] 'மனையடி சாஸ்திரம்' என்னும் இந்நூல் செய்யுள்களா லானது. சில செய்யுள்களுக்குப் பொருளும் கூறப் பட்டுள்ளது. இத்தகைய நூல்கள் நமது முன்னோரின் நம்பிக்கை கள் கொள்களை ஒருவாறு விளக்குவன. இவற்றிலும் அதிகமாகத் தற்காலத்தவருக்குப் பயனளிக்க வல்ல பழைய சாஸ்திர நூல்களை வெளியிடுதல் நலமாகும்.

45. நாட்டுச் சாயம். [தமிழ் நாடு (திருப்பூர்) காங்கிரஸ் கத்தர் போர்டாரால் பிரசுரிக்கப்பட்டது ஆசாரியர் பிரபுல்ல சந் திரராய் இயற்றியதன் மொழிபெயர்ப்பு.] நூற்சாயம், நெசவுத் தொழில்களில் உழைக்கும் பரம்பரைத் தொழிலாளிகளான சாலி யர், வள்ளுவர் முதலியோருக்கும்; கத்தர் பிரசார பலனாக, விவ

சாயத்துக்கு அடுத்த படியில் நாட்டின் ஜீவாதாரமான இத்தொழில்களில் இக்காலத்தில் பயின்றுவரும் பல்லாயிரர் பிறர்க்கும், இப்புத்தகம் இன்றியமையாத தென்கலாம். இரசாயன சாஸ்திர மகா நிபுணர் இயற்றியதாதலின், பண்டிதர் பாமரர் அனைவராலும், இதிற் காணும் முறைகளும், பிரமாணங்களும் ஒப்புக்கொள்ளப்படும். படிப்பவர் எளிதில் பரீக்ஷை பார்த்துப் பயிலும் விதமாக, சாயமேற்று முறைகள் கூறப்பட்டு, சாயத் துணிகளின் மாதிரித் துண்டுகளும் ஒட்டப்பட்டிருக்கின்றன. நாட்டிலே கத்தரைப் பரப்புதற்கு இந்நூல் பேருதவியாகும். இதன் தமிழ் நடை சுலபமாய், யாவருக்கும் பொருள் விளங்கும்படி இருக்கின்றது. இத்தகைய நூல்களே இக்காலத்துக் கேற்றன ; நாட்டுக்கு நற்பலன் தரக்கூடியன ; பரோபகாரஞ் சிறந்தன. மா.

---

"விஜயமார்த்தண்டம்"
தேவிட்டாத செந்தமிழ்
நாவல் 2-ம் பதிப்பு ... 1—4—0
பஞ்சாமிர்தம் ஆபீசு, மையிலாப்பூர், சென்னை.

---

"தாருல் இஸ்லாம்"

சித்திரப்படத்துடன் கூடிய சிறந்த
செந்தமிழ்ச் சஞ்சிகை.

இதன் மேன்மையையும் அழகையும் அறியாதவர் இத்தமிழுலகிலும் உண்டோ? இது வரையில் 5000-த்துக்கு மேற்பட்ட அறிஞர்கள் இதனால் பெரும்பயன் அடைந்து வருகின்றனர். இஸ்லாத்துக்கும் இதர மதங்களுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளையும், மேன்மை தாழ்மைகளையும் நன்குணர்வதற்கு இஃதொன்றே சிறந்த பத்திரிகையாயிருக்கிறது. மத சீர்திருத்தத்துக்கும், ஆசார சீர்திருத்தத்துக்கும் கல்வியின் முன்னேற்றத்துக்கும் ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்குங் இப்பத்திரிகையே கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிற தென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. இதன் அருமையையும் பெருமையையும் ஆழ்ந்து நோக்குங்கால் இதன் சந்தா மிகக் குறைவான தாகவே காணப்படும்.

வருஷசந்தா ரூ. 3. தான். வெளிநாடுகளுக்கு ரூ. 4.

ஹிந்து சகோதரர்களுக்கும் சொதுஸ்தாபனங்களுக்கும் எல்லா மாணவர்களுக்கும்.

வருஷசந்தா ரூ. 2. வெளிநாடுகளுக்கு ரூ. 3.

ஒவ்வோர் ஆண் பெண் கையிலும் இப்புஸ்தகம் ஹஸ்த பூஷணமாய் விளங்கத் தக்கது. உடனே எழுதுங்கள்.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபாற்பெட்டி நெ. 15, சென்னை.

969

## பலதுறைப் பொறுக்குமணிகள்

### பத்திரிகை ஆராய்ச்சி

(864-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### I. மதவிஷயக் குறிப்புக்கள்

ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி. CXIV



124. தயானந்த ஸரஸ்வதி: — ஆரியஸமாஜ ஸ்தாபகரமான இந்த மகானது சதாப்தத் திருவிழா, சிலநாட்களுக்கு முன்பலவிடங்

களில் கொண்டாடப்பட்டது, ஒரு சிவராத்திரி யிரவிலே, சிவன் கோயிலில் பூஜை நடத்திய மற்றெல்லோரும் அயர்ந்து தூங்கி விட, சிறு பிராயத்தினரான இவர் மாத்திரம் பக்தி சிரத்தையுடன் கண்விழித்துக் கொண்டிருக்கையில், எலிகள் வந்து சிவலிங்கத்தின் மேலேறி, நைவேத்தியங்களைத் தின்று, பல ஆபாசங்களைச் செய்த தை இவர் பார்த்து, அந்த க்ஷணத்திலேயே விக்கிரக ஆராதனையில் அவநம்பிக்கையையும் அருவருப்பையும் கொண்டார். அப்பால், இவர் சகோதரியும் மாமனும் இறந்த காலங்களில், வாழ்க்கை நிலையாமையை நன்குணர்ந்தார். இக் காரணங்களால் இவரது தீவிர புத்தியும் மனமும் நாடோடியான ஆசார அநுஷ்டானங்களில் வெறுப்புற்று, விடுதலை யடைந்தன-இவர் தன் வீட்டை விட்டு வெளியேறித் தேசசஞ்சாரம் செய்து, வேதங்களை நன்கு படித்தறிந்து, சன்னியாசம் பூண்டு, பலதுறைகளில் நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைத்து, ஆரிய ஸமாஜத்தை நிலைநாட்டியபின்னர், 1883-ல் இவ்வாழ்வை நீக்கினார். இவர் செய்த மதப்பிரசாரத்தை வெறுத்து இவரைச் சிலர் விஷமிட்டுக் கொல்ல முயன்றது முண்டு. இவர் அகால மரணமும் அதனால் தான் என்பர். இக் காலத்தில் ஆரிய சமாஜம் வட இந்தியாவிலே சில பாகங்களில் செழித்தோங்கி, கல்விபோதித்து அறிவைப் பரவச் செய்யு முறையில், நாட்டுக்குத் தொண்டு செய்து வருகின்றது-இந்த சமாஜத்தார், சாதிபேதங்களை யகற்றவும், விதவா விவாகத்தைப் பரவச் செய்யவும் முயன்று வருகின்றனர். விக்கிரக ஆராதனையை உக்கிரமாய் அநுஷ்டித்துச் சாதிபேதங்களை ஆதிவேத முறையாகக் கருதிப் பேணி, விதவா விவாகங்களை உதவாத துஷ்கிருத்தியங்களாக மதித்தொழுகும் தக்ஷிணத்திலோ, இந்த மகானது கொள்கைகள் ஒரு சிறிதும் வேரூன்றவில்லை என்கலாம்-அக்காளிலே ஆதிசங்கரரையும் இராமாநுஜரையும் ஈன்றளித்துப் புகழெய்திய தக்ஷிண பூமி, இக்காளிலே, ராமமோஹனராய்; தயானந்த ஸரஸ்வதி, வித்தியாசாகரர் போன்ற மகான்களைப் பெறுமையினால், பாதகண்டத்தின் இதர பிரதேசங்களை விட அதிகம் இகழ்வெய்தி, இன்னும் அந்தகாரத்தில் ஆழ்ந்து கிடந் தழுவுகின்றது.

## II. சில்லறைக் கலம்பகம்.

125. குஷ்ட ரோகம் அல்லது பெருவியாதி.—இந்நாள் வரை கர்ம வியாதி யென்றும், நிவர்த்திக்க முடியாததென்றும் இந்நோயை நினைத்தனர். மேல்நாட்டு வைத்திய நிபுணர்களின் ஆராய்ச்சிப் பலனாக, இதற்கும் நிவர்த்தி தென்பட்டிருக்கிறது. குஷ்டரோகிகள் பிறர்க்குத் தம் நோயைக் கொடுத்துப் பரவச்

செய்யாதவாறு அவர்களைத் தனிக்க வைத்து, தக்க காலத்தில் நோயாளிகளுக்குச் சிகிச்சையும் செய்துவந்தால், இந்நோயை வேரறுத்துத் தொலைத்துவிடலா மென்று நம்புகின்றனர். இந்தியாவுட்பட்ட பிரிட்டிஷ் சக்ராதிபத்தியத்திலே, மொத்தம் 3 லக்ஷம் குஷ்டரோகிகள் உண்டென்றும், அவரில் (இந்தியாவின் பெரும் பாக்கியம்!) 2 லக்ஷம் பேர் இந்நாட்டினர் என்றும், மதிப்பிட்டிருக்கின்றனர். 1921-ம் வருஷத்து ஜனசங்கைக் கணக்குப்படி இந்தியாவிலே மொத்தம் 102,513 குஷ்டரோகிகள் இருக்கின்றனர்; ஆனால், இவ் விஷயத்தில் ஜன சங்கைக் கணக்குத் துல்லியமானதன்று; உண்மையில், 2 லக்ஷத்துக்குக் குறைவில்லையென்பதே பலர் மதிப்பு; இந்தியாவில் மாத்திரம் 5 லக்ஷம்பேருண்டென்று மதிக்கின்றனர் சிலர். 2 லக்ஷத்துக்குக் குறைவில்லை என்பது நிச்சயம். ஜனசங்கைக் கணக்குப்படி சென்னை மாகாணத்தில் மட்டும் 13,753 குஷ்டரோகிகள் எனின், உண்மையில் முப்பதினாயிரவருக்குக் குறைவில்லை என்னலாம். இந்தியாவிலே குஷ்டரோகிகளுக்கென்று 94 தனி ஆசுபத்திரிகள் உள; அவற்றில் 9226 பேர் தனித்துச் சிகிச்சைக்குள்ளாகி வருகின்றனர். எனவே, மிகுந்துள்ள 190774 பேரும் யதேச்சையாய் வாழ்ந்து, நோயைப் பரப்பிவருகின்றனரென்றே கூறவேண்டும்; இந்த விசனகரமான நிலைமையைச் சீர்ப்படுத்தி, இந்நோயை ஒழித்துவிடும் பொருட்டு, ஒரு புதிய கிளர்ச்சியும் முயற்சியும், இதற்கெனப் பல சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றன; இராசாங்கத்தார் முன்வந்து இவ் விஷயத்தில் உழைக்கச் சித்தமாயிருக்கின்றனர். இந்தியா மொத்தம் லக்ஷத்தில் 32 பேரும், சென்னை மாகாணத்திலே லக்ஷத்தில் 37 பேரும் குஷ்டரோகிகளாவர்; 'யூனைடெட் கிங்டம்' என்னப்படும் இங்கிலாந்து வேல்ஸ் ஸ்கோத்லாந்து அயர்லாண்டு எல்லாவற்றையுஞ் சேர்த்துப் பார்த்தால், நமது 2 லக்ஷத்துக்கெதிராக அங்கே 50 பேர்தான் குஷ்டரோகிகள். இதனால் நம்முடைய முயற்சி இவ் விஷயத்தில் எவ்வளவு பேரளவினதா யிருக்கவேண்டுமென்பது துலங்கும். ஒரு பைசாவோ ஒரு லக்ஷமோ, கொடுக்கும் நிலைமையிலுள்ள செல்வர்களுக்கு இதனினும் மேம்பட்ட தர்மமில்லை என்று கூறவேண்டா.

126. காசி ஹிந்து சர்வகலாசாலை.—பிரான்ஸ் தேசத்திலே ஒரு கனவான் சமீபத்தில் காலஞ் சென்றார். அவருக்கு நமது இந்தியா தேசத்தின்மீது பிரியம் அதிகம். அதனால், அவர் மனையாட்டி, அவர் தன் வாழ்நாளெல்லாம் சேகரித்துள்ள சிறந்த சித்திரப் படங்கள் எல்லாவற்றையும், அவற்றை வைத்தற்கு ஒரு காட்சிச்சாலை கட்டுதற்கென்று பதினையாயிரம் பவுன் பணத்தையும், தன்

கணவரின் ஞாபகச் சின்னமாக, இந்தச் சர்வகலாசாலைக்கு உதவி யிருக்கிறாள்.

127. குறைவு அழிவு இல்லாத சக்தி.—உஷ்ணத்துக்கும் சக்திக்குமுள்ள சம்பந்தத்தை யாவரும் அறிவர். மெஸபொடேமியா முதலிய இடங்களை மேல் நாட்டார் விரும்புவதன் காரணம், உஷ்ண மூலங்களாகிய அங்குள்ள எண்ணெய்க் கிணறுகளேயாம். ஸர் சார்ல்ஸ் பார்ஸன்ஸ் என்ற ஆங்கில மேதையர், எண்ணெய் விறகு நிலக்கரி முதலிய தொந்திரவுகளே யின்றி, ஓயாத சக்தி மூலத்தைப் பூமியின் வயிற்றினின்றும் பெறுமாறு முயன்றுவருகிறார். பூமியின் உட்பாகம் அக்கினி மயமாயிருப்பதால், 12 மைல் ஆழத்துக்குப் பூமிக்குள் ஒரு குழாயை யிறக்கி, அதன் வழியாகப் பூமிக்குள்ளிருக்கும் உஷ்ணத்தை மேலே கொணர்ந்து, உபயோகப்படுத்திக்கொண்டால், அப்பால், மனிதருக்கு வேண்டிய சக்தியனைத்தையும் வேறு கவலையின்றிப் பெறலாமன்றோ. முப்பது கோடி ரூபாய்மட்டு முண்டானால், இதை நிறைவேற்றிவிடலாமென்பது அவர் மதிப்பு.

128. இந்தியாவிலே கண்ணாடி.—முகம்மதியர்களால் தான் முதல்முதல் கொண்டுவரப்பட்ட தென்றும், அதற்குமுன் இந்தியர் கண்ணாடியை அறியாரென்றும், சிலர் கூறுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு—அதாவது முகம்மது நபி பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு—முற்பட்ட தமிழ் நூல்களிலும், சதபாத பிராமணம் முதலிய ஆரிய நூல்களிலும் கண்ணாடி கூறப்பட்டிருப்பதுமன்றி, இப்பொழுது மோஹன்ஜோதாரோ என்ற இடத்தில் தோண்ட அகப்பட்ட கண்ணாடி மணிகள், இற்றைக்கு 4500 ஆண்டுகளுக்கு முற்பட்டனவாக மதிக்கப்படுகின்றன.

129. விளம்பர முறை.—இது மேல் நாட்டாரால் ஒரு தனிக்கலைபோலப் பயிலப்பட்டு வருகிறது. அதைப் பற்றி யெழுதும் ஒருவர், தினசரிப் பத்திரிகைகளில் செய்யும் விளம்பரங்கள் சில மணிநேரமோ அல்லது இரண்டோரு நாளோ தான் பயன்படுமென்றும், மாதப் பத்திரிகைகளில் செய்யப்படும் விளம்பரங்கள், ஒருமாத முதல் மூன்றுமாத காலம் வரை படிக்கப்பட்டுப் பயன் தரும்; பிற்கூறிய மாதப் பத்திரிகைகளைக் கல்விப் பயிற்சியிலும் நாகரிகத்திலும் மேம்பட்டாரே அதிகம் வாசிப்பரென்றும் கூறுவர்.

130. பஞ்சாப் விதவா விவாக சகாய சபை.—இச் சபையாரின் உதவியால், இந்தியாவிலே, சென்ற 1924-ம் வருஷத்தில், மொத்தம் 1603 விதவா விவாகங்கள் நடந்தன; 338 பிராமணர்களுக்குள் ; சென்னை மாகாணத்தில் நிகழ்ந்தவை, ஆறுதான்,

131. **திருவாங்கூர்-ஆள்வார்.**—திருவர்ங்கூரை ஆண்டுவரும் பிரதிநிதி மகாராணியார், அந்த ராஜ்யத்துக்குள் எந்தக்கோயிலிலும் (ஆடு கோழி முதலிய பிராணிகளைக் கொல்லும்) பலிகொடுக்கக் கூடாதென்று ஆஜ்ஞாபித்து விட்டனர். நாயனா வாக்கின்படி அவரை எல்லா உயிரும் புகழ்ந்து கை கூப்பித் தொழும். ஆள்வாரை ஆண்டுவரும் மகாராஜா, அந்த ராஜ்யத்தில் விதவா விவாகம் புரிந்த தம் பதிகள் இருவரை தேசப் பிரஷ்டம் செய்து விட்டார்; இச்செயலை அறிவாளர் அனைவரும் இகழுவரென்பதுமுறுதி.

132. **ஓர் அதிசயக் கடியாரம்.**—அமெரிக்காவில், ஜெர்ஸி நகரத்திலுள்ள தொழிற் சாலையில் கால்சேட் கம்பெனியாரால் ஒரு பிரமாண்டமான கெடியாரம், செய்யப்பட்டு வருகின்றது. உலகிலுள்ள கெடியாரங்களி லெல்லாம் அதுவே பெரிய கெடியாரமாகும். அதை இயக்குவது மின்சார சக்தி; கால் குதிரை சக்தி கொண்ட மோட்டாரால் அதற்குச் சாவி கொடுக்க வேண்டுமாம். அதன் முகம் 50 அடி குறுக்களவுள்ளது; நிமிஷ முள் 38 அடி 3 அங்குலம்; மணி முள் 27 அடி 6 அங்குலம்; இரண்டுஞ்சேர்ந்து 3,825 பவுண்டு நிறையுள்ளது. சுமார் 200 விளக்குக்கள் அம்முட்களைச் சுற்றி எரிவதால், இரவிலும் பகலைப் போலவே மணி பார்க்க முடியும்.


## The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-Stands as a best medium for advertising.

News of varied interest-a special feature.

### "இந்து நேசன்"

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |

மலாய், மோரிஸ், நெட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 0 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 0 | 0 |

*For particulars apply to:*

THE MANAGER, THE "HINDU NESAN"
65, Armenian Street, MADRAS.

974

# விவாக ஸம்ஸ்காரமா?
# மற்றென்ன ?

"மறப்பினும் வேதம் கொளலாகும்; பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்"

(சுதேசமித்திரனிலிருந்து எடுக்கப்பட்டது)

## சென்னை ஹைகோர்ட்டு.

(சிப் ஜஸ்டிஸ், ஜஸ்டிஸ் கிருஷ்ணன் முன்பாக.)

4—2—25.

### ருதுசாந்திக்காக 5000 ரூபாய்

திருச்சிராப்பள்ளிஜில்லாவிலிருக்கும் குழித்தலைக் கருகிலுள்ள கள்ளப்பள்ளியில் வசித்து வரும் கருப்பத்தூர் ராஜ கோபாலய்யருடைய மனைவியாகிய சேஷியம்மாள் என்னும் தங்கம்மாளால் பிராமி சரி நோட் மீது ஒரு வியாஜ்யம் தொடரப்பட்டது. இந்த வியாஜ்யத்தில் இம்மாது வாதியாவாள். 1918-ம் வருஷத்தில் பிரதிவாதியாகிய ஸ்ரீமான் சாமிநாதய்யர் என்பவர் வாதிபெயரால் 5000 ரூபாய்க்கு ஒரு பிராமசரி நோட் எழுதிக் கொடுத்திருந்தார். அவ்விதம் எழுதிக் கொடுக்கப்பட்ட நோட்டினால் தனக்குச் சேரவேண்டிய தொகையைப் பெறுவதற்கு அந்த அம்மாள் திருச்சிராப்பள்ளி சப்கோர்ட்டில் பிராது கொடுத்திருந்தார். அப்பிராதை விசாரணைக்கு எடுத்துக் கொண்டபொழுது பிரதிவாதி தாம் பிராமசரி நோட் எழுதிக் கொடுத்தது உண்மையென்றும், ஆனால் அதில் காணப்படும் தொகையைப் பெறவேயில்லை யென்றும் சொல்லி, பின்வரும் விவரங்களைத் தெரிவித்தார். பிரதிவாதியின் புத்திரியை வாதியின் மகனாகிய ஸ்ரீமான் வெங்கடராமனுக்கு கலியாணம்செய்விக்கப்பட்டு மாப்பிள்ளைக்கு கலியாணகாலத்தில் 1000 ரூபாய் ரொக்கமும், 4 எக்கரா நிலங்களும் தம்மால் கொடுக்கப்பட்டதென்றும், 1917-ல் பெண் ருதுவாகி ஒரு வருஷத்திற்கு மேலாகியும் மாப்பிள்ளை சாந்தி செய்ய மறுத்து வந்தாரென்றும், பிறகு இந்தப்

பிராமிசாரி நோட்டை எழுதிக் கொடுத்தது நிர்ப்பந்தத்தின் பேரில் வழக்கத்திற்கு விரோதமாக பிரதிவாதி வீட்டில் 1919-ம் வருஷத்தில் சாந்தி முகூர்த்தம் நடந்ததாகவும், 1920-ல் வாதியும் அவளுடைய கணவனுமாகச் சேர்ந்து அவர்களுடைய புத்திரனுக்குஇரண்டாந்தாம் மணம்புரிவித்தார்க ளென்றும் எடுத்துரைத்தார்.

பிரதிவாதி சொல்வது உண்மையாகப் படுவதாக நம்பி, சப்ஜட்ஜு வாதியின் வழக்கத்தைத் தள்ளிவிட்டார்.

அதை ஆட்சேபித்து ஹைகோர்ட்டில் அப்பீல் செய்து கொள்ளப்பட்டது.

வாதி சார்பாக வாதித்த ஸ்ரீமான்கள் கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்காரும், டி. எல். வெங்கிட்ட ராமய்யரும், 1918-ல் சம்பந்திகளின் கடிதப் போக்கு வரத்தைக் கவனிக்கு மிடத்து ஒரு வித மனஸ்தாபமு மில்லை யென்று விளங்குமென்றும், பிரதிவாதி சொல்லியிருக்கும் வண்ணம் பணம் பறித்திருக்க முடியாதென்றும், வாதியும் அவளுடைய கணவனும் பெரிய பணக்காரர்களாகையால் பணமுடை ஏற்பட்டிருக்க ஹேஷ்யமில்லை யென்றும், பிரதிவாதி தம்முடைய கட்சி வகுத்தை ருசுப்பிக்கவேண்டு மென்றும் எடுத்துச் சொன்னார்கள்.

இதைக் கேட்ட ஜட்ஜுகள் எல்லா விஷயங்களையும் ஆராய்ந்து, பிராமசரி நோட் ஏற்பட்ட காலத்தில் வாதிகள் பணக்காரராக இருந்திருக்க முடியாதென்று விளங்குகிற தென்றும், இதர காரணங்களை நோக்குமிடத்துப் பிரதிவாதி சொல்லிக் கொள்வது சரியாகப் படுவதாகவும் அபிப்பிராயப்பட்டு, கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை ஊர்ஜிதப்படுத்தினார்கள்.

வக்கீல்கள் ஸ்ரீமான் என் எஸ். ஸ்ரீனிவாசய்யரும் ஸ்ரீமான் எஸ். வி. நாராயணய்யரும் பிரதிவாதிக்காக ஆஜரானார்கள்.

---


## பத்மாவதி சரித்திரம்

முதல் 2 பாகங்களும்—படங்களுடன்

ஐந்தாம் பதிப்பு ரூ. 2—0—0

பஞ்சாமிர்தம் பத்திரிகை ஆபீசு,

மயிலாப்பூர், சென்னை.

# பத்திராதிபர் குறிப்புக்கள்.

(888-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

59. அகில நாடுகளின் அபின் சங்கம்.—அபினி விஷயத்திலே, உலகத்தி லுள்ள நாடுகளில் முக்கியமானதொன்று இந்தியா என்பதையும்; இந் நாட்டிலிருந்து வெளி யேறும் அபினியினால், மலேயா சீனா முதலிய நாடுகளி லுள்ளவர் விஷம்போன்ற இந்த லாகிரி வஸ்துவையதிகம் பெற்றுக் கெடுகின்றன ரென்பதையும், இதற்கு முன்பே விளக்கியிருக்கிறேன். இவ் விஷயமாக, லீக் ஆப் நேஷன்ஸ் என்னும் சகல சமூக சங்கத்தின் சார்பினில் ஐரோப்பாவிலே கூடின சபையிலே, இந்தியாவின் பிரதிநிதியாயிருந்தவர், இந் நாட்டாருக்கு இவ் விஷயத்தி லுள்ள சிரத்தையையும் நியாய வுணர்ச்சியையும் பிரதிபலிக்காது, இதனால் கிடைக்கும் வருமானத்தையே கருதிய சர்க்கார் அபிப்பிராயத்தை ஆமோதித்து வாதாடியிருப்பது, இந்தியர் அனைவராலும் விசனிக்கத் தக்கது. இந்தியக் குடிகளின் பிரதிநிதியாக அந்நியரான அரசாங்கத்தைச்சார்ந்த ஓர் ஐரோப்பியர் நடித்தால், வேறெவ்வாறு முடியும்?

60. குதிரைப் பந்தயம்.—பம்பாயிலே ஏழைகள் இருவர் குதிரைப் பந்தயத்தில் பணயம் வைத்துத் தோற்றதன் நிமித்தமாக, தற்கொலையும் கொலைகளும் நிகழ்ந்துள்ளன. செல்வரைப்போல ஏழைகளும் நடித்து நாசமுறுதல் ஏழைகளின் மதியீனமே யாயினும், செல்வமும் ஏழைமையும் அவரவர் யோக்கியதைக்கும் குண விசேஷத்துக்கும் ஏற்றவாறின்றி அதிர்ஷ்ட வசமாய் அமைவனவாதலால், ஏழைகள் வீணிற் கேடுறுது தடுப்பது, செல்வரையும் அரசாங்கத்தாரையும் பொறுத்ததாகும். நம் மாகாணத்திலே கிண்டிக் குதிரைப் பந்தயத்தில் பலர் பாழடைவதும் பிரபல விஷயமே, இப் பந்தயங்களில் பணயம் வைத்துச் சூதாடுவதை அறவே தடுத்துவிடுவது உத்தமமாகும். அவ்வாறு செய்யாவிடினும், ஏழைகள் இதில் கலந்து கெடாவண்ணம் தடுப்பது அத்தியாவசிய மாகும்.

61. ஆங்கில-இந்தியருக்குத் தனி வண்டிகள்.—இதுகாறும் ரெயில் பாதைகளில் வெள்ளைக்காரர்—சட்டைக்காரர்—பறங்கிகள் என்னும் வர்க்கத்தினருக்கு மூன்றாவது வகுப்பில் தனி வண்டிகள் ஏற்பட்டுவருகின்றன. வர்ணம் பற்றிய இந்த வித்தியாசத்தை யொழித்து, மூன்றாவது வகுப்பில் பிரயாணஞ் செய்யும் ஆங்கில-இந்தியர்களும் மற்றவரைப் போலவே சாதாரண வண்டிகளில்தான் இனிமேல் பிரயாணஞ் செய்யவேண்டு மென்று சட்டம் ஏற்பட்டு வருகின்றது. ஜனங்களின் ஐக்கிய வுணர்ச்சியைக் கெடுக்கும் ஜாதி மத நிற பேதங்கள் தொலைவது நன்மையே யாயினும், ஆயிரக் கணக்கான நிர்ப்பந்தமான பேதங்கள் ஒழியாது தழைத்துவர, இரு வகுப்பாருக்கும் சௌகரியமான இப் பேதமட்டும் நீங்குவது அவ்வளவு விரும்பத்தக்கதெனத் தோற்றவில்லை. தொப்பியும் பூட்சுமணிந்து, வாயிற் பெரிய சுருட்டுப் புகைத்து, டாம் டீம் என்று உரப்பி, அறியாத ஜனங்களை மிரட்டி வெருட்டிவரும் ஆங்கில-இந்தியருக்கு, இதுகாறும் ஒரே வண்டி தனித்திருந்தது போய், இனி, அவர்களில் ஒவ்வொருவன் ஏறும் வண்டியும் அவனவனுக்குத் தனியாகி விடுமென்று அஞ்சுதல், தவறாகாது. பழக்க வழக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் அஜகஜாந்திரம் வித்தியாச முள்ளவர்கள், மனமுகந்து கூடி அளவளாவுதல், சாத்தியமன்று; விரும்பத் தக்கதுமன்று.

62. வைக்கம் ஸத்யாக்ரஹம்.—இந்தப் பத்திரிகையின் முதலாவது காசிலே, போன சித்திரை மதியிலே, என் முதலாவது குறிப்பாக, இவ்விஷயத்தைப் பற்றியே எழுதினேன்—(பஞ்சாமிர்தம்—82-ம் பக்கத்தைப் பார்க்க.) ஏறத்தாழ ஓராண்டு கழிந்தும், இன்னும் இப்போராட்டம் முடிந்தபாடில்லை! திருவாங்கூர்ச் சட்ட சபையிலே இதைப் பற்றி யாலோசனைக்கு வந்த பிரேரணையும், 'தீண்டாச்சாதி' ஒருவர் வோட்டினாலேயே தோல்வி யடைந்துவிட்டது. தானே தன் தலைமேல் மண்ணைவாரிப் போட்டுக்கொள்ளும் யானையேபோல்வார் இவர்! 'குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு' என்னும் வசைமொழி இன்னார்க்கே தகும். சட்ட சபையிலே ஆலோசனைக்கு வந்த பிரேரணை நிறைவேறி யிருப்பின், மகாராணிப் பிரதிநிதியாரின் வேலை சுலபமாயிருந்திருக்கும். இப்பொழுது அவர்கள் ஸத்யாக்ரகிகளுக்கு அனுகூலமான உத்திரவை யளித்தல், குடிகளுடைய பிரதிநிதிகளின் அபிப்பிராயத்துக்கு விரோதமாக நடப்பதாகும். ஆயினும், சர்க்கார் அதிகாரிகள்

பலர் பிரேரணைக்கு விரோதமாக உழைத்து வோட்டுக் கொடுத்ததாகத் தெரியவருகின்றது; பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர்களுடைய வோட்டுகளை மட்டும் கணக்கிட்டால், பிரேரணை நிறைவேறிற்றென்றே கூறவேண்டும்; ஆகையால், மகாராணியாருக்கு நியாயஞ்செய்ய இஷ்டமிருந்தால், பாமர ஜனங்கள் மனோபீஷ்டத்துக்கு மாறாகக் கோயில்களில் இரத்தப் பலியைத் தடுத்தது போலவே "வைதிக ஜனங்கள்" மனோபீஷ்டத்துக்கு மாறாக, இந்த அநியாயத்தையும் நீக்கலாகும்.

63. கல்விப் பயிற்சியும் பிரமசரியமும்.—முற் காலத்திலே கல்விப்பயிலும் பிரமசரியமும், இல்லறம் நடத்தும் கிருகஸ்தாசிரமும், ஒன்றன்பின் ஒன்றாய், வெவ்வேறாய் இருந்தன. இக்காலத்திலோ, வித்தியார்த்திகள் கிரகஸ்தர்களாகி, அதனால் ஏற்படும் பல தொந்திரவு சங்கடங்களால், சந்நியாசத்துக் குரிய விரக்தியையும், இருபது பிராயம் நிறையு முன்னரே அடைந்து விடுகின்றனர். எனவே, இலக்கியங்களில் காணும் திணைமயக்கத்தைபோல, ஜனசமூகத்திலே ஆசிரம மயக்கம் பரந்து காண்கின்றது. இவ்வாறு பாலிய விவாகஞ் செய்வதால், யுவதிகளின் மரணமும் பாலிய விதவைகளின் தொகையும் பெருகுவதுமன்றி, மங்கலமாய் வாழும் தம்பதிகளுமே அகால வயோதிகத்தை அடைந்து, பிஞ்சிற் பழுத்து விடுகின்றனர்; ஐம்பதுக்குரிய சுலோசனங்களுடன் ஐந்து பிராயத்திலேயே இலங்குவாராகி, பலவித நோய்களுக்குட்பட்டு, ஜீவசக்தியும் சரீர வளர்ச்சியும் குன்றி, ஒன்றுக்கும் உதவாதவராய் உயிர்தாங்கித் திரிகின்றனர். இந்தத் தீய வழக்கம் பிராமணர்களுக்குள்தான் விசேஷமாய் நடைபெறுகின்றது. இக்காலத்திலே பிராமணர்கள் பல துறைகளிலும் க்ஷீணமடைந்து தாழ்வுற்று வருதற்கு, இவ்வழக்கம் ஒரு முக்கிய காரணம் என்றால், தவறாகாது. பிராமண சமூகத்தைச் செம்மைப்படுத்தி மீண்டும் மேன்மை யடையச் செய்வதற்கு, வித்தியார்த்திகளை கிரகஸ்தர்களாக்கி விடும் வழக்கத்தை நீக்குவது, முதற்படியாகும். இவ்வழக்கம் சாஸ்திர விரோதமானது, ஆயுர்வேதம் ஒப்பாதது, பல தீங்குகளை விளைப்பது என்பதை, எவருமே மறுக்கார். பிராமண சமூக நாயகர்கள் ஒருசேர்ந்து ஆலோசனை செய்து, இவ்வழக்கத்தை விரைவில் வேரறுப்பது அத்தியாவசியமாகும்.

அ. மாதவையர்.